# ஆண்டு மலர்








## அனுபவப் பகிர்வு

2015 - 16



புதுச்சேரி
ஆசிரியர் வட்டம்

Azim Premji Foundation

# உள்ளடக்கம்


**தமிழ்** **ப.எண்**

1. கலைவாணர் பாடத்தில் கற்றலும் கற்பித்தலும் 7
2. கல்விச் செயல்பாடுகளில் பெற்றோர்... 12
3. வகுப்பறைப் பொறுப்புகள் ஏற்படுத்தும் கேள்விகள் 17
4. கற்றல் கற்பித்தலில் மேம்பாடு 22
5. வகுப்பறை வளங்களும் மாணவர் கற்றலும் 28
6. வாருங்கள் விருப்பத்துடன் - மகிழ்வுடன் வாசிக்க 34
7. கற்றலில் கற்றல் கருவி - செயல்பாடு மற்றும் உரையாடல் 40
8. மாற்றம் ஒன்றே மாறாதது 46
9. வகுப்பறை நாட்குறிப்பு 53
10. நண்பர்களாவோம் -கற்றலை இனிமையாக்க 58

**ஆங்கிலம்**

11. சூழல்சார் டிஷிட்டல் வளங்களை நோக்கி மொழி வகுப்பறை 62
12. கற்றலை மேன்படுத்துவதில் இசையும் நடனமும் 65
13. காட்சி பொருட்களின் வாயிலாக வாசித்தலை மேன்படுத்துதல் 69
14. புலன் உணர்வு மூலம் கற்றல் 73
15. சூழலில் இலக்கணம் 78
16. கடிதம் எழுதுதல்- ஒரு இழந்த கலை 83

**சுற்றுச் சூழ்நிலையியல்**

17. ஆய்வறிக்கை - நீர் சுழற்சியும் நீர் பாதுகாப்பும் 87
18. தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குச் சூழ்நிலையியல் பாடம் 90
19. வெற்றியின் இரகசியம் 96

**கணிதம்**

20. 2ஆம் வகுப்பில் வடிவமைப்புகளை கற்பித்தல் 100
21. மனுபுலேடிவ்களைப் பயன்படுத்தி 2ஆம் வகுப்பில் கழித்தலைக் கற்பித்தல்- ஓர் ஆய்வறிக்கை 105
22. 5ஆம் வகுப்பில் பெருக்கல் அல்கொரிதம் மீது செயலாராய்ச்சி- ஓர் ஆய்வறிக்கை 111

# Table of Content


**Tamil** Page No.

1. Teaching and learning in the lesson kalaivanar 7
2. Parents in school activities 12
3. Questions raised by classroom responsibilities 17
4. Improvement in teaching-learning 22
5. Classroom resources and students learning 28
6. Come with desire- to read happily 34
7. Change is unchangeable 40
8. Learning resource, activity and dialogue in learning 46
9. Classroom diaries 53
10. Let us be friends- to make learning nice 58

**English**

11. Towards contextual digital resources for language class 62
12. Use of music & dance to enhance learning 65
13. Enhancing reading skills through visual medium 69
14. Learning through sensory perception 73
15. Grammar in context 78
16. The lost art of letter writing 83

**EVS**

17. Case study : Linking water cycle to water conservation 87
18. Environmental studies for primary class students 90
19. Secret of Success 96

**Maths**

20. Case Study on teaching subtraction using math manipulative 100
21. Teaching Pattern in Grade 2 105
22. Case study - Action Research on multiplication algorithm in grade 5 111

# Foreword



**Thiru L. KUMAR**
**Director of School Education, Puducherry**

## Thisaimaani – A Revolution

In the Indian culture, teachers have always been highly revered and considered next to God. When the world debates the need to shift from 'learning by rote' to 'learning by doing', India has from time immemorial set examples of 'learning by living'...where the teaching method was 'teaching by living'. In those times, teachers often met to discuss various subjects and enrich their knowledge.

In the last few decades, the teacher community in Pondicherry did not have access to forums for organized and healthy interactions among themselves to develop their professional competencies and ethics. While there are plenty of stages for career upliftment, there aren't many forums for professional improvement.

Not just I, but every citizen of Pondicherry is grateful to Azim Premji Foundation for creating a stage for teachers to interact, collaborate, contribute, and commit – to the cause of enriching their professional competence and rise from the status of a 'teacher' to the status of a 'Guru'.

'Thisaimaani' - the bi-monthly magazine is a trend setter, a revolution in school education in Pondicherry. It carries a lot of lesson ideas, literature reviews, classroom try-outs, reflections and case studies contributed by teachers. The magazine reaches all the government schools in Pondicherry every two months, along with a set of TLMs for that issue. Thisaimaani institutionalizes the teacher's quest for professional development.

'Thisaimaani' shows a ray of hope for improving the quality of school education. Thisaimaani means 'direction finder' - the teaching community is now eager to be a participant in this activity. Our culture emphasizes 'hope' as the best means to achieve anything. Only 'endless hopes' can avoid 'hopeless ends'. I hope that this teaching community will lead the society in creating its leaders who will be the 'Thisaimaani' not only for this country, but for the entire world.

*Lead, Kindly Light, amidst the encircling gloom – Cardinal Newman*

# முன்னுரை

ஒரு தனிமனித வாழ்வில் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துவதன் மூலம் சமுதாயத்தில் ஒரு மாற்றத்தை உருவக்குவதில் ஆசிரியரின் பங்கு இன்றியமையாத ஒன்றாகிறது. அரசு பள்ளி ஆசிரியர்கள் சமுதாயத்தில் பின்தங்கிய மாணவர்களை மேம்படுத்துவதாலும் அவர்களின் சூழலையும் கடந்து அவர்கள் அடையவேண்டிய கற்றல் திறன்களை அடையச் செய்வதினாலும் சமுதாய மாற்றத்தில் அவர்களின் பங்கு மேலும் மகத்தானது. புதுச்சேரி ஆசிரியர் வட்டம், அனைத்து குழந்தைகளுக்கும் தரமான ஒரு கல்வியை அளிப்பதில் ஆர்வமுள்ள ஆசிரியர்கள் ஒன்றிணைந்த ஒரு தன்னார்வ குழுவாகக் கடந்த ஆண்டு (2015) ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. இக்குழு ஆசிரியர்கள் ஒன்றிணைந்து திட்டமிடுதல், கற்பித்தல் வளங்களைத் தயாரித்தல், வகுப்பறை செயல்பாடுகளைப் பிரதிபலித்தல், குழுவாகக் கற்றல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள முடிவெடுத்துள்ளனர்.

இவ்வமைப்பில் ஏறக்குறைய 45 ஆசிரியர்கள் உள்ளனர். அவர்கள் தேவைப்படும் போது ஒன்றுகூடித் தங்களின் கற்பித்தல் நோக்கங்கள், கற்பித்தல் உக்திகள், வகுப்பறை அனுபவங்கள், எதிர்கொண்ட சவால்கள், அவற்றைக் கையாண்ட விதங்கள் போன்றவற்றை விவாதிப்பர். ஆசிரியர்கள் ஒன்றாகச் சேர்ந்து பங்கேற்கும் செயல்களாவன:

**திட்டமிடுதல்**

- கலைத்திட்டம், பாடக்கருத்துக்கள், பாடத்திட்டங்கள், செயல் திட்டங்கள், கற்றல் செயல்பாடுகள், மதிப்பீடு முதலானவற்றை விவாதித்தல்
- ஒன்றாகக் கூடி வகுப்பறை வளங்களை உருவாக்குதல்
- வள முகவர்கள் மற்றும் நிபுணர்களுடம் கலந்துரையாடல்

**பகிர்தல்**

- கற்றல் செயல்பாடுகளையும் கற்றல்-கற்பித்தல் வளங்களையும் தங்கள் வகுப்பறையில் செய்துபார்த்தல்.
- வகுப்பறை அனுபவங்களை எழுதியோ, புகைப்படங்களாகவோ அல்லது வீடியோக்களாகவோ பதிவுசெய்தல்.

**செயல்படுத்துதல்**

- வகுப்பறை அனுபவங்களைச் சக ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்
- தாங்கள் பயன்படுத்திய திறன்மிக்க சில கற்பித்தல் முறைகளை விவாதித்தல்.
- தாங்கள் வகுப்பறையில் எதிர்கொண்ட சிக்கல்கள், அவற்றைக் கையாண்ட விதங்கள் பற்றியும் கலந்துரையாடுதல்.

**பிரதிபலித்தல்**

- ஆசிரியர் நாட்குறிப்பு, பாடச் செயல்பாடுகள், செயல் திட்டங்கள், கற்றல்-கற்பித்தல் வளங்கள் மற்றும் பிரதிபலிப்புகள் போன்றவற்றை எழுதுங்கள்.
- ஆசிரியர் சஞ்சிகை (magazine), வகுப்பறை வளப்பை, ஆசிரியர் வளைதளம், ஆசிரியர் வள மையங்களில் நிகழும் பயிற்சிப்பட்டறைகள் போன்றவற்றின் வாயிலாக த் தங்களின் அனுபவங்களையும் படைப்புகளையும் பகிர்ந்து கொள்ளலாம்

கடந்த ஆண்டு இந்த ஆசிரியர்களுக்குக் கிடைத்த வகுப்பறை அனுபவங்களின் தொகுப்பே ‘பிரதிபலிப்பு’ என்பதாகும். ஆண்டு முழுவதும் ஆசிரியர்கள் பலவிதமான பாடங்களுக்குக் கற்பித்தல் வளங்களை உருவாக்கியதோடு மாணவர்களின் வளர்ச்சியிலும் செயலாற்றியுள்ளனர். அவர்கள் கையாண்ட கற்பித்தல் முறைகள், உக்திகள், தீர்வுகாண முயன்ற சிக்கல்கள் மற்றும் வகுப்பறை அனுபவங்களின் பிரதிபலிப்பு போன்றவைகளே இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்தப் பிரதிபலிப்புகள் வாசிப்பதற்குச் சுவாரசியமாகவும் மற்றவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையிலும் அமையும் என்று நம்புகிறோம்.

மகிழ்ச்சியான வாசித்தல்! மகிழ்ச்சியான கற்பித்தல்!

திசைமானிக் குழு

# Introduction

The role of a teacher is a critical one, with far reaching consequences on the lives of an individual and through them, the society. The role of teachers in government schools is even more critical – as they cater to the most underprivileged section of society, the responsibility on them is even higher – to ensure that children get a chance to achieve their potential not limited by the circumstances they are born in. The Puducherry teachers' circle was started in April last year as a voluntary group of teachers, passionate about the cause of quality education for all children. This group decided to embark on a journey of collaborative planning, resource development, self-reflection and learning.

Close to 45 teachers worked in the Teachers' Circle last year. The Teachers' Circle meets regularly to discuss their goals, teaching ideas, share experiences from practice and participate in collective learning forums. This process can be described in the form of a four part cycle:

**Plan**

- Discuss the curriculum, subject concepts, lesson plans, projects, teaching ideas, and assessments.
- Collaboratively develop resources for the classrooms.
- Interaction with resource agencies and experts

**Try**

- Try the teaching ideas and resources in your classroom.
- Document your experience using written, photo and video documentation.

**Reflect**

- Share classroom experiences with peers.
- Discuss teaching methods that you found effective in your class.
- Bring in your challenges and exchange ideas with others.

**Share**

- Write your teacher diaries, lesson ideas, projects, teaching learning resources and reflections.
- Share them with teachers across the district through: Teachers magazine; resource kit; teachers' website and workshops at teacher resource centers

'Reflections' is a compilation of the experiences of these teachers from their work last year. Through the year, teachers have developed teaching resources on different topics and worked on different areas of student development. In this compilation, they highlight one issue they have tried to address, the strategies and methods they have tried and their reflections from this experience. We hope these reflections will make interesting reading and trigger new ideas for others as well.

Happy reading! Happy Teaching !

Team Thisaimaani

# கலைவாணர் பாடத்தில் கற்றதும் கற்பித்ததும்



நல். கருணாநிதி
ஆரம்பப் பள்ளி பெருங்களூர்

ஆசிரியர்கள்: 12

மாணவர்களின் எண்ணிக்கை: 282

கடந்த ஆண்டு அனந்தபுரத்தில் பணியாற்றிய நான் 'வாய்வழி உத்தரவில்' ஏம்பலத்தில் ஐந்தாம் வகுப்பில் பணியாற்றினேன். இங்கு 12 ஆசிரியர்களும் 82 மாணவர்களும் இருந்தனர். விவசாயம் அதிகம் உள்ள கிராமம். பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்கள் அரசு பள்ளியில் அதிகமாகப் படிக்கின்றனர். 5-ஆம் வகுப்பு ஆசிரியராக நான் பணியாற்றினேன். தலைமை ஆசிரியர் என் எல்லா பரிசோதனை முயற்சிக்கும் உதவியாக இருந்தார்.

என்னைப் பற்றி சொல்வதென்றால், சமூக மாற்றத்திற்கான பல்வேறு நிகழ்வுகளில் இணைந்து செயல்படுபவன். கல்வித்தொடர்பான விஷயங்களைக் கற்பதிலும் அறிந்துகொள்வதிலும் ஆர்வம் உண்டு. கலை, இலக்கியம், கல்வி போன்றவை மனிதனை செழுமைப் படுத்தும் என்பதால் அவற்றில் ஈடுபாட்டோடு இயங்கிவருகிறேன். கல்விக்கோட்பாடுகளும் அதிலுள்ள அரசியலையும் இணைத்துப் புரிந்துகொள்வது எனக்குப் பிடித்தமானது.

**புதுச்சேரி ஆசிரியர் வட்டத்தில் சேருவதற்குக் காரணம்**

முறையான கற்பித்தலில் என்னை ஈடுபடுத்திக் கொள்வது என் வேலையில் நிறைவைப் பெற உதவியாக இருக்கும். வருங்கால மாணவ சமூகத்திற்கு கல்வி கற்றுக்கொடுக்க நான் கல்விக்கோட்பாடுகளையும் கல்வியில் நடந்துவரும் நவீன முயற்சிகளையும்

அறிந்து கொள்ளப் புது புது விஷயங்களைக் கற்றுக்கொள்ளும் பொழுது என் பணி சுலபமாக சுவாரசியமாக இருக்கிறது.

கடந்த ஆண்டு என் வகுப்பறையைப் பற்றி கூறுவதற்கு முன் அதற்கு முந்தைய ஆண்டு மூன்று மாத முயற்சியில் ஒன்றாம் வகுப்புக் குழந்தைகளை வாசிப்பில் ஈடுபடுத்த முடிந்தது. இது எனக்கு பல்வேறு பரிசோதனை முயற்சிகளுக்கு வாய்ப்பளித்தது. வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை எவ்வாறு செயல்படுத்தலாம் என்று ஆசிரியர்களோடு அமர்ந்து திட்டமிட்டு வகுப்பறையில் செயல்படுத்திப் பார்த்தேன். திருக்குறளுக்கு நாடகம், கலைவாணருக்கு சினிமா, மாணவர்களுடன் உணவுத்திருவிழா கொண்டாட்டம், களப்பயணத்திற்கு தொழிலாளர்களையும் வயல் வெளியையும் தேடிச்சென்று எனது வெவ்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தினேன்.

நான் பங்கேற்ற புத்தகத்திறனாய்வு மற்றும் சினிமாக்கள் கல்விப் பற்றிய கோட்பாடுகள் அனுபவங்கள் என என் கல்விப்பணியில் புலமை பெற உதவியாக இருந்தது. கற்பித்தல் தொடர்பான பயிற்சிகள் மற்றும் கல்வி சார்ந்த உரையாடல்கள் எனக்குப் பிடித்திருந்தது.

## அனுபவப் பகிர்வு

**கலைவாணர் பாடத்தில் கற்றதும் கற்பித்ததும்**

இவ்வாண்டில் நான் பல பாடங்களுக்கு பாடத்திட்டம் தயாரித்து வகுப்பறையில் கற்பித்தலில் ஈடுபட்டிருந்தேன். இருந்தபோதும் இப்பாடத்தை உங்கள் முன் பகிர்ந்துகொள்வதற்கு எடுத்துக் கொண்டதற்குக் காரணம், இப்பாடத்தின் மூலமாக நான் கற்றது அதிகம். அதனால் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்த பொழுது நிறைவாக இருந்தது. நான் கற்றதையும், மாணவர்கள் கற்றதையும் இணைத்துப் பார்க்கும் ஒரு வாய்ப்பாக கருதுகிறேன். இப்பாடத்தயாரிப்பில் ஈடுபட்டபொழுது கலைவாணர் பற்றிய வெவ்வேறு தகவல்களை ஆசிரியனாகிய நான் கற்றேன். அவற்றை கீழ்க்கண்டவாறு பட்டியலிடலாம்.

- நகைச்சுவை பற்றி அறிதல். வழக்கமாக நமது தமிழ்ப் புழக்கத்தில் நகைச்சுவை என்ற வார்த்தை இன்றைய தமிழ் சினிமாவின் தாக்கம் என்ற நிலையில் மாறியிருக்கிறது. ஆனால் நகைச்சுவை, நையாண்டி, கோமாளித்தனம், கிண்டல்... போன்ற ஒத்த சொற்கள் இருப்பதையும் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு அர்த்தங்கள் இருப்பதையும் புரிந்துகொள்ள முடிந்தது. இப்புரிதல் கலைவாணர் அவர்களது மொழி மற்றும் சினிமாக்கள் இச்சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை உணர முடிந்தது. அவர் ஒரு குறிப்பிட்ட மூட நம்பிக்கையை எடுத்துக்கொண்டு அதை கிண்டலோடும், நையாண்டியாகவும் இச்சமூகத்தின் முன் வைக்கும் விதம் அற்புதமாக இருந்தது. அதிலும் அரசியல் நையாண்டித் தனமும், கோமாளித்தனமான நடிப்பும்... என திராவிட வரலாற்றை உற்று நோக்கிப் பார்க்க உதவியது.

- அடுத்தது கலைவாணரின் மொழி. மொழி ஆர்வமுடைய ஆசிரியராகிய எனக்கு அவரது அடுக்கு மொழி, பகுத்தறிவுக் கொள்கையை மொழியில் கொண்டுவரும் விதம், பழமையிலிருந்து புதுமைக்கு மக்களை அழைத்துச் செல்லும் விதம் என பிரமிக்க வைத்தது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் பாடத்தில் இடம் பெற்ற பாடலுக்கு அடுத்தடுத்த பத்தியை எழுதிப்பார்த்து என் மொழியறிவை சோதித்துக் கொண்டேன்.

- அடுத்தது குழந்தைகளுக்குக் காட்டுவதற்காக கலைவாணரின் படங்கள் சிலவற்றைத்தேடினோம். அப்பொழுது பார்த்த படங்களில் பள்ளியும், கல்வியும், கற்பிக்கும் முறையும் பரவலாகப் பார்க்க முடிந்தது. அதோடு அவரது படங்கள் சமூக மாற்றத்தை கல்வியோடு தொடர்ந்து இணைத்துக்

கொண்டே இருந்தது. மணமகள் என்ற படத்தில் விதவை திருமணம் செய்வதாகக் கதை அமைகிறது. அக்கதையில் அப்பெண் நடத்தும் பள்ளியில் குழந்தைகள் மகிழ்ச்சியாகக் கற்பிப்பதும் வித்தியாசமாகப் பாடங்களைக் கையாளுவதையும் காட்டுகிறார். அதே போல் மாணவர்களுக்குக் காட்டிய சினிமாவின் ஒரு பகுதியில் திங்கள், செவ்வாய்...பாடலில் இசையும், செயல்பாடும் பாடலின் மொழியும் பிரமிப்பாக இருந்தது. பாடல் வந்தால் செயல் சிரமமாக இருக்கிறது, அதை செய்ய முடிந்தால் பாட முடிவதில்லை. மாணவர்கள் அந்த பாடலை பாடிக்கொண்டே அச்செயலில் ஈடுபட்டதையும் மற்ற வகுப்பு மாணவர்களைச் செய்யும் படி கேட்டதையும் மற்றக்க முடியாத காட்சியாக இருந்தது.

- பாடத்திட்டம் தயாரிக்கும் பொழுது எங்கள் உரையாடலில் நாகேஷ் சாப்ளின் போன்றவர்கள் தோன்றினர், அதனால் அப்படங்களையும் பார்த்தோம். சாப்ளினின் அரசியல் நகைச்சுவை உலகம் அறிந்தது. நம் ஊர் கலைஞனை உலகக் கலைஞனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பை எனக்கு அளித்தது. நானே மாணவனாகிப் போனேன்.

எனக்கு என் முன் இருந்த பயமெல்லாம் இவ்வளவு சிக்கலான பாடத்தை 5 ஆம் வகுப்பிற்கு நடத்த முடியுமா? என்ற கேள்வியை ஏற்படுத்தியது. ஆனால் அதை சிறப்பாக செய்ய முடிந்தது.

**கற்றுக்கொடுத்தது**

- சாப்ளின் படமான “சர்கஸ்” திரையிடப்பட்டது. படம் பார்த்த அனுபவத்தைக் கேட்டபொழுது “நன்றாக இருந்தது, ஜோக்காக இருந்தது, ஜோக்கர் நல்லா நடிச்சார்,பெண்ணுக்கு உதவி செஞ்சார்... என்று அடுக்கிக் கொண்டே போனார்கள்.

- மாணவர்களுக்குக் கலைவாணர் நடித்துப் பாடிய பாடல்கள் திரையிடப்பட்டன. சிரிப்புப் பாடல் மற்றும் சிவகவி படத்தில் செயலுடன் கூடிய திங்கள், செவ்வாய்... என்ற நகைச்சுவை பாடல் இரண்டையும் போட்டுக்காட்டினேன். சிரிப்புப்பாடல் பாடத்திலும் இடம் பெற்றதால் அவற்றை அடுத்தடுத்தும் போட்டுக் கேட்டோம்.



- சாப்ளின் மற்றும் கலைவாணர் படங்களைப் பார்த்துமுடித்திருந்த அவர்களிடம் இரண்டையும் ஒப்பிட்டுப் பேசும்படி கேட்டேன். அவர்கள் சினிமாவின் தொழில் நுட்பம் பற்றியெல்லாம் பேசினர். அவர்களிடம் இந்தப் படம் எப்படி இருந்தது? அந்தப்படம் எப்படி இருந்தது என்றேன். படத்திலுள்ள காட்சியை வரையும்படி கேட்டேன்.

| சாப்ளின் | கலைவாணர் |
|---|---|
| • லவ் சீன் வந்துச்சி | • நடித்தார், பேசினார், பாடினார்... |
| • நடித்தார் ஆனால் பேசவில்லை சர்க்கஸ் நிஜம்மாக இருந்தது. | • தமிழில் இருந்தது. |
| • படம் பேசவில்லை | • சிரிப்பாக இருந்தது. |
| • ஆங்கிலத்திலிருந்தது. | • ஓவரா நடிச்சார். |
| | • புடவை கட்டியிருந்தனர். |

- சார்லி சாப்ளின் படம் பார்த்தப்ப ஆங்கிலத்தில் எழுத்து வந்துதுல்ல, லவ்வுன்னு சிரிச்சிகிட்டே படித்தான் சார். என்றான். ஆங்கிலப் படம் அதிலும் குறிப்பிட்ட காரணத்திற்காக திரையிடும்பொழுது நாம் எவ்வளவு கவனமாக இருக்கிறோமோ அந்த அளவு குழந்தைகளையும் ஈடுபடுத்த முடிகிறது. அவன் கூறியதை உடனே கரும் பலகையில் எழுதினேன். அதன் பின் பொறுப்பாக செயல்பட்டனர்.

**இருவர் படங்களிலுமிருந்த ஒற்றுமைகள்**

- நம்மை சிரிக்க வைத்தது
- சிந்திக்க வைத்தது
  - பழைய சில விஷயங்களை தெரிந்துகொள்ள உதவியது என்றனர். நான் எதிர்பார்த்த விஷயங்களை சுலபமாகச் சொன்னது போலிருந்தது.



- பாடப்புத்தகத்திலுள்ள பாடத்தை நடத்துவதற்காகக் கரும்பலகையில் கலைவாணர் படத்தை வரைந்ததோடு, அவரது வாழ்வியல் வரைபடத்தைக் குறிப்புகளாக எழுதினேன்.
  - மாணவர்கள் பாடப் புத்தகத்தை எடுத்து முதல் பத்தியை மவுனமாக வாசிக்கச் சொன்னேன்.
  - வாசித்ததைப்பற்றி நான் குறிப்பிடுவேன் மற்றொரு மாணவன் விளக்குவான். அதில் நான் சேர்க்க விரும்பும் வேறு விஷயங்களைச் சேர்த்தேன். இப்படியாக ஒரு பகுதியை முடித்துவிட்டோம்.
  - கலைவாணர் எழுத்தாளர்களுக்கு ஆற்றும் உரை முக்கியமானதும் கடினமானதும் ஆகும். அதில் “மை” வல்லமை, உண்மை... என தொடர்ந்து வரும். அதில் வந்துள்ள அனைத்து “மை” வார்த்தைகளையும் கரும்பலகையில் எழுதினேன். அவற்றை அவர்கள் புரிந்து கொண்டு அவ்வார்த்தைகளை மனதில் அர்த்தத்துடன் பதிய வைத்தபின் வாசிப்பைத் தொடர்ந்தோம்.
  - அதேபோல் பாடல் பகுதியை விளக்கிப் பின் காட்சியாகப் பார்த்து பின் படித்தோம்.

- **செயல்பாடுகள்**:

1) நான் குறிப்பிட்ட எழுத்துக்களைக் கரும்பலகையில் எழுதினேன். அதற்கான அர்த்தங்களை அவர்கள் எழுதினர்.
2) பாடத்திலுள்ள பாடலுக்கு ராகம் அமைத்தனர். அவர்கள் ஒவ்வொரு குழுவாக வெவ்வேறு ராகத்தில் பாடியது நன்றாக இருந்தது.
3) அவர்களுக்குச் சித்திரக்கதைக்கான படங்கள் வழங்கினேன். அதற்கான கதைகளை எழுதினர். கதையில் நகைச்சுவையைக் கொண்டுவரவேண்டுமென நான் எதிர்பார்த்தது கொஞ்சம் அதிகம்தான்.
4) பாடப் பகுதியைப் பிரித்துக் கொடுத்து மேடையில் பேசுவது போல் பேச வேண்டுமென்றது கொஞ்சம் அதிகமாக இருந்தது.

- எங்கள் வகுப்பறையில் கலைவாணர் விழா ஒன்றை நடத்தினோம். அதில் எங்கள் தலைமை ஆசிரியரும் லகலந்து கொண்டார். அவ்விழாவில் :

- ஒரு குழு மாணவர்கள் பாடத்திலுள்ள பாடலைப் பாடினர்.
- இரு மாணவர்கள் “கலைவாணர்” என்ற தலைப்பில் பேசினர். பாடத்தில் பேசியுள்ள பகுதியை ஒருவரும் கலைவாணர் பற்றி ஒருவரும் பேசினர்.
- கலைவாணரின் திரைப்படக் காட்சி திரையிடப்பட்டது.
- தலைமை ஆசிரியர் அவர் சிறு பிள்ளையாக இருந்தபொழுது பார்த்த கலைவானர் படங்கள் பற்றி பேசினார்.

**இவ்வனுபவம் உயர்ந்த கருத்துக்களையும், மறைபொருளுடைய நகைச்சுவையையும் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க முடியும் என்பதை உணர்த்தியது. அதோடு ஆசிரியராகிய நாம் எவ்வளவு கற்கிறோமோ அது கற்பித்தலுக்கு உதவியாக இருக்கும். கற்பித்தலில் கற்றலின் பங்கு பெரிதாக உள்ளது.**

**குறிப்பு:**

- குழந்தைகள் கலைவாணர் பற்றி மகிழ்ச்சியாகக் கற்றது எனக்கு நிறைவாக இருந்தது. சிறுவர்களுக்குப் பெரும் தத்துவங்களைக் கற்றுக்கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை வந்தது.
- சினிமா அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் பாடம் அலாதியானது என்பதை ஆணித்தரமாக உணர்த்தியது. இச்சமூகத்தில் எவ்வளவுக்கெவ்வளவு மோசமான படங்கள் வருகிறதோ அதைவிட ஐந்துமடங்கு அதிகமாக கலைவாணர் போன்றோர் படம் வரும்பொழுதுதான் நல்ல விஷயங்களை மீட்டெடுக்க முடியும் என்பதை உணர்ந்தேன். கல்வியில் காட்சி அதிகப்படுத்தப் பட வேண்டுமென்பதை கலைவாணர் பாடம் எனக்கு உணர்த்தியது.
- பாடல், கதை எழுதுதல், சினிமா காட்டல்... என நான் பயன்படுத்திய கற்றல் கற்பித்தல் முறைகள் எனக்கு நிறைவை அளித்தது. உங்களுடன் பகிர்ந்துகொள்வதும்தான்.



# கல்விச் செயல்பாடுகளில் பெற்றோர்...

கார்த்திகேயன்
அரசு ஆரம்பப்பள்ளி
நரம்பை

கடந்த மூன்று ஆண்டுகள் கரையாம்புத்தூரில் உள்ள ஆரம்பப்பள்ளியில் பணியாற்றினேன். இப்பள்ளியில் பலதரப்பட்ட பின்தங்கிய வகுப்பினைச் சார்ந்த குழந்தைகள் படித்தனர். பள்ளியில் பொது சமையலறை இருக்கிறது. ஒரு காலத்தில் 600 குழந்தைகள் இருந்த இப்பள்ளியில் தற்பொழுது 314 குழந்தைகள் படிக்கின்றனர்.

குழந்தைகளின் முழு வளர்ச்சியில் அக்கறையோடு ஈடுபடுவது எனக்கு பிடித்தமானது. நல்ல புத்தகங்கள், நல்ல மனிதர்கள், நல்ல நிகழ்வுகள் என தேடிச் செல்லும் வழக்கம் உண்டு. கிரிக்கட் மற்றும் பேட் மிட்டன் விளையாடுவதில் நேரம் செலவழிகிறது. பேபிசாரா என்ற குழந்தைகள் அமைப்பிற்குத் தொடர்ந்து பாடம் சொல்லிக்கொடுப்பதற்கென்று நேரம் ஒதுக்க முடிகிறது. இலக்கியம் மற்றும் சமத்துவத்திற்கான செயல்பாடுகளில் என்னை இணைத்துக் கொள்வேன். கல்விச்செயல்பாடுகளில் பெற்றோர்களை இணைப்பது என்பது இயல்பான ஒன்றாக இருக்கும்பொழுது பலவிசயங்களைச் சாதிக்கமுடிகிறது. குழந்தைகளுடன் பேசும்பொழுது நிறைய கற்றுக்கொள்கிறேன்.

கல்வி பற்றிய உரையாடல்களுக்கான ஒரு வழியாகவும், பாட நுட்பங்களை புரிந்துகொள்ள வாய்பாகவும், முறையான திட்டமிடல் மற்றும் செயல்பாடுகளுக்கான உத்திகளைத் தெரிந்து கொள்ளவும் புதுச்சேரி ஆசிரியர் வட்டம் அமைந்திருந்தது.

**சென்ற ஆண்டு நான் சிறப்பாக செயல்படுத்தியவை:**

தமிழ் கற்பித்தலில் வெவ்வேறு திறன்வளர்ச்சி சார்ந்த செயல்பாடுகளில் ஈடு பட முடிந்தது. வாசிப்பு நிலைக்கேற்ப குழந்தைகளைப் பிரித்து உதவும் பொழுது குழந்தைகளிடம் முன்னேற்றத்தைப் பார்க்க முடிந்தது. எஸ் எஸ் ஏ புத்தகங்களைக் கொண்டு தொடர் வாசிப்பு முயற்சியில் ஈடுபட்டேன். நவோதயா தேர்வுக்கான பயிற்சி, பெற்றோர்களைக் கல்விச்செயல்பாடுகளில் இணைத்தல் என சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். குழுவாகப் பாடத்திட்டம் தயாரித்தோம் பின் அவற்றை வகுப்பறையில் செய்தேன். திசைமானியில் தொடர்ந்து எழுதுகிறேன். வித விதமான பயிற்சித்தாள்களைத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்கினேன். கல்வி தொடர்பான சிறந்த புத்தகங்கள், சினிமாக்கள், கதைகளை வாசித்தல் மற்றும் அதுதொடர்பான விவாதங்களில் ஈடுபட முடிந்தது.

## அனுபவப் பகிர்வு

**பெற்றோர்களைக் கல்விச்செயல்பாடுளில் ஈடுபடுத்துதல்**

நான் காரைக்காலில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது என் வகுப்பறைக்கு இளமதி என்ற பெண் குழந்தை குளிக்காமல், தலை சீவாமல் வருவது வழக்கம். முதல் வகுப்புக் குழந்தை என்பதால் அதைத் திட்டவும், அறிவுரை சொல்லவும் முடியாமல் இருந்தது; ஆனால் தொடர்ந்து அப்படி வரும் ஒரு குழந்தையை ஏற்றுக்கொள்வதற்கும் ஒரு தைரியம் தேவைப்படுகிறது. இச்சூழலில் என் எதேச்சையான முடிவின் மூலம் இளமதியின் வீட்டிற்குச் சென்றேன். இளமதிக்கு அம்மா இல்லை அப்பா இல்லை. கண் தெரியாத பாட்டியுடன் வசித்து வந்தாள் அந்தச் சின்னப் பெண். அக்காட்சி மற்றும் அவ்வனுபவம் பள்ளியின் நிகழ்வுகளிலும் குழந்தையின் கற்றலிலும் பெற்றோரின் பங்கு மற்றும் குழந்தையின் பின்னனணியினை மனதில் கொள்வதை வழக்கமாகக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தியது. அதன் பிறகு முடிந்தவரை குழந்தைகளின் பெற்றோர்களைச் சந்திப்பது மற்றும் வகுப்பறை விசயங்களிலும் பெற்றோர்களை ஈடுபடுத்துவது என்பதை வழக்கமாகக் கொள்வது என முடிவு செய்து செயல்படத்துவங்கினேன். இவ்வுணர்தல் கல்வியின் நோக்கத்தை மனதில் நிறுத்திக்கொள்ள ஏதுவாக இருந்தது. இச்சமூகப் பிண்ணனியிலிருந்து வரும் குழந்தைகள் சமூக மாற்றம் மற்றும் முன்னேற்றத்தை அடைவதற்குக் கல்வி உறுதுணையாக இருக்க வேண்டும் என நாம் ஆசைப்படுகிறோம். அப்பொழுது அதை வெறும் புத்தகமும் மதிப்பெண்ணும் செய்து விடமுடியாது. குழந்தையின் சமூகப்பின்னணிக்கேற்ப கற்பித்தல் அமைவது அவசியம். பின்னணி என்பதை வெவ்வேறு அம்சங்களாகப் பிரித்துப் பார்த்து செயல்பட வேண்டியுள்ளது.

அவர்களுக்கான பொருளாதாரச் செயல்பாடுகளை அரசு மேற்கொள்கிறது. அதுபோல் தினச் செயல்பாடுகளில் குழந்தையின் பெற்றோர்களை இணைப்பது நம் நோக்கத்தை நோக்கிப் பயணிப்பதாக உணரமுடிகிறது. என் அனுபவம் பள்ளி மற்றும் வகுப்பறைச் செயல்பாடுகளில் பெற்றோர்கள் இணையும் பொழுது அதிலும் குறிப்பிட்ட செயல்பாடுகளுடன் இணைக்கும்பொழுது கல்விச்செயல்பாடு புதுமையடைகிறது. இருந்த பொழுதும் தனியார் கல்விமுறையில் பெற்றோர்களைப் பயன்படுத்துவது போல் இல்லாமல் பார்த்துக் கொள்வதும் முக்கியம்.

கரையாம்புத்தூர் பள்ளியில் கடந்த 3 ஆண்டுகளாகப் பணியாற்றினேன். எல்லோரும் 600 குழந்தைகள் படித்த பள்ளி இன்று பாதியானது என ஆதங்கப்பட்டுக்கொண்டே இருந்தனர். தனியார் பள்ளியின் வருகை மட்டும் காரணமல்ல பள்ளியின் செயல்பாடுகளும் அதற்குக் காரணமாக இருந்ததை உணர்ந்தேன்.

ஆசிரியர்களான நாங்கள் அமர்ந்து அதைப் பற்றி அடிக்கடி பேசுவோம். நன்றாகப் பாடம் நடத்துவது, பள்ளி மேலாண்மையைத் திறம்படச் செய்வது, பெற்றோர்களுடன் நல்ல உறவு வைத்திருப்பது என வெவ்வேறு விதமான செயல்பாடுகளில் ஈடுபட்டோம். அதில் என்னுடைய பங்கு சிறப்பாக இருந்ததாக நான் கருதியது பெற்றோர்களுடனான உறவு. பள்ளியை நாங்கள் மாற்றிக்காட்டியதன் விளைவாக நாங்கள் பெற்ற பலன் கடந்த ஆண்டு 109 மாணவர்கள் பள்ளியில் சேர்ந்தனர். இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான மாணவர் சேர்க்கை என்பது இக்காலத்தில் எங்களுக்கே ஆச்சர்யமாக இருந்தது. இதில் 30 மாணவர்களுக்கு மேல் தனியார் பள்ளியிலிருந்து வந்தவர்கள். அதற்குக் காரணம் நான் மட்டும் என்று சொல்லமுடியாது. ஆசிரியர்களின் வெவ்வேறு செயல்பாடுகள். என் பங்கு பள்ளியிலுள்ள அனைத்து வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களுடனும் உரையாடுதல் மற்றும் தேவைப்படும் சமயங்களில் வீடுகளுக்குச் செல்லுதல் என்று சொல்லலாம். இதனால் என் வகுப்பில் பாடங்களைச் சுலபமாகக் கற்றுக்கொடுக்க முடிந்தது.

பள்ளியில் படிக்கும் குழந்தைகளைப் போலவே குழந்தைகளின் பெற்றோரும் முக்கியமானவர்கள். இது பெரிய ஆராய்ச்சியின்மூலம் நான் புரிந்துகொண்டதல்ல. என் அனுபவத்தின் மூலமும், தினசரி செயல்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களை உற்றுப் பார்த்துப் புரிந்துகொண்டது தான்.

தினமும் காலையில் பள்ளிதுவங்குவதற்கு அரை மணி நேரம் முன்னதாக பள்ளியில் நிற்பது இருப்பது வழக்கம். பள்ளி வாசலில் நின்றுகொண்டு குழந்தைகளுக்கு வணக்கம் சொல்வேன். குழந்தைகளைப் பள்ளியில்விட வரும் பெற்றோர்களுக்கு வணக்கம் சொல்வதும் குழந்தைகள் பற்றி எதையாவது அவர்களுடன் பேசுவதும் எனத் துவங்கினேன். கையில் பிள்ளையைப் பிடித்துக்கொண்டு வரும் அம்மாக்கள், சைக்கிளில் கொண்டு வந்து இறக்கும் அப்பாக்கள் என ஏறக்குறைய 25 முதல் 30 பெற்றோர்களைத் தினமும் பார்க்கமுடியும். தினமும் வரும் பெற்றோர்கள், போகும் வழியில் வரும் பெற்றோர், குழந்தையை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக வரும் பெற்றோர்கள் என ஏதோ ஒரு காரணத்திற்காக அவர்கள் பள்ளிக்கு வருகின்றனர்.

**பெற்றோரை அணுகும் முறை:**

நாம் பேசத்துவங்கும்பொழுது அவர்கள் பல விஷயங்களைப் பற்றி நம்மிடம் பேசத்தயாராக இருக்கின்றனர்.

குழந்தைகளுக்காக வாழும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைத் தங்களை விட உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்பதைக் கொள்கையாகவோ, ஆசையாகவோ கொண்டுநம்பியிருப்பது கல்வியைதான். அக்கல்வி ஆசிரியரால்தான் தரமுடியும் என்பதை அறிந்தவர்கள் அவர்கள்... நாம் பேசும்பொழுது அதை அவர்கள் வெளிப்படுத்தும் விதம் சொல்லி மாளாது.

“சார் எப்படியாவது எம் புள்ள படிச்சி ஒரு வேலைக்குப் போய்விட்டால், தன் தலை முறைகஷ்டம் தீர்ந்துவிடும்” என்பதுபோல்தான் அவர்கள் பேச்சு இருக்கும். அழுதுகொண்டு, தயங்கியபடி, யோசித்துயோசித்து பக்கத்தில் வந்து...

- சாமி நீங்க நல்லா இருப்பீங்க, கொஞ்சம் அவன புடிச்சி படிக்கமட்டும் வச்சிடுங்க.
- இப்படி ஒரு அடங்காத புள்ளைய பெத்து வச்சிருக்கேங்க, நல்லா அடிச்சி திருத்துங்க.
- இந்த பிள்ளைய வளக்குறதுக்காக மட்டும்தான் உயிரோட இருக்கேன்.

இது போன்று அவர்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறேன்.

அம்மா (single mother) மட்டும் வளர்க்கும் பிள்ளைகள் அதிகம் உள்ள இடம் அரசுபள்ளிதான்.

பெற்றோர்களிடம் பேசும்பொழுதும் கவனிக்கும்பொழுதும் நமக்கு இயல்பாகவே குழந்தைகள் மீது ஈடுபாடு அதிகரிக்கிறது. இப்பெற்றோர்களின் வாழ்வியல் முறைக்கும் நம் வாழ்வியல் முறைக்கும் பெரிய இடைவெளி இருக்கிறது. அந்த இடைவெளிக்கான காரணங்களை புரிந்து கொள்வது சுலபமானதுதான். அது தலையெழுத்து என்ற வார்த்தையில் அடங்குவதல்ல. அவர்களது இயலாமைக்கு நாமும் ஒரு காரணம் என்பதை உணரும்பொழுது நாம் பேசுவது வேறுமாதிரியிருக்கும்.

- உங்க புள்ளய பத்தி கவலையே படாதீங்க. ஆளா வருவது உறுதி.
- வீட்ல போயி படிச்சிக் காட்ட சொல்லியிருக்கேன். நீங்க பக்கத்துல உக்காந்து படிக்க சொல்லி கேளுங்க.
- புள்ள எழுதும்பொழுது பக்கத்துல உக்காந்து பாருங்க.

இது போன்ற சின்ன சின்ன விஷயங்களை அவர்களிடம் சொல்லும்பொழுது அதை அவர்கள் தவறாமல் செய்வதோடு அதைப்பற்றி எங்களிடமும் கூறுவர்.

இப்படியாக வளர்ந்த அல்லது வளர்க்கப்பட்ட உறவில் பெற்றோர்களின் பங்கு என்பது குறிப்பிடும் படியானதாக மாறுவதை இரண்டு உதாரணங்கள் மூலம் குறிப்பிடலாம் என்று எண்ணுகிறேன்.

**பள்ளி மேலாண்மை விஷயங்கள்:**

பள்ளி பாதுகாப்பு மற்றும் பள்ளிக்கான வசதிகள் மோசமாக இருந்தது. பள்ளிக்கூட வளாகத்தில் அமர்ந்து மது அருந்துவதும் பள்ளியையொட்டி மலங்கழிப்பதும் பொது மக்களிடம் சர்வ சாதாரணமாக இருந்தது. அதைப்பற்றி பொதுவாகப் பேசுவது என்பது எந்தப் பலனையும் அளிக்கக் கூடியதாக இல்லை. பள்ளியைச் சுற்றி சுத்தம் செய்வதில் ஈடுபட்டோம். அப்பொழுது அங்குவந்த பெற்றோர்கள் எங்களை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டனர். அவர்களே தலைமையேற்று மூன்று ஆட்களுடன் வந்து அனைத்தையும் சரி செய்து, பள்ளியை சுற்றி முள்வேலி அமைத்துக் கொடுத்துவிட்டுச் சென்றனர். அதோடு மற்றவர்கள் அச்செயலில் ஈடுபடாதவாறு இவர்களே பொறுப்பேற்று செயல்பட்டனர்.

**வகுப்பறை மற்றும் பாடச்செயல்பாடுகள்:**

- வகுப்பறை செயல்பாடுகளில் பெற்றோரை ஈடுபடுத்தும்பொழுது கிடைத்த மாற்றங்களும் மிகப்பெரியது. எங்கள் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்களை நவோதயா பள்ளிக்கான தேர்வை எழுத அனுப்புவது என முடிவு செய்து செயல்பட்டேன். அக்குழந்தைகளுக்கு அது முக்கியமான வாய்ப்பு. அது பெற்றோரின் துணையோடு செய்யும்பொழுது உரிய பலனைப் பெற முடிந்தது. படிவங்களைப் பூர்த்தி செய்வது, பாடப்புத்தகங்களைத் தாண்டியப் படிக்க உதவுவது, பள்ளி நேரத்திற்குப் பிறகு சிறப்பு வகுப்புகளை நடத்துவது என ஒவ்வொன்றுக்கும் பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியமானதாக இருந்தது. என் வகுப்பில் அனைத்துக் குழந்தைகளையுமே எழுதவைக்க வேண்டும் என்று செயல் பட்டேன். ஏறக்குறைய எல்லா பெற்றோர்களுமே அவரவர்கள் நிலையிலிருந்து உதவியதாகத்தான் சொல்வேன். ஒரு பெற்றோர் தினமும் வந்து அதைப் பார்த்து விட்டுச் செல்வார். இன்னொரு பெற்றோர், என்றைக்காவது வருவார் அவ்வளவுதான் வித்தியாசம். முதன்முறையாக என் வகுப்பில் 4 குழந்தைகள் நவோதயா பள்ளிக்குத் தேர்வானார்கள்.
- இன்னொரு சிறிய அனுபவத்தை மட்டும் சொல்ல வேண்டும். எங்கள் பாடத்தில் உணவுத்திருவிழா என்றொரு பாடம். பாடத்தின் பகுதியாக பள்ளியில் அத்திருவிழாவை நடத்தினோம். அதற்கு ஒவ்வொரு குழந்தையும் குறிப்பிட்ட சத்துள்ள உணவை எடுத்துவர வேண்டும். குழந்தைகள் உணவை எடுத்துவருவதற்குப் பெற்றோரின் ஒத்துழைப்பு என்பது அவசியம். ஒரு வேளை எதாவது



**உணவுத்திருவிழா**

ஒரு குழந்தையின் பெற்றோர் ஒத்துழைக்காவிட்டால் அக்குழந்தை தனித்து விடப்படுமே என்ற எண்ணத்தில் நாங்கள் வேறு சில விஷயங்களை யோசித்து வைத்திருந்தோம். எங்கள் எண்ணத்தைப் பொய்யாக்கும்படி அனைத்து குழந்தைகளுமே அதில் சிறப்பாக பங்கேற்றிருந்தனர். பெற்றோரின் ஒத்துழைப்பு என்பதை விட அனைத்து பெற்றோரின் ஒத்துழைப்பு எனக் குறிப்பிடுவது முக்கியமானது. அந்நாளில் ஒரு பெற்றோர் மட்டும் பள்ளியிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கொழுக்கட்டை செய்து எடுத்து வந்து எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். என் குழந்தை, எங்கள் தெரு என்ற சமூக அமைப்புள்ள அவ்வூரில் பாகுபாடுகளைக் களைத்தெறியும் நிகழ்வாகவும் இவ்வுணவுத்திருவிழா இருந்தது.

**எங்கள் தவற்றை மன்னித்த பெற்றோர்கள்:**

இறுதியாக எங்கள் தவறையே மறைக்கத்துணிந்த பெற்றோரின் அனுபவம் ஒன்றைக் கூறி முடிக்கலாம் என எண்ணுகிறேன். தரனிதரன் என்ற மாணவரை இன்னொரு மாணவர் பென்சிலால் குத்தியதில் கண்ணில் ஆழமாகக் காயம் ஏற்பட்டுள்ளது. இது பற்றி எங்கள் யாருக்கும் தெரியவில்லை. அடுத்தநாள் அவன் பள்ளிக்கு வரவில்லை. அவனுடைய சகோதரியிடம் அதைப்பற்றி விசாரித்தோம். அப்பொழுதுதான் அவ்விஷயம் தெரிய வந்தது. உடனடியாகக் கிளம்பி வீட்டிற்கு சென்றோம். அவர்களை அப்பொழுதுதான் அரவிந்த் மருத்துவமனைக்குச் சென்று வந்திருந்தனர்.

“சார் நீங்கள் அக்கறையோடு குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதை நாங்கள் பார்த்துக்கொண்டே இருக்கிறோம். அதைத் தாண்டி அவர்களுக்கு எதாவது நடப்பதை நாங்கள் குற்றமாக எப்படிப் பார்ப்பது?” என்றார். எனக்கு அசிங்கமாக இருந்தபோதும் பெருமையாகவும் இருந்தது.

**அரசுபள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தன் குழந்தை எப்படியாவது வாழ்க்கையில் முன்னேறுவான்/ முன்னேறுவாள் என்ற நம்பிக்கையில்தான் பள்ளிக்கு அனுப்புகின்றனர். ஆசிரியர்களின் கடமையும் இக்குழந்தைகளின் வாழ்க்கையை கல்வியின் மூலமாக முன்னேற்றுவதுதான். அரசுபள்ளியில் படிக்கும் குழந்தைகளிடம் நாம் நிறைய எதிர்பார்க்கமுடியாது என்பது உண்மை. அவர்கள் என்ன செய்யமுடியுமோ அதை அவர்கள் எப்படி செய்யமுடியுமோ அதைக் குறிப்பிட்டுப் பெறுவது கடினமாக இருக்காது. அதோடு அவர்கள் அதற்கான செயல்பாடுகளில் ஈடுபடத் தயாராகவும் இருக்கின்றனர் என்பதுதான் உண்மை. அதற்கு நாம் கை கொடுக்கத் தயாராக இருக்கும்பொழுது நம் பணி மேன்மை பெறுகிறது.**

# வகுப்பறை பொறுப்புகள் ஏற்படுத்தும் கேள்விகள்



த. சங்கர தேவி
அரசு ஆரம்பப் பள்ளி
அபிஷேகப்பாக்கம்

கடந்த ஆண்டு ஆதிங்கப்பட்டு நடு நிலைப்பள்ளியில் பணியாற்றினேன். என் வகுப்பில் 9 மாணவர்கள் இருந்தனர். எல் கே ஜி முதல் நான்காம் வகுப்புவரை வெவ்வேறு பாடங்களைக் கற்பித்தேன். இங்கு விளையாட்டு மைதானமும் நல்ல நிழல்தரும் மரங்களும் இருக்கின்றன.

என் வகுப்பறையில் எந்தப் பாடங்களைக் கற்றுக்கொடுத்தாலும் அது தொடர்பான வாசிப்புகளைப் பாடத்தின் பகுதியாக வைத்திருந்தேன். கற்பிக்கும்பொழுது பாடத்தையும் பாடப்பொருளையும் புரியவைப்பது எனக்கு பிடித்தமானது. அனுபவமுள்ளவர்களிடமிருந்து எனக்குத் தேவைப்படுபவனவற்றைக் கற்றுக் கொள்வேன். குழந்தைகளுடன் சேர்ந்து மைதானத்தில் விளையாடுவது வழக்கமாக இருந்தது.

கடந்த ஆண்டு நான் என் வகுப்பறையில் வாசிப்பிற்காக வார்த்தை அட்டை, பெரிய புத்தகம், வாசிப்பிற்கான வகுப்பறைச் சூழல் ஆகிய நுட்பங்களைச் செய்து பார்த்தேன்.

- திசைமானியில் வெளிவந்த எல்லா பாடத்திற்கான பாடத்திட்டங்களையும் வாசித்ததோடு அவற்றை வகுப்பறையில் செயல்படுத்தினேன்.

- 15 க்கும் மேற்பட்ட கல்வி சார்ந்த புத்தக வாசிப்பு மற்றும் சினிமாக்களைப் பார்த்தேன். இவ்வனுபவம், குழந்தைகளின்

மீது எனக்கிருந்த கேள்விகள் குற்றச்சாட்டுகளைத் தொலைத்துவிட்டது. கல்வியின் நோக்கத்தை பாடத்தோடு இணைத்து செயல்பட முடிகிறது.

- வித்தியாசமான அனுபவமுடைய ஆசிரியர்களின் பகிர்தல் வகுப்பறைக்கு உதவியாக உள்ளது.
- எனக்கு கணினியில் ஈடுபடுவது பிடிக்கும் என்பதால் வித்தியாசமாக பயிற்சித்தாளைத் தயாரித்து வகுப்பறைக்கு எடுத்துச் செல்வேன்.
- கணிதத்தில் பாடத்திட்டங்கள் தயாரித்து செயல்படுத்திப் பார்த்தேன்.
- தமிழ் வாசிப்பிற்காக நான் கற்றுக்கொண்டவற்றை ஆங்கிலத்திற்கும் செயல்படுத்திப் பார்த்தேன்.

**ஆசிரிய வட்டத்தில் ஈடுபடக் காரணம்**:

- மற்ற ஆசிரியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட.
- கற்பித்தல் கருவிகள், வாசிப்பு நூல்கள், பயிற்சித்தாள்கள் போன்றவற்றை பெருவதற்காக.
- கல்வி சார்ந்த கோட்பாடுகளை அறிந்துகொள்ள.
- அரசு பள்ளிக் குழந்தைகளைப் புரிந்துகொள்ள
- கல்வி சார்ந்த புத்தகங்களை வாசிக்க
- புதுமையான பரிசோதனைகளில் ஈடுபட
- வேலையில் நிறைவைப் பெறுவதற்கான முயற்சி

## அனுபவப் பகிர்வு

**வகுப்பறை பொறுப்புகள் ஏற்படுத்தும் கேள்விகள்**

அரசுப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களாகிய நமக்கு நாளுக்கு நாள் பொறுப்பு அதிகரித்துள்ளது இது பற்றிப் பரவலாகப் பேசிக்கொள்கிறோம். இருந்தபோதும் நம் அலுப்பிற்கான காரணம் அரசு பள்ளிக்கு வரும் குழந்தைகள், வறுமையிலுள்ள குழந்தைகள், குறிப்பிட்ட சமூகப் பின்னணியிலிருந்து வரும் குழந்தைகள், முதல் தலைமுறைக் குழந்தைகள், கற்றலில் குறைபாடுடைய குழந்தைகள் என்பதாக ஆக்கப்பட்டுள்ளனர். கல்வி மட்டுமே இவர்களது வாழ்க்கையை மேம்படுத்த முடியும். இவர்களுக்குக் கல்வியளிப்பது உன்னதமான பணியென்ற போதும் சவாலான ஒன்றாகவே இருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆதிங்கப் பட்டில் உள்ள பொறுப்பினை ஏற்றிருக்கின்றேன் அரசு நடு நிலைப்பள்ளியில் மூன்று மற்றும் நான்காம் வகுப்பு மாணவர்களை வழி நடத்தும் பொறுப்பேற்றிருந்தேன். அதில் கணிதம் மற்றும் தமிழ் பாடங்களை வித்தியாசமான முறையில் கற்பிக்கும் முறையில் ஈடுபட்டு வந்தேன். என்னிடம் இருந்த மாணவர்களில் 2 பேர் செங்கல் சூளையில் வேலைப் பார்த்தவர்கள். அவர்கள் அங்கிருந்து மீண்டு பள்ளிக்கு வந்தவர்கள். நான் அங்கிருந்த இரண்டு ஆண்டுகளும் இவர்களை மூன்றாம் வகுப்பில் ஒருவரையும் நான்காம் வகுப்பில் ஒருவரையும் வைத்து பாடம் சொல்லித்தர முயற்சித்த என் அனுபவத்தைப் பதிவு செய்வது அவசியம் எனத் தோன்றியதால் அதைப் பகிர்ந்துகொள்ள முயற்சிக்கிறேன்.

இரண்டு குழந்தைகளும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பெண் குழந்தைக்கு 8 அல்லது 9 வயதிருக்கும் ஆண்குழந்தைக்கு 11 அல்லது 12 வயதிருக்கும். அக்குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ்

இல்லை. குடும்ப அட்டை இல்லை. இந்த ஊர் அவர்களுடையதும் இல்லை. அவர்களுக்கு நிலையான இருப்பிடமோ உறவினரோ இல்லை. ஆனால் தற்பொழுது அவர்கள் பள்ளியில் என் வகுப்பு மாணவர்கள். அதுவும்கூட எதேச்சையானதுதான். கடந்த ஆண்டு அவர்களை ஒன்றாம் வகுப்பில் சேர்த்தனர். அதற்குக் காரணம் அதுவரை அவர்கள் பள்ளிக்குச் செல்லாதது. ஆனால் அவர்களை முதல் வகுப்புக் குழந்தையுடன் இருக்கவைப்பது பல்வேறு கஷ்டங்களுக்கு வழிவகுத்தது. கல்வி உரிமைச் சட்டப்படி குழந்தைகளை அவர்களின் வயதிற்கேற்ற வகுப்புகளில் வைத்திருக்க வேண்டும் என்பதால் அவர்களை மூன்று மற்றும் நான்காம் வகுப்பில் வைத்திருந்தோம். அதனால் அவர்களுக்காக எதையாவது செய்துவிடவேண்டும் என்ற எண்ணம் எனக்கிருந்தது.

மாணவனைப் பொறுத்தவரை, பெரிய பையன் ஆனால் 4 ஆம் வகுப்பில் இருந்தான் அவனைப் பள்ளியின் பெரிய வகுப்பு மாணவர்கள் கிண்டல் செய்தனர். வேலைக்குப் போகாததால் அவனுக்கு வீட்டில் ஏற்பட்ட சிக்கல்களை சமாளிக்க வேண்டி இருந்தது. தொடர்ந்து வேலையில் ஈடுபட்ட அவன் பள்ளியில் அமைதியாக உட்கார நேர்வது என வெவ்வேறு பிரச்சனைகளுக்கு உள்ளானான். பள்ளிக்கூடம் வருவது என்பதற்கு எந்த அர்த்தமும் தெரியவில்லை. அதோடு அவன் வேலைக்குச் செல்வது சட்டப்படி குற்றம் என்பதால் தைரியமாக பள்ளிக்கு வராமல் இருக்கவும் முடியவில்லை. அவன் வராவிட்டால் ஆசிரியராகிய நாங்களும் விடுவதில்லை. அவனுடைய நிலையைக் கொடூரமான ஒன்றாகதான் நான் பார்க்கிறேன்.

மாணவியைப் பொறுத்தவரை பெண்பிள்ளை என்பதாலோ, சிறியவள் என்பதாலோ பள்ளியோடு ஓரளவு பள்ளியில் மற்ற மாணவர்களுடன் எளிதாக பழகி கலந்து விட முடிந்தது. எழுத்துக் களையும் எண்களையும் கற்றுக்கொள்ளத் துவங்கினாள்.

எங்கள் தலைமையாசிரியர் அம்மாணவர்கள் பள்ளிக்கு வரவேண்டும் என்பதற்காக வெவ்வேறு முயற்சிகளில் ஈடுபட்டார். அவர்களின் பெற்றோரைத் தொடர்ந்து பார்ப்பது, அவர்கள் குழந்தையை பள்ளிக்கு அனுப்பாவிட்டால் காவல் துறைக்குத் தெரிவிப்பதாகக் கூறுவது, கட்டயக் கல்வி சட்டத்தையும் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு சட்டத்தையும் எடுத்துக் கூறுவது என்ற வகையில் அக்கறை காட்டினர். அதனால் அவர்கள் பள்ளிக்கு வரவேண்டி நேர்ந்தது.

**என் வகுப்பறையில்:**

என் வகுப்பில் பல்வேறு வகையான கற்பித்தல் நுட்பங்களைக் கையாளும் எனக்கு இம்மாணவர்களால் வேகம் குறைந்த உணர்வு ஏற்பட்டது. அதோடு வகுப்பறையில் வழக்கத்துக்கு மாறான சிறு சிறு பிரச்சனைகள். அவர்களது வாழ்க்கையை உற்று கவனிப்பது மற்றும் அவர்கள் பள்ளியில் இருந்தாக வேண்டிய சட்ட நியாயத்தைப் புரிந்து கொண்டதால் சுலபமானது.



அவர்களைக் கூப்பிட்டு பேசும் பொழுது உனக்குக் கணக்குப் போடத்தெரிந்தால் நல்லதுதானே என்று அதற்கான நியாத்தைப் புரிய வைத்தால் அதைத் தொடர்ந்து அவன் முயற்சிப்பான். ஆனால் அவனால் முடிவதில்லை. அவனுக்குக் கற்றுக்கொடுக்க முயற்சிக்கும் எண்ணையும் எழுத்தையும் கடந்து அவனுக்குத் வாழ்வியல் கணக்குத்



தெரிந்திருந்தது. அவனால் கூட்ட, கழிக்க, பெருக்க எனச் சரளமாக முடிகிறது. வகுப்பறையில் மூன்றாம் வகுப்புக் கணக்கு அவனுக்கு இவ்வளவுதானே என்று இருக்கிறது. ஆனால் “அ” எழுதுவதும் எழுத்தால் கூட்டுவதும் கடினமானதாக இருக்கிறது. அவன் கைகளால் இரண்டு என்ற எண்ணை எழுதுவது கடினமாக இருந்தது. ஆனால் ஆயிரம் செங்கல் செய்ய எவ்வளவு மண் வேண்டும், தண்ணி வேண்டும், அவற்றை சூளையில் எப்படி வைக்கவேண்டும், அதில் எவ்வளவு காசு கிடைக்கும், கூலி எவ்வளவு கிடைக்கும், அதில் எதையெல்லாம் வாங்கலாம் என்பதெல்லாம் அத்துபடி. என் பணி அவனுக்கு எழுத்தறிவும் எண்ணறிவும் கொடுப்பது. ஆனால் அது சுலபமானதாக இல்லை. அவனுக்குத் தெரியும் விசயங்கள் பெரிதாக இருக்கிறது. சக மாணவர்கள் மத்தியில் பல விசயங்கள் தெரிந்தவனாக இருக்கிறான். ஆனால் புத்தகத்திற்கு முன் ஒன்றும் தெரியாதவனாக தெரிந்துகொள்ள முயற்சிக்க முடியாதவனாக இருந்தான்.

கதைப் புத்தகத்தை அவன் முன் வைத்து கதை சொல்வேன். கதை கேட்பான். ஆனால் தேவையில்லாத எதையோ செய்வது போன்று உட்கார்ந்து இருப்பான். வகுப்பறையிலோ பள்ளியிலோ ஏதாவது வேலை இருந்தால் தானாகவே செயல்படத் துவங்குவான்.

அவனுக்கான வகுப்பறையும் மற்ற குழந்தைகளுக்கான வகுப்பறையும் வெவ்வேறானதாக இருந்தது. ஒரு கட்டத்தில் நான் ஒரு முடிவுக்கு வந்தேன், அதுவும் சரியானதாக இல்லை. அதாவது அவனால் வகுப்பறைக்குள் சும்மா இருப்பது என்பதும் முடியாதது. அப்பொழுது அவன் கடுமையான செங்கல் சூளை வேலையை செய்யாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, அதை அவனிடம் பேசி இருக்கச் சொன்னேன். ஏற்றுக்கொண்டான். ஆனால் சும்மா உட்கார்ந்திருக்க அவன் முயற்சியெடுத்ததைப் பார்த்து எனக்கே கொடுமையாக இருந்தது. இச்சமயத்தில் குழந்தைகளுக்கான வாசிப்பு முயற்சியில் நான் ஈடுபட்டிருந்ததால் குழந்தைகளுக்கு விதம் விதமான கதைப் புத்தகங்களை வாசித்துக் காட்டுவேன். படம் பார்த்து கதை சொல்லச் சொல்லுவேன். சிறு வார்த்தைகளுள்ள கதைகளை வாசிக்க சொல்வேன். இந்த எல்லா செயல்களிலும். அவன் ஈடுபடுவான். ஆனால் முழுமையாக இல்லை.

அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க எம்முறையை கையாளலாம் என்பது பற்றி நான் தெரிந்தவர்களுடன் உரையாடினேன். அவன் கை, பென்சிலுக்குப் பழக மறுத்தது. வட்டம் வரைய முடியவில்லை. அதற்கான தேவையை அவன் மனம் உள் வாங்குமளவு எந்த நியாயமும் இல்லை.

ஆனால் அவனுக்கும் எனக்கும் மட்டும் ஒரு பெரிய நட்பு இருந்தது.

அவன் அப்பா மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டார். அம்மா உடனிருந்து பார்த்துக் கொண்டார். மருத்துவ செலவிற்கு பணம் வேண்டும். சம்பாதிக்க ஆள் வேண்டும். மீண்டும் சூளைக்குப் போகிறான். அதுவரை மாலை நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் சென்று வந்தவன் நேரடியாக செல்வதற்கான காரணம் வந்துவிட்டது. அவன் வராததால் அவன் தங்கையும் பள்ளிக்கு வரவில்லை.

எங்கள் தலைமையாசிரியர் விடுதியில் சேர்த்துப் படிக்க வைக்கும் முயற்சி எடுத்தார். அதுவும் முடியவில்லை.

**இவ்வனுபவம் என்னுள் நிறைய கேள்விகளை எழுப்பியது.**

- இக்குழந்தைக்கான கல்வி என்பது என்ன?
- இக்குழந்தைக்காக நான் வேறு எந்தவகையான முயற்சி மேற்கொண்டிருக்கலாம்?அது எனக்கு ஏன் தெரியவில்லை?
- அவர்கள் பின்னணியை புரிந்துகொள்ளவும் அதற்கேற்ற செயல்பாடுகளில் ஈடுபடவும் கல்வித்திட்டத்தில் வாய்ப்பு இருக்கிறதா?
- அதிகபட்ச விடுப்பு எடுக்கும் இக்குழந்தைகளை முறைமைப்படுத்துவது சாத்தியமானதா?
- சீருடை, தலை சீவி வருதல், புத்தகம் பென்சில் எடுத்துவருதல் என மற்ற குழந்தைகளைப்போல் முறையாக எதுவும் செய்யாமல் இருப்பதை சரிசெய்ய எடுக்கும் முயற்சிகள் கேள்விக்குள்ளாக்கப் பட்டது.
- சமூகத்தில் புறக்கணிக்கப் பட்ட அவனை மற்றவர்களுக்கு இணையானவனாக மாற்றுவது என்றால் ஒன்றுடன் ஒன்று இணைத்து என ஏகப்பட்ட வேலைகளை செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியரின் பொருப்புக்கு அளவீடு எதுவும் உள்ளதா?

**இம்மாணவனைப் பற்றிய வியப்பும் கேள்வியும்:**

- தேன் கூட்டிலிருந்து தேன் எடுக்கத் தெரிகிறது. பக்குவமாக சமைக்கத் தெரிகிறது. குட்டையில் குறவைமீனைப் பிடிக்க முடிகிறது, செங்கல் அறுக்க, அதை சுமந்து வண்டியில் ஏற்ற இறக்க முடிகிறது. கணக்குத் தெரிகிறது. வாழ்வியல் கஷ்டங்களோடு போரட முடிகிறது. கல்வி ஏன் வரவில்லை? கல்விக்கூடம் அவனுக்கானதாக ஏன் இல்லை?
- பிறப்பு சான்றிதழ் இல்லை, சாதி சான்றிதழ் இல்லை, பூர்வீகம் இல்லை... இவர்களை மரியாதைக் குரியவர்களாக மாற்றுவது எப்படி?
- ஒருவேளை தொழிலும் மறுவேளை கல்வியும் என இணைந்த பாடத்திட்டம் இக்குழந்தைகளுக்கு ஏற்புடையதாக இருக்குமா?

**கற்பித்தலில் முழுமையாக ஈடுபடும்பொழுது ஏற்படும் கேள்விகள் நம்மை வெவ்வேறு வகைகளில் பயணிக்க வைக்கிறது. குழந்தையின் முழுமையான கற்றல் என்னும் கருத்தைப் புரிந்துகொள்ள முற்படும்பொழுது கேள்விகள் தவிர்க்க முடியாதது. இக்கேள்விகளை உங்கள் முன் உரையாடலுக்காக வைக்கும்பொழுது இது போன்ற குழந்தைகள் சமூக மேம்பாடை அடைய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.**



நிர்மலா. சு.
அரசு தொடக்கப் பள்ளி
சேந்தநத்தம்.

முந்தைய பள்ளியின் பெயர்:
அரசு தொடக்கப் பள்ளி
பெருங்களூர்

ஆசிரியர் எண்ணிக்கை: 5
மாணவர் எண்ணிக்கை: 87

# கற்றல் கற்பித்தலின் மேம்பாடு

**பின்புலம்:-**

சென்ற ஆண்டு பணியாற்றிய பள்ளியின் பெயர்: அரசு தொடக்கப் பள்ளி, பெருங்களூர்

மாணவர்களின் சமூக பொருளாதார நிலை: குறைந்தே காணப்பட்டது. அதிக மாணவர்களின் பெற்றோர்கள் படிக்காதவேர்களாகவே இருந்தனர்.

**பணி சார்ந்த ஆர்வங்கள்:**

நான் ஆசிரியராக பணியாற்றுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். நான் கற்றுக் கொடுத்து மாணவர்கள் கற்றுக் கொண்டால் மிகவும் மகிழ்ச்சியடைவேன். அப்போது மேலும் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். “எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்.” ஆசிரியர் பணி போன்ற உயர்ந்த பணி எதுவும் இல்லை என்பதே உண்மை.

**ஆசிரியர் வட்டத்தில் சேர்ந்ததன் காரணம்:**

நான் ஆசிரியர் வட்டத்தில் சேர்ந்ததன் முதல் காரணம், 5E பாடத்திட்டத்தை எப்படி எழுதுவது என்ற முறையைக் கற்றுக் கொள்ளத்தான். ஆனால், பிறகுதான், இங்கு பல எண்ணற்ற திறன்களைக் கற்றுக் கொள்ளலாம் என்பது தெரிந்து கொண்டேன். இங்கு ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பல விஷயங்களை விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

**எ.கா.**

1. மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவது.

2. பின் தங்கிய மாணவனைச் சிறந்த மாணவனாக உருவாக்குவது.

3. மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணர்வது போன்ற பல செயல்கள்.

இங்கு வயது வித்தியாசம் இன்றி அனைத்து ஆசிரியர்களும் ஒன்று கூடி எடுத்துக் கொண்ட முயற்சிகள் மிகவும் அருமை. திருமதி தனமேரி ஆசிரியை அவர்கள், ஒன்றாம் வகுப்பு ஆசிரியராக 21 ஆண்டுகள் பணியாற்றியதன் மூலம் தான் பெற்ற அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்ட விதம் எங்களை மேலும் ஆர்வத்துடன் செயல் பட வைத்தது என்றே சொல்ல வேண்டும். அவர்கள் வகுப்பில் பல நல்ல நல்ல உத்திகளைக் கையாண்டு கற்றலை மேம்படுத்தி இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன்.

**கடந்தாண்டு நான் கையாண்ட வித்தியாசமான செயல்கள்:**

நான் கடந்த ஆண்டு அரசு தொடக்கப் பள்ளி பெருங்களூரில் பணியாற்றினேன். என் வகுப்பில் ஒரு மாணவன் கூட படிக்கத் தெரியாமல் இருக்கக் கூடாது என்று நான் எண்ணினேன். நாங்கள் ஒரு குழுவாக ஒரு பாடத்திட்டத்தைத் திட்டமிடும் பொழுது, புதிய உத்திகள் பல கிடைத்தன. மாணவர்கள் செயல்பாடுகள் மூலம் நான் கற்பித்ததை விட நிறைய கற்கிறார்கள் என்பதையும், வண்ண வண்ண ஈர்க்கக் கூடிய கற்றல் கற்பித்தல் கருவிகள் (TLMs) மூலமும் ஒரு சுதந்திரமான சூழல் மூலமும் ஊக்கம் அடைகிறார்கள் என்பதையும் உணர்ந்தேன். அது மட்டுமல்லாது மாணவர்களுக்கும் நமக்கும் இடையே நடக்கும் கற்றலை மையப்படுத்திய உரையாடல்கள் அவர்களின் சிந்திக்கும் திறனை மேம்படுத்துகிறது என்பதைப் புரிந்து கொண்டேன். இக்கற்றல் கற்பித்தல் கருவிகள், கற்பிக்க மட்டுமில்லாது, கற்றல் எவ்வாறு நடைபெற்றுள்ளது என்பதை அறியவும் உதவுகிறது என்பதை அறிந்து கொண்டேன். இவ்வாறு உருவாகிய கற்றல் கற்பித்தல் கருவிகளில் ஒன்று 'சொல் சொருகு அட்டை', மற்றொன்று 'சொல் பரமபதம்.'

## அனுபவப் பகிர்வு

**ஆய்வின் நோக்கம்/.வகுப்பறைச் சவால்கள்:**

ஆய்வின் முக்கிய நோக்கம் கற்றலில் பின் தங்கிய மாணவர்களை முன்னிற்கு கொண்டு வருவதும் வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களையும் கற்றல் திறன் மிக்க மாணவர்களாக மாற்றுவதுமாகும். கற்றலில் குறைபாடு உள்ள குழந்தைகளையும் ஆர்வத்துடன் கற்கச் செய்ய வேண்டும் என்பதையே என் சவாலாக ஏற்றுக் கொண்டேன்."உன்னால் முடியும்" என்ற எண்ணத்தையும் தன்னம்பிக்கையும் ஒவ்வொரு மாணவர்களிடமும் உருவாக்கத் திட்டமிட்டேன். இதற்கு என்னென்ன செய்தால் சாத்தியமாகும் என்பதே என்னுடைய சவாலாக இருந்தது. தமிழ் எழுத்துக்களை நினைவு வைத்துக் கொள்ள அவர்கள் தடுமாறினர். முதலில் அவர்கள் மனதில் எழுத்துக்களைப் பதிய வைப்பது எனக்குச் சவாலாக இருந்தது. இச்சவாலை எதிர்க்கொள்ளத் திட்டமிட்டேன். அப்போது எனக்கு உதித்த புதிய உத்திதான் சொல் உருவாக்கும் அட்டை. இதைப் பற்றிப் பிறகு பகிர்கிறேன்.

**நோக்கத்தை அடையத் திட்டமிட்ட விதம் / மேற்கொண்ட முயற்சிகள்.**

ஒவ்வொரு மாணவரும் புரிதலோடு படிக்கவும், எழுதவும் கற்கும் போது தான் அவனிடம் சொற்களஞ்

சியப் பெருக்கம் ஏற்படுகிறது. எனவே அவன் பல சொற்களைத் தானே கொடுக்கப் பட்டிருக்கும் எழுத்துக்களிலிருந்து உருவாக்கி படிக்கத் திட்டமிட்டேன். அதற்காக நான் பல முயற்சிகளை மேற்கொண்டேன். மாணவர்கள் எளிமையாக ஆர்வமுடன் கற்க பல செயல்பாடுகளைக் கையாண்டேன். உ.தா.

விடுபட்ட எழுத்துக்களைக் கூறுதல்.

கடைசி எழுத்தைக் கூறுதல்.

கொடுக்கப்பட்ட எழுத்துக்களைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குவது.

முதல் எழுத்தை மாற்றி புதிய வார்த்தையை உருவாக்குவது.

சொற்களைத் தன் வாக்கியத்தில் பயன்படுத்தத் தெரிவது.

**கற்பித்தல் மற்றும் மதிப்பிடுதல் உத்திகள் பற்றிய சுருக்கம்:**

ஒன்றாம் வகுப்பில் தான் நாம் பேசுவது வரிவடிவத்தில் எழுதப் படுகிறது என்பது புலப்படும். நான் குழந்தைகளின் கற்றலுக்கும் பிறகு கற்றார்களா என்று மதிப்பிடுவதற்கும் ஏதாவது கற்றல் கற்பித்தல் கருவி உருவாக்க நினைத்தேன். அப்பொழுதான் ஆங்கிலத்தில் ‘scrabble’ என்று அழைக்கப் படும் விளையாட்டு தமிழிலும் உருவாக்கலாம் என்று நினைத்தேன்.

அதிக பணம் செலவில்லாமல் அந்தக் கருவிச் செய்யத் திட்டமிட்டேன். அப்போது வீட்டில் இருந்த துணி அட்டைப் பெட்டி கிடைத்தது. அதைக் கையாள்வது எளிதாக இருக்கும் என்று நினைத்தேன். அதில் அட்டைத்தாள் ஒன்றை ஒட்டி சொற்களை உருவாக்கி எழுத்துக்களை அதில் சொருகும் வகையில் செய்தேன். அட்டைத் தாளை முக்கோண வடிவில் வெட்டி அதில் தேவையான வார்த்தைகளை எழுதினேன். அதைக் கொண்டு மாணவர்கள் சொற்களை உருவாக்கச் செய்தேன்.

நான் இந்தச் சொருகு அட்டையைச் செய்த போது எனது நோக்கம் ஒவ்வொரு மாணவரும் எழுத்துக்களை அடையாளம் காணவேண்டும் என்பதும், எவ்வாறு பல எழுத்துக்களை ஒன்றாகக் கோர்த்து ஒரு சொல் உருவாகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுமே. எழுத்துக்களைக் கூட்டி வார்த்தையாக வாசித்தாலே ‘படிக்க’ தெரிந்துவிட்டது என்ற எண்ணம் எனக்கு இருந்தது. ஆனால் புரிதல் இல்லாமல் படித்தால் என்ன பயன் என்பதைப் பிறகு தான் புரிந்து கொண்டேன். இதற்குப் பூப்பட அட்டைகள் எனக்கு உதவியாக இருந்தது. நான் சொல்லும் வார்த்தையை மனதில் கொண்டு அதன் எழுத்துக்களைத் தேடி எடுத்து அடுக்குவார்கள். பிறகு எந்தப் பூவின் பெயரை நான் கூறினேனோ அந்தப் பூவின் படத்தை அதன் பக்கத்தில் வைப்பார்கள். உ.தா. நான் ஆவாரம்பூ என்று கூறினால் ஆ +வா+ர +ம்+பூ என்று அடுக்கி விட்டு ஆவாரம்பூவின் படத்தை அதன் அருகில் வைப்பார்கள்.

கற்றலின் போது அவர்கள் அந்தப் பூவின் படத்திலுள்ள எழுத்துக்களைப் பார்த்துப் பார்த்து அடுக்குவார்கள். கற்ற பின் பூவின் பெயரைக் கேட்டவுடனே தாமாகவே அடுக்கி, பூவின் அட்டையையும் அருகில் வைப்பர்.

**சொல் பரமபதம்**

நாங்கள் திட்டமிட்டபோது சேர்ந்து செய்த கற்றல் கற்பித்தல் துணைக்கருவி தான் சொல் பரமபதம். இந்த விளையாட்டில் நாங்கள் இரு நோக்கங்கள் வைத்திருந்தோம் - முதல் நோக்கம் விளையாட்டாக மாணவர்கள் சொற்களைக் கற்க வேண்டும் மற்றும் இந்தச் சொற்களின் பொருள் அவர்களுக்கு புரிந்திருக்கிறதா என்று மதிப்பிட வேண்டும் என்பதே. நாங்கள் அதற்காக அவர்கள் இதுவரை

கற்றிருக்கும் எழுத்துக்களை வைத்து எளிமையான வார்த்தைகளை உருவாக்கினோம். இது வரை வந்த பாடங்களில் புதிதாகக் கற்ற சொற்களும் இதில் அடங்கியிருந்தன. படங்கள் இல்லாமல் வெறும் சொற்கள் இந்த அட்டையில் இருந்தால் போதும் என்று தீர்மானித்தோம். நாங்கள் படங்களின் வழியே அவர்களுக்கு எந்த வித சலுகையும் தர விரும்பவில்லை. புதியதான வார்த்தைகளும் இதில் இடம் பெற்றிருந்தன. இது அவர்களின் சொற்களஞ்சியத்தில் புரிதலோடு இடம் பெறவேண்டும் என்பது என் நோக்கம்.

இந்த விளையாட்டில் தாயத்தும் காசுகளும் உண்டு. நான் வண்ண வண்ண சட்டைப் பொத்தான்களை தான் பயன்படுத்தினேன். இதன் காரணமாக பல மாணவர்கள் ஒரே சமயம் பங்கேற்க முடிந்தது

ஒரு மாணவர் தாயத்தை உருட்டியவுடன் அந்தத் தாயத்தில் ஆறோ அல்லது ஒன்றோ விழுந்தால் அவன் விளையாட்டை தொடங்கலாம். தாயத்தில் எந்த எண் வருகிறதோ அத்தனை எண்கள் அவன் முன்னேறலாம். எந்தக் கட்டத்தில் நிற்கிறானோ அந்தக் கட்டத்தில் இருக்கும் சொல்லை அவன் படிக்க வேண்டும். முதன் முதலில் எல்லா வார்த்தைகளையும் படிக்கும் வரை, அவர்கள் வெறும் வாசித்தலோடு நிறுத்திக் கொண்டார்கள். இரண்டாவது கட்டமாக அவர்கள் தாம் படிக்கும் சொற்கள் புரிகிறதா என்பதைப் பரிசோதிப்பதற்கு அவர்கள் அந்தச் சொல்லை ஒரு வாக்கியத்தில் பயன்படுத்த வேண்டும் என்று நிர்பந்தம் விதித்தேன். சில முறை சில சொற்களின் பொருள் புரியாமல் இருக்கும் பொழுது முழு குழுவிற்கும் அது கொடுக்கப்படும். எவருக்குமே தெரியவில்லை என்றால் நான் விளக்கமளித்து அந்தச் சொல்லை வாக்கியத்தில் பயன்படுத்தி புரிய வைப்பேன். இதில் பாம்பின் வாயில் சருக்குவதும் ஏணி வழியே ஏறுவதுமாக இருப்பதால் அவர்கள் மகிழ்ச்சியாக இந்தச் செயலாட்டில் ஈடுபட்டனர்.

**எனது அனுபவம்:**

**பணித்தாள்கள்:**

பின்வரும் பணித்தாள்களை மாணவர்களின் கற்றலை மதிப்பிடப் பயன் படுத்தினேன்.

1. படத்தோடு சொல்லை ஒப்பிடு
2. விடுப்பட்ட எழுத்தைக் கண்டுபிடி
3. முதல் எழுத்தை மாற்றி புதிய சொல் உருவாக்கு
4. பட அட்டையிலிலுள்ள பொருளின் சொல்லைச் சொல்லட்டையில் உருவாக்கு
5. புதிரில் உள்ள வார்த்தைகளைக் கண்டுபிடி

**வகுப்பறை உரையாடல்கள்:**

என்னுடைய வகுப்பறை உரையாடல்களின் பொழுது, மாணவர்களுக்கு என்னென்ன பிடிக்கும், எவை எவை பிடிக்காது என்பதைப் புரிந்து கொண்டேன். இந்த உரையாடல்கள் பல தலைப்புகளில் இருக்கும். விலங்குகள், பூக்கள், பறவைகள், வண்டிகள், என்று பல விஷயங்களைப் பற்றி உரையாடுவோம். இது ஒரு வித அருகாமையை ஏற்படுத்தும். இம்மாதிரி ஒரு உரையாடல் பூக்கள் பற்றி நடத்தும்பொழுது பல கேள்விகள் மூலம் அவர்கள் பூக்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

**உ.தா.**

என்னென்ன பூக்கள் பார்த்திருக்கிறாய்?

என்ன நிறங்களில் எல்லாம் பூக்கள் பார்த்திருக்கிறாய்?

உன் வீட்டில் என்ன பூ பூக்கிறது?

எல்லா பூக்களும் மணம் தருமா?

மணம் தராத பூக்கள் எவையெவை?

பூக்களுக்கு ஏன் ஒரு வித மணம் இருக்கிறது?

உனக்கு பிடித்தப் பூக்கள் எவை?



அவர்களுக்குப் பல விஷயங்கள் தெரிந்திருக்கிறது என்பதை இந்த உரையாடல்கள் மூலம் என்னால் அறிய முடிந்தது.

குழந்தைகள் எவற்றைக் கற்கிறார்கள்/ எவற்றைக் கற்பதில் சிரமப்படுகிறார்கள்?

குழந்தைகள் படத்துடன் கூடிய சொற்களைக் கொடுத்தால் எளிதில் கற்கிறார்கள். சொற்களை மட்டுமே கொடுத்தால் அவற்றைக் கற்பதில் சிரமப் படுகிறார்கள். படங்கள் அவர்களுள் ஒரு புரிதலை ஏற்படுத்துகிறது. அப்போது தான் உணர்ந்தேன் ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு சொல்லையும் புரிதலோடு படித்திருந்தால் சிரமப் படாமல் படித்திருப்பார்கள் என்பதை.

**பிரதிபலிப்பு:**
**கற்பித்தலின் போது ஏற்பட்ட மாற்றங்கள்.**

நான் சொற்களைக் கரும்பலகையில் எழுதி அவற்றை வாசித்துக் காட்டினேன்.அப்போது அது மாணவர்களுக்கு நினைவில் வைத்துக் கொள்வது சிரமமாக இருந்தது. எனவே கற்பித்தலில் மாற்றத்தை ஏற்படுத்தினேன். அதற்காகத்தான் நான் உருவாக்கிய “சொருகு அட்டையைப்” பயன்படுத்தினேன். அவர்களுக்குப் புரிதலோடு கற்றல் நடைபெறவேண்டும், தொடர்பு படுத்திப் படிக்கவேண்டும் என்பது என்னுடைய நோக்கமாக அமைந்ததால், பூக்களின் படங்கள் அடங்கிய அட்டைகளைப் பயன்படுத்தினேன். முதலில் சொற்களை வாசிக்க வைத்து, அதிலிருக்கும் எழுத்துக்களை வாசிக்க வைத்து பிறகு சொல்லை உருவாக்கவும் வைத்தேன். முதலில் வார்த்தைகளில் உள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய வைத்தேன். இவ்வாறு குறியீட்டைக் (code) கண்டுபிடித்து வாசிக்கும் சுமையை நீக்கினேன்.



கற்றல்-கற்பித்தல் வளங்களை இன்னும் சிறப்பாகவும் நீண்ட நாள் உபயோகப்படும்படியும் தரமான பொருட்களைக் கொண்டு செய்திருக்கலாம் என நினைத்தேன்.

அடுத்தது என்ன?

நான் இன்னும் நன்றாக திட்டமிட்டிருந்தால் மற்றும் திட்டமிட்டதை கடைபிடித்திருந்தால் முதலிலிருந்தே இன்னும் நிறைய புரிதலோடு மாணவர்கள் படித்திருப்பார்கள். நான் திட்டமிட்டதைச் சரியாக செய்யாமல் விட்டுவிட்டேன். இனி வரும் வருடங்களில் பின்வருமாறு நடைமுறைபடுத்த திட்டமிட்டுள்ளேன்:

நோக்கம் --- செயல்திட்டம் --- செயல்முறை --- கற்றல் அடைவு (Objective - plan --- process --- outcome)

முதலில் மாணவர்கள் எழுத்துக்கூட்டிப் படித்தாலே வாசித்தல் நடந்து விட்டது மற்றும் புரிதல் நடந்துவிட்டது என்று நினைப்பேன்.

ஆனால், இப்பொழுது என்னிடம் நான் சொல்லிக்கொள்வது ‘கற்றல் நடந்து விட்டது என்று கருதாதே, நடந்ததா? என்று கண்டுபிடி.’

இந்த அனுபவம் என்னை மாணவர்கள் புரிதலோடு கற்க வேண்டும் என்பதையே கற்றல் கற்பித்தலின் நோக்கமாக கொள்ள வேண்டும் என்பதை என்னுடைய கொள்கையாக மாற்றியுள்ளது. இந்த வருடம் என்னால் செய்ய முடியாததெல்லாம் (எந்த காரணமாக இருந்தாலும்) அடுத்து வரும் வருடங்களில் நோக்கமும் விளைவும் நிகராக இருக்குமாறு செயல்படுவேன். பாடத்திட்டம் தீட்டிய பிறகு அதைச் செயல்படுத்தும் பொழுது எது குழந்தைகளுக்குப் புரிகிறது, எது புரிதலை ஏற்படுத்தவில்லை என்பதைக் கவனித்துப் புரிதல் ஏற்படுத்துவதற்குத் திரும்பவும் வேறு திட்டம் தீட்டிச் செயல்படுத்துவேன்.

இப்பொழுது திட்டமிடுவது என்பதும், கற்றல் கருவிகள் தயாரிப்பது என்பதும் என் வாழ்கையின் அங்கமாகவே மாறி வருகிறது என்பதை உணர்கிறேன். இப்பொழுது நான் இரண்டாவது வகுப்பைக் கையாள்கிறேன். எழுவாய் பயனிலை கற்பித்தலுக்காக நான் கற்றல் கற்பித்தல் துணைக் கருவி உருவாக்கினேன். முதலில் அவர்களுக்குப் பெயர்ச்சொல் ஆண்பாலாக இருந்தால் பயனிலை ‘ன்’ என்ற எழுத்தில் முடியும் என்றும், பெண்பாலாக இருந்தால் ‘ள்’ என்ற எழுத்தில் முடியும் என்றும், அஃறிணையாக இருந்தால் ‘து’ என்ற எழுத்தில் முடியும் என்பதையும் கற்றுக் கொடுத்தேன். அதற்காக பல முறை பயிற்சி அளித்தேன். பிறகு செயல் அட்டையின் வழியே கற்றலுக்கும் பிறகு மதிப்பீட்டிற்கும் பயன் படுத்தினேன். எழுவாயை ஒரு குழு தேர்ந்தெடுத்து சொருகும் பொழுது, பயனிலையை வேறொரு குழு சொருக வேண்டும் என்று விளையாட்டு மூலம் கற்றல் நிகழ்ந்தது மன நிறைவு கொடுத்தது.

அடுத்த வருடம், மேலும் பல கற்றல் கற்பித்தல் உத்திகளோடு உங்களைச் சந்திப்பேன் என்பது உறுதி.



அ. தனமேரி
அரசு தொடக்கப் பள்ளி, செட்டிப்பட்டு

முந்தைய பள்ளியின் பெயர்:
அரசு தொடக்கப் பள்ளி
தட்டாஞ்சாவடி, வட்டம் 1

ஆசிரியர்கள்: 11
மாணவர்களின் எண்ணிக்கை: 385

# வகுப்பறை வளங்களும் மாணவர் கற்றலும்

**மாணவர்களின் சமூக பொருளாதார நிலை:**

எங்கள் பள்ளியில் பயிலுகின்ற மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட பொருளாதார சூழ்நிலையைக் கொண்டவர்கள். பெற்றோர் பெரிதாகச் சம்பாதிப்பவர்களோ அல்லது குழந்தைகளைச் சரியான முறையில் பராமரிப்பவர்களோ இல்லை.

**பணி சார்ந்த ஆர்வங்கள்:**

- அனைத்துப் பாடங்களுக்கும் என்னால் முடிந்த அளவு எளிய கற்றல் கற்பித்தல் கருவிகளை உருவாக்குவதில் எனக்கு ஆர்வம் உண்டு.
- விதவிதமான இராகங்களில் பாடல்கள் கற்றுக் கொடுத்தல்
- பிள்ளைகளை எப்போதும் மகிழ்வாக வைத்திருத்தல்.
- பிள்ளைகளுக்கு ஏதாவது தேவைகள் இருப்பின் நிறைவேற்றுவது மட்டுமல்லாது கைவினையிலும் ஆர்வம் உண்டு.

**ஆசிரியர் வட்டத்தில் சேர்ந்ததன் காரணம்:**

வகுப்பறையில் நான் பெற்ற இன்பம் என் சக ஆசிரியர்களும் பெற வேண்டும் என்ற நோக்கமே என்னை ஆசிரிய வட்டத்தில் சேர வைத்தது.

**கடந்த ஆண்டு நான் செய்த வித்தியாசமான செயல்கள்:**

- செயல் வழி கற்றல் மூலம் மாணவர்களுக்குக் கற்பித்தது
- மாணவர்களின் பணித்தாள்களை அவர்களையே செய்ய வைத்தது
- மாணவர்களைத் தொலைநோக்கப்பூர்வமான உரையாடல்களில் ஈடுபடுத்தியது.

## அனுபவப் பகிர்வு

**வகுப்பறைச் சவால்கள்:**

கற்பித்தல் நடைபெறும்பொழுது மாணவரின் கவனச் சிதறல் சவாலாக அமைந்தது.

- பணித்தாள்களைச் செய்ய வைக்கும் பொழுது மாணவர்களிடையே நடக்கும் தேவையில்லாத குழப்பங்கள் சவாலாக அமைந்தது
- நல்ல கற்பித்தல் நடைபெற்றும் சிறு சிறு தேர்வுகளில் மாணவர்களின் பங்கேற்கும் திறன் குறையும் போது சவாலாக உணர்ந்தேன்
- மதிய உணவு வேளையில் சில மாதங்கள் சரியாக உணவு அருந்தாதது சவாலாக அமைந்தது
- புது புது உத்திகளைக் கையாளும் போது மாணவர்களின் புரிதல் கேள்விக் குறியாக அமையும் போது அதை எப்படி தீர்ப்பது என்பது சவாலாக அமைந்தது.
- மாணவர்கள் தாம் கற்றதைப் புரிதலோடு கற்றிருக்கிறார்களா என்பதைக் கண்டறிவது சவாலாக அமைந்தது.

**நோக்கம்:**

- ஒவ்வொரு மாணவரும் புரிதலோடு படிக்க வேண்டும்

**நோக்கத்தை அடைய திட்டமிட்ட விதம்:**

- மாணவர்களின் கவனச் சிதறலைக் குறைக்க நகைச்சுவையாய் கற்பிக்க ஆரம்பித்ததில் கொஞ்சம் வெற்றியடைய முடிந்தது
- பாடத்திட்டத்தைக் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் திறம்பட தயாரித்து அதனை வகுப்பறையில் நடைமுறைப் படுத்தினேன்.
- சொல்வது எழுதுதல் போன்ற எளிய பயிற்சிகளை அவ்வப்போது கொடுத்து எழுத வைத்தேன்.
- எளிய கற்றல் கற்பித்தல் கருவிகளை மாணவர்களையே கையாள வைத்தேன்

**கற்றல் கற்பித்தல் துணைக் கருவிகள்:**

1. சொல் பாராசூட்
2. சொல் தட்டு
3. சொல் பரமபதம்
4. வயிற்றிற்குள் இரகசியம்

**சொல் பாராசூட்**

**முன் முயற்சிகள்:**

சொல் பாராசூட் தயாரிக்க பிளாஸ்டிக் கவர்கள் மற்றும் கூழாங்கற்களைச் சேகரித்தேன். அதனை உருவாக்க நூல் மற்றும் வார்த்தைகள் அடங்கிய அட்டைகள் தயாரித்தல், ஒட்டுதல் போன்ற காரியங்களை முன் முயற்சிகளாகச் செய்தேன்.

**கற்பித்தல் திட்டம்:**

கூழாங்கல்லில் சிறு சிறு சொற்கள் அடங்கிய அட்டைகளை ஒட்டித்தயார் செய்து மாணவர்கள் ஏற்கனவே கற்ற வார்த்தைகளைப் புரிதலோடு கற்றனரா என்பதை அறிய இவ்விளையாட்டை திட்டமிட்டேன்.

**செயல் திட்டம்: சொல் பாராசூட்**

சொல் பாரசூட் செய்து குறைந்த பட்சம் 50 சொற்களை ஒரு கூழாங்கல்லுக்கு 2 வீதம் ஒட்டி தயார் செய்து மாணவர்களுக்குப் புரிதலுடன் கூடிய கற்பித்தல் நடந்ததா என்பதை அறிய செயல்திட்டம் தீட்டினேன்.

செயல்பாடு - மாணவர்களைத் திறந்த வெளிக்கு அழைத்துச் சென்று அவர்களை வட்டமாக நிற்க வைத்து முதலில் பாராசூட்டைத் தூக்கி வீசினேன். அது கீழே விழும் போது மாணவர்கள் அனைவரும் முட்டி மோதிக் கொண்டு ஓடியதைக் கண்ணுற்ற போது எனது செயல்திட்டத்தில் குறை இருப்பதை உணர்ந்தேன். அதன் பின் மாணவர்களுக்குச் சில விதிமுறைகளை விதித்து1,2,3 என எண்களைச் கொடுத்து முதல் எண் கொண்டவர்கள் முதலில் பிடித்துச் சொற்களைப் படியுங்கள். அடுத்தது 2-ஆம் எண் கொண்டவர்கள் என முழுமையாக அந்த விளையாட்டை விளையாடிக் கற்றனர்.





அவர்கள் எழுத்துக் கூட்டி மட்டும் படிக்கிறார்களா அல்லது புரிதலோடு படிக்கிறார்களா? என்பதை அறிய, அவர்களிடம், இந்தச் சொல்லின் பொருள் என்ன? இந்தச் சொல்லை எப்படி பயன்படுத்துவாய் போன்ற வினாக்களை எழுப்பியபோது சில சொற்களின் பொருள் தெரியாதது தெரிய வந்தது. அந்தச் சொற்களின் பொருளை எடுத்துரைத்தும் அதை ஒரு வாக்கியத்தில் பயன்படுத்தியும் பொருளுணர வைத்தேன்.

2. **செயல் திட்டம் சொல் தட்டு:**

ஒரு மரப்பலகையில் வட்ட வடிவ வெண் நுரை அட்டையை ஒட்டி அதனைத் தேவையான அளவிற்கு இடைவெளிவிட்டு வெட்டி அட்டைகளைச் சொருகிப் பூ வடிவமாக அமைக்கவும். இடைவெளியில் எழுத்துக்கள் அடங்கிய அட்டைகளை வைக்க வேண்டும். உதாரணமாக, சொல் தட்டில் 'ந', ர, ம, க, நா, கா, ய், ம் என்ற எழுத்துக்களை வைக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த எழுத்துக்களிலிருந்து எவ்வளவு சொற்கள் உருவாக்கக முடியும் என்று மாணவர் கண்டுபிடிக்க வேண்டும். நகம், மரம், ரகம், காய், நாய், என்று முதலிலும், பிறகு தொடர் விளையாட்டால் நரகம், மகரம், போன்ற சொற்களையும் உருவாக்குவார்கள். அவர்களாகவே எழுத்துக்களை ஒன்று சேர்க்கும் பொழுது,



சொற்கள் எவ்வாறு வரி வடிவம் மற்றும் ஒலி வடிவம் இணைந்து உருவாக்கப் படுகிறது என்பதைப் புரிந்து கொள்வார்கள். தவறானால் தாமாகவே திருத்திக் கொள்ளவும் செய்கிறார்கள். மற்றவர்களுக்குக் கற்றுத் தரும் பழக்கமும் வளர்கிறது.

சொல் தட்டு விளையாட்டு விளையாடும் பொழுது மாணவர்களின் அகமும் முகமும் மலர்ந்து மகிழ்ந்ததைக் கண்கூடாகக் காணமுடிந்தது.

**3. செயல் திட்டம் சொல் பரமபதம்**:

சொல் பரமதம் வழியாகப் பல விஷயங்களை மாணவர்கள் கற்கிறார்கள். சொல் பரமபதம் விளையாட்டில் தெரிந்த, பழக்கப்பட்ட சொற்கள் அல்லாது புதிய சொற்களும் உள்ளன. அதற்கு நாம் அவர்களுக்குக் கற்று தரவில்லையே என்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது, அந்த வார்த்தையைப் படித்தவருக்குப் பொருள் புரியவில்லை என்றாலும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பழக்கம் அவர்களிடம் வளர்ந்திருந்ததைப் பார்க்க முடிந்தது.




நம்மையே உதாரணமாக எடுத்துக் கொண்டாலும், நம்முள் எத்தனை பேர் ‘எனக்குத் தெரியாது’ என்று சொல்கிறோம். புரியாவிட்டாலும் புரிந்த மாதிரி பாவனை அல்லவா செய்கிறோம்? இந்தக் கூச்சமெல்லாம் இல்லாமல் தெரியாமல் இருப்பது குற்றமில்லை என்ற உணர்வு இவர்களுள் வளர்ந்திருப்பதே எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

இந்த விளையாட்டு மூலம் எண் வரிசை, ஏறு வரிசை, இறங்கு வரிசை, கூட்டல் போன்ற பாடப்பொருள்களைக் கற்கிறார்கள்.

இதையெல்லாம் விட, வாழ்க்கையில் ஏற்றமும் தாழ்வும் சாதாரணம் என்ற தத்துவத்தை விளையாட்டாக கற்கிறார்கள். பாம்பில் சறுக்கி கீழே இறங்கினால் திருப்பி எவ்வாறு மேலே ஏறலாம், எந்த எண் தாயத்தில் விழுந்தால் ஏணியில் ஏறலாம் பாம்பைத் தவிர்கலாம் என்பதைப் பற்றி மாணவர்கள் சிந்தித்து செயல்பட்டு கணக்கு போட்டது எனக்கு வியப்பைத் தந்தது. குழந்தைகள் எவ்வாறெல்லாம் கற்கிறார்கள்?

**4. செயல் திட்டம்: வயிற்றுக்குள் இரகசியம்**:

குழந்தைகளுக்குப் பொம்மை படம் மிகவும் பிடிக்கும். அதுவும் இது போன்ற பெயர் கொண்ட சொல் விளையாட்டு என்றால் ஆர்வம் தூண்டும் தானே?

இந்தச் செயல்பாட்டிற்காக நான் முயல் வடிவத்தைத் தேர்ந்தெடுத்தேன். ஒரு முயலை வரைந்த பின் பல முயல் படங்களை உருவாக்கினேன். ஒவ்வொரு முயலுக்கும் ஒரு அடிப்பக்கம் மற்றும் மேல் பக்கம் உண்டு. தொடர் அட்டைகளில் சொற்களை எழுதி அது விசிறியாக விரியும் பொழுது ஒவ்வொரு சொல்லாகப் படித்து மகிழ்வார்கள் மாணவர்கள்.



இந்தச் செயல்பாட்டின் மூலம் ஒவ்வொரு எழுத்தில் தொடங்கும் சொற்களை மாணவர்களால் படிக்க முடிகிறதா? என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக - 'அ' என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் அம்மா, அணில், அமைதி, அறம், அகம், அரசு, அண்ணன், அப்பா, அக்கா, போன்ற சொற்களை நாம் முதலில் ஒரு பக்கத்தில் பட்டியலிட வேண்டும். பிறகு தொடர் அட்டையை உருவாக்கி, அதில் ஒவ்வொரு மடிப்பிலும் ஒரு சொல் வருமாறு எழுத வேண்டும். எழுதி முடித்த பிறகு, விசிறியாக மடித்து விட வேண்டும். கீழுள்ள அட்டைப்பகுதியை மட்டும் கீழ் பக்கம் உள்ள முயலின் வயிற்றில் ஒட்டி விட வேண்டும். இவ்வாறு 'க' வரிசை, 'ச' வரிசை என்று பல முயல்கள் உருவாக்க வேண்டும். வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு இரண்டு பேராகப் பிரித்து குழுவாக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் ஏதாவது ஒரு முயலை எடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு மடிப்பாக திறந்து, அந்த மடிப்பில் எழுதியிருக்கும் சொல்லைப் படிக்க வேண்டும். ஒருவர் மற்றொருவர் உதவியை எடுத்துக் கொள்ளலாம்.

இந்த விளையாட்டின் மூலம் மாணவர்கள் கற்றறிந்து சரியாய் இருந்தால் சந்தோஷமாகவும் தவறாக இருந்தால் தாமே திருத்தியும் கொள்கிறார்கள்.

**எனது அனுபவம்:**

**குழந்தைகளின் பயிற்சித்தாள்கள்:**

பயிற்சித்தாள்களைச் செய்யும் போது பிள்ளைகள் சொல்வதைப் புரிந்து கொண்டு என்னைப் பின்பற்றிச் செய்து வருவார்கள். அப்படிச் செய்யும் போது சில நேரங்களில் புரிந்தவர்கள் நன்றாகவும் புரியாதவர்கள் பொருட்களை வீணாக்கியும் செய்வார்கள். வண்ணக் கோலம் போடும் போது, மாணவர்கள் 'பகிர்தல்' என்ற பண்பைக் கற்கிறார்கள். செய்யத் தெரியாதவர்கள் காகிதத்தை வீணாக்கினாலும் வேறு ஒரு காகிதம் கொடுத்து மீண்டும் செய்ய வைத்து மதிப்பெண் போடும்பொழுது, அவர்கள் முகத்தில் தோன்றிய அலாதியான மகிழ்ச்சி என் அனுபவமாகக் கருதுகிறேன்.

மாணவர்களின் கற்றல் திறனைச் சோதித்து அறிய இந்தப் பயிற்சித் தாள்கள் பயன்பட்டது. படம் 'பார்த்து பெயர் ஒட்டு' என்ற பயிற்சித் தாளில் ஒரு புறம் படங்களைக் கொடுத்து விட்டு அந்தப் படங்களுக்குரிய சொற்களை வெட்டி கலந்து கொடுத்துப் படத்துக்குறிய சொற்களை ஒட்டச் செய்த போது அவனுக்குள் புரிதல் நடந்திருக்கிறதா என்பதை நான் புரிந்து கொண்டேன்.

**வகுப்பறை உரையாடல்கள்:**

மாணவர்களுக்கும் எனக்கும் கற்றல் சம்பந்தமாக உரையாடல் நடக்கும் பொழுது நிகழ்ந்தது என்னவென்றால் கற்றல் மட்டுமே.

**உதாரணமாக:**

'நெல்' என்ற சொல்லினை விளக்கும் பொழுது,

தட்டாஞ்சாவடி நகரப் பகுதி என்பதால் மாணவனுக்கு 'நெல்' என்ற சொல்லைப் புரிய வைக்க படாதபாடு பட்டேன். ஏனென்றால் சோறு அரிசியிலிருந்து வருகிறது, அரிசி கடையிலிருந்து வருகிறது என்பது மட்டுமே அவனுக்குத் தெரிந்த உண்மையாக இருக்கிறது. அவன் உழவர் உழுது பயிர் செய்து அறுவடை செய்வதைக் கண்டதில்லை. ஆதலால் 'நெல்' என்ற சொல்லைக் கற்பிப்பது சவாலாகவும், அதே நேரம் அதிக விளக்கமளிக்க வேண்டிய ஒன்றாகவும் அமைந்தது.

**குழந்தைகள் எவற்றைக் கற்கிறார்கள்?**

குழந்தைகள் எழுத்துக்களை அடையாளம் காணவும், புரிதலோடு படிக்கவும் வடிவமாக எழுதவும்

இடம் விட்டு கோடு தொட்டு எழுத கற்கிறார்கள், என்று சொன்னால் அது முழுமையடையாது. கற்றல் கற்பித்தல் மாணவர்கள் செயல்முறை வழி கற்கும் பொழுது சக மாணவரோடு அன்பாய் பழகவும்,விட்டுக் கொடுத்து பழகவும் நல்ல பழக்கங்களையும் கற்றுக் கொள்கிறார்கள்.

**பிரதிபலிப்பு**:

நானே பேசிக் கொண்டிருந்த கற்பித்தலை மாற்றி பிள்ளைகளையும் பேச வைத்து அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து தெரியாததைக் கற்பிக்க முடிந்தது. இதற்கு இந்த 5E பாடத் திட்டம் வழி வகுத்தது.

இவ்வாறு மாணவர்களுடன் உரையாடும் பொழுது தான் அவர்கள் எவ்வளவு தூரம் சிந்திக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. பல நேரம், நம்மையே சிந்திக்க தூண்டுவதாகவும் அமைகிறது. ஒரு முறை யானைகளைப் பற்றி நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது, யானைகள் கூட்டம் கூட்டமாக தனது குடும்பத்தோடு வாழும் குட்டி யானையை அம்மா யானை நன்கு பார்த்துக் கொள்ளும், அதன் அம்மா மட்டுமில்லாது அந்தக் குடும்பமே குட்டியைப் பாதுகாக்கும் என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தபோது, “மணக்குள விநாயகர் கோவிலில் உள்ள யானை மட்டும் ஏன் தனியாக உள்ளது? அதற்கு குடும்பம் இல்லையா? ஏன் காட்டில் இல்லாமல் கோவில் வாசலில் கட்டிப் போடப் பட்டிருக்கிறது? போன்ற கேள்விகள் எழுந்தபோது என்னை ஆழ்ந்து சிந்திக்க வைத்தது. இது போலவே குதிரைக்கு ஏன் கடிவாளம் போடுகிறோம்? போன்ற கேள்விகள் என்னை வியப்பில் ஆழ்த்தியது. சிந்திக்க வைக்கும் உரையாடலில் நாம் ஈடுபட்டோமேயானால், தன்னைச் சுற்றி நடப்பதைக் கூர்ந்து கவனிக்கும் திறமையையும், அதைப் பற்றி யோசிக்கவும் தொடங்குகிறார்கள் என்பது உண்மை.

முதல் மூன்று மாதங்கள் அன்னையாய் இருந்த நான், பின் வந்த ஏழு மாதங்களில் ஆசிரியராகவும், தோழியாகவும் மாற முடிந்தது. மாணவர்களுக்குக் கற்றலினை TLM வைத்து நடத்தினால் நன்றாக இருக்கும் என்ற காரணத்தால் கற்றல் சிறப்பாக நடந்தது.

இறுதியான இரண்டு மாதங்கள் சொந்த காரணங்கள் காரணமாக மனதளவில் சிறிது தளர்ச்சி ஏற்பட்டதாலும் கடைசி இரண்டு மாதங்களில் பணி உயர்வு பெற்று பள்ளி மாறியதாலும் பிள்ளைகளை விட்டுப் பிரிய வேண்டி இருந்தது. எனது கற்பித்தல் நிறைவு அடையாமல் போய் விட்டது. முழுமையாக செய்திருந்தால் வெற்றி பெற்றிருப்பேன் என்று நினைக்கிறேன்.

**அடுத்தது என்ன?**

வரும் ஆண்டில் பணி உயர்வு பெற்ற நான், ஒரு வகுப்பு பிள்ளைகளுக்கு மட்டுமில்லாது ஐந்து வகுப்பு பிள்ளைகளையும் புரிதலோடு கற்பது எப்படி என்பதைச் செயல்வழியோடு, ஆசிரியர்களின் துணையோடு செய்ய வேண்டும். பிள்ளைகள் அனைத்து பாடங்களிலும் முன்னேற்றம் பெற வேண்டும்.



சு. தமிழரசி
அரசு தொடக்கப் பள்ளி,
தானம்பாளையம்

முந்தைய பள்ளியின் பெயர்:
அரசு தொடக்கப் பள்ளி
புதுக்குப்பம் (அ)
ஆசிரியர்கள்: 3
மாணவர்களின் எண்ணிக்கை: 17



வ. சுமதி
அரசு தொடக்கப் பள்ளி,
அரியாங்குப்பம் பேட்
ஆசிரியர்கள்: 2
மாணவர்களின் எண்ணிக்கை: 23

# வாருங்கள் விருப்பத்துடன் - மகிழ்வுடன் வாசிக்க

**எனது பள்ளி:**

புதுக்குப்பம் பள்ளியில் 17 மாணவர்கள் 3 ஆசிரியர்கள் உள்ளனர். அரியாங்குப்பம் பேட் பள்ளியில் தலைமையாசிரியருடன் 23 மாணவர்கள் 2 ஆசிரியர்கள் உள்ளனர். இங்கு படிக்கின்ற மாணவர்கள் பள்ளிக்கு அருகாமையிலேயே வசிக்கின்றனர். ஆகையால் எங்களால் பெற்றோரை உடனடியாகச் சந்திக்க முடியும். பள்ளியில் வகுப்பறை, சுற்றுச் சூழல், கடல் காற்று, இடவசதி என அனைத்தும் உண்டு. ஆனால் எங்கள் மாணவர்களுக்குப் பெற்றோர்களின் கவனிப்பு இல்லை. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்களின் குழந்தைகள் மட்டும் இங்கு படிகின்றனர். மற்ற குழந்தைகள் அருகில் உள்ள தனியார் பள்ளியில் படிக்கின்றனர். ஆசிரியர் பற்றாக் குறைவால் இரண்டு மற்றும் மூன்றாம் வகுப்பு மாணவர்கள் இணைந்து கற்பது, அவர்களது கற்றல் சூழலைப் பெரிதும் பாதிக்கின்றது.

**ஆசிரியராக எனது ஆர்வங்கள்:**

ஓர் ஆசிரியராக எங்களது அறிவை மென்மேலும் வளர்த்துக் கொண்டே இருப்பதில் எங்களுக்கு ஆர்வம் அதிகம். நிறைய புத்தகங்களை வாசிப்பது, மேற்படிப்பு படிப்பது, யோகா பயிற்சி செய்வது மற்றும் யோகப் பயிற்சிகளை மாணவர்களுக்குக் கற்பிப்பது, மாணவர்களின் தேவைகளை, விருப்பங்களை நிறைவேற்றுவது போன்ற பல ஆர்வங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

**புதுச்சேரி ஆசிரியர் வட்டத்தில் சேர்ந்ததற்கான காரணங்கள்:**

இக்குழுவைக் கற்றலுக்கான ஒரு தளமாகவே கருதுகிறோம். எங்களின் வகுப்பறை அனுபவங்களையும் சிக்கல்களையும் பகிர்ந்து அவற்றிற்கான விடைகளைக் கலந்தாலோசிக்கும் ஒரு இடம் தான் இந்த ஆசிரியர் வட்டம். கற்பித்தலில் புது உத்திகளைப் பயன்படுத்த ஆர்வம் ஏற்படுகிறது. பல ஆசிரியர்களின் அனுபவத்தைப் பெறுவதால் எங்களின் கற்பித்தல் எளிதாகிறது.

**கடந்த ஆண்டு எங்கள் வகுப்பறை:**

கடந்த ஆண்டு நாங்கள் எங்கள் மூன்றாம் வகுப்பில் முயன்ற சில செயல்பாடுகளையும் கையாண்ட உத்திகளையும் இங்கே எழுதியுள்ளோம்.

அ) விட்டுக்கொடு விருப்பத்துடன் பாடப்பகுதியை இரு ஆடுகள் ஆற்றில் மோதிக்கொள்ளும் கதையைப் படங்களைக் காட்டி விளக்கினோம். அதை நாடகமாக நடிக்கச் செய்தபோது மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றதுடன் தாங்களே கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து நடித்தனர். Big book தயார் செய்து, ஒரு கதையின் முதல் பாதியைக் கூறி மாணவர்கள் மீதிக் கதையை big book வாயிலாக வாசித்து அறியச் செய்தது மிகவும் சிறப்பாக இருந்தது.

ஆ) திருக்குறளை அவற்றிற்கு ஏற்ற கதைகள் மூலம் விளக்கினோம். பொதுவாகத் திருக்குறளை கற்கச் சிரமப்படும் மாணவர்கள், கதைகள் மூலம் கற்பிக்கப்பட்ட போது ஈடுபாட்டோடு மகிழ்ச்சியுடன் கற்றனர்.

இ) பள்ளியிலே கொண்டாட்டம் - பாடத்தை மாணவர்கள் ஆல்பம் தயாரித்தல், வகுப்பு இதழ் தயாரித்தல், குழுவாகச் செயல்பட்டுப் பள்ளி விழா ஒன்றைத் திட்டமிடல், வகுப்பில் நடித்துக் காட்டுதல் போன்ற செயல்பாடுகளின் வாயிலாகக் கற்றனர். இதனால் மாணவர்கள் பலமுறை பாடத்தை வாசித்து மனப்பாடம் செய்யும் அவசியம் ஏற்படவில்லை. இதன் விளைவாகத் தங்களாகவே ஒரு விழாவைத் திட்டமிட்டு நிகழ்த்த முடியும் என்ற தன்னம்பிக்கை அவர்களிடத்தில் வெளிப்பட்டது.

ஈ) மானின் விடுதலை என்பது ஒரு பாடல். இதில் உள்ள சில வார்த்தைகள் கடினமானதாக இருந்தது. எனவே பாடலை ஒரு கதையாகக் கூறி பின் அக்கதையை வாசிக்கச் செய்தோம். பிறகு பாடலை நடத்தினோம். கற்றல் மிக எளிதாகவும் இயல்பாகவும் நடந்தது. கடின வார்த்தைகளுக்கு மாணவர்களே பொருள் அளித்தனர். இதே பாடலில், வருணனைச் சொற்களை அறிமுகப்படுத்த பிங்கோ செயல்பாடு, வருணனைச் சொற்கள் அடங்கிய சுவரொட்டியைக் கொண்டு விளையாட்டுகள், படம் பார்த்து சொந்த வாக்கியங்களில் படத்தை விவரிப்பது போன்ற செயல்பாட்டுகள் எங்களுக்குப் பெரிதும் உதவின.

உ) தமிழின் சிறப்புகள் - பாடத்தைக் கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், செப்பு தகடுகள், செப்பு நாணயங்கள் அடங்கிய பட அட்டை போன்ற கற்றல்-கற்பித்தல் வளங்களைக் கொண்டு விளக்கினோம்.

## அனுபவப் பகிர்வு

**ஆய்வறிக்கை**

மூன்றாம் வகுப்பில் நாங்கள் செயல்படுத்திய பல்வேறு முயற்சிகளில் எங்களைக் கவர்ந்த, வகுப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திய, மற்ற ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பும் ஒரு செயல்திட்டத்தைக் கீழே எழுதியுள்ளோம்.

**வகுப்பறைச் சவால்கள்:**

- மாணவர்களுக்கு எழுத்துக்கள் மட்டுமே உள்ள பாடத்தைப் படிப்பதில் ஆர்வம் குறைவு.
- பாடப்புத்தகத்தை மட்டும் படிப்பதில் சலிப்பு
- புத்தகத்தில் இருப்பதை மட்டுமே படிப்பது; கருத்தைப் புரிந்து கொள்வதோ, அதற்கு மேலே சிந்திப்பதோ இல்லை.
- படித்ததைப் பகிர்வதில் சிக்கல்
- இணைந்து படிக்குபோது விட்டுக்கொடுக்கும் தன்மை இல்லை

**நோக்கத்தை அடைய மேற்கொண்ட முயற்சிகள்:**

எழுத்துகளுடன் படங்களையும் சேர்த்து பார்த்துப் படிக்க வைப்பதால் ஆர்வம் அதிகரிக்கும் என நினைத்தோம். மேலும் இவை பாடப்புத்தகமாக இல்லாமல் நாங்களோ அல்லது மாணவர்களோ தயாரித்த வளங்களாக இருந்தால், அவை மாணவர்களோடு நெருங்கிய ஒரு தொடர்பை ஏற்படுத்தி கற்றலை வலுப்படுத்தும் என எண்ணினோம். கற்றல் வளங்கள் மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் விதமாகவும் அனுமானித்துக் கூறக்கூடிய அளவில் இருக்கும் படியாகவும் பார்த்துக் கொண்டோம். இவற்றினூடே நற்பண்புகளை வளர்க்கும் செயல்பாடுகளையும் இணைத்துக் கொண்டோம்.



முதலில் பாடத்தை ஓரிருமுறை வாசித்தோம். இப்பாடத்திற்கான நோக்கங்களை வரிசைப்படுத்தினோம். நோக்கங்களை அடைவதற்கான செயல்பாடுகளை விவாதித்து எழுதினோம். பாடத்தை ஒரு கதையாக வடிவமைத்தோம். கதையில் ஆங்காங்கே சொற்களை நீக்கி அவ்விடத்தில் தகுந்த படங்களைப் புகுத்தினோம். இதற்காக இணைய தளத்திலிருந்து படங்கள் சிலவற்றைச் சேகரித்தோம்.

கூறப்படும் கதையின் பொருளை மாணவர்கள் புரிந்து கொண்டனரா என்பதை அறிய, இரு ஆடுகள் ஆற்றில் மோதிக்கொள்ளும் கதையைப் படக்கதையாக உருவாக்கினோம்.

மாணவர்களிடம் சுயமாக வாசிக்கும் பழக்கத்தை வளர்க்க பெரிய புத்தகத்தை (Big Book) தயாரித்தோம். பெரிய எழுத்துக்கள், குறைந்த வாக்கியங்கள் மற்றும் வண்ண மயமான படங்களைக் கொண்ட இப்புத்தகம் மாணவர்களை மிகவும் கவர்ந்தது.

இவைமட்டுமன்றி, விட்டுக் கொடுக்கும் பண்பை வளர்க்க இரப்பர் விளையாட்டைத் தேர்ந்தெடுத்து

அதற்குத் தேவையான பொருட்களையும் சுயமாக வாசிக்கும் சூழலை உருவாக்கத் தேவையான கதை அட்டைகளையும் தயாரித்து கற்பித்தலுக்குத் தயாரானோம்.




**கற்பித்தல் மற்றும் மதிப்பிடுதல் உத்திகள் பற்றிய சுருக்கம்:**

தயாரித்து வைத்திருந்த அனைத்து உபகரணங்களுடன் வகுப்பறையில் நுழைந்தோம். இரப்பர் வளைய விளையாட்டை மாணவர்கள் விளையாட வேண்டுமெனில், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தே ஆகவேண்டும். இதன் மூலம் விட்டு கொடுத்தல் என்ற பண்பை உணர வைக்க முடிந்தது.

இப்பண்பை மேலும் வலுப்படுத்த, மாணவர்களிடம் படக் கதைகளைக் கொடுத்து கதைகளைச் சரியான முறையில் அடுக்கச் சொன்னோம். ஆனால் அவர்கள் ஆடுகள் விட்டுக் கொடுத்த கதையையும் விட்டுக்கொடுக்காத கதையையும் கலந்து அடுக்கினர். எனவே கதையை மீண்டும் கூறி பின் அடுக்கச் செய்தோம். இப்போது சரியாக அடுக்கினர்.

மாணவர்களின் புரிதலின் ஆழத்தை மதிப்பிடுவதற்காக அவர்களை இக்கதையை முகமூடி அணிந்து நடித்துக் காண்பிக்கச் செய்தோம். தாங்கள் கேட்டு வரிசைப்படுத்திய கதையைச் சொந்த வாக்கியங்களாக மாற்றி நடித்துக் காட்டினர். குழந்தைத் தன்மையோடும் நகைச்சுவையோடும் அவர்கள் நடித்துக் காட்டியது எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

அதன்பிறகு வாசிப்புப் பயிற்சிக்காகப் படத்திற்கு உரிய வாக்கிய அட்டைகளைத் தந்து அவற்றையும் வரிசையாக அடுக்கச் செய்தோம். வாக்கிய அட்டைகளை மிக்க சிரமத்தோடு வாசித்து, ஒவ்வொரு படத்தோடும் பொருத்திப் பார்த்து, பின் வாக்கியத்தின் பொருளை அறிந்து வாக்கியங்களை வரிசைப்படுத்திய விதம் அருமையாக இருந்தது. வாசிக்கத் தெரியாத மாணவர்களும் சக மாணவர்களிடம் கேட்டு இச்செயல்பாட்டில் பங்கெடுத்துக் கொண்டது எங்களைப் பிரமிக்கச் செய்தது.

வாசிப்பின் மீது ஆர்வத்தை ஏற்படுத்த, முன்பே செய்து வைத்திருந்த பெரிய புத்தகங்களை அவர்களிடம் காண்பித்தோம். அவற்றைப் பார்த்தவுடன் அனைவரின் முகத்திலும் மகிழ்ச்சி. இம்மகிழ்ச்சி தொடரவும் வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தவும் பாதிக் கதையைக் கூறி மீதிக் கதையை வாசிக்கச்



செய்தோம். இருவராக இணைந்து வாசித்தனர். வாசித்து முடித்த பின் மற்ற மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். பிறகு புத்தகங்கள் பிறருக்கு மாற்றி அளிக்கப்பட்டு, வாசிப்பு தொடர்ந்தது.

சுயமாக வாசித்தலையும் வாசித்தவற்றைச் சொந்த நடையில் வெளிப்படுத்தும் திறனையும் மதிப்பிட மேலும் சில கதைகளை மாணவர்களுக்கு வழங்கினோம். குரங்கு அப்பத்தைப் பங்கிடும் கதை, ஒரு குழந்தைக்கு இருதாய் போட்டியிடும் கதை ஆகியவற்றை நாடகமாக நடித்துக் காட்டினர்.

**வகுப்பறை அனுபவங்கள்:**





இரு படக்கதைகளை இணைத்துத் தரும்பொழுது மாணவர்களிடையே முதலில் குழப்பம் இருந்தது. கதையைக்கூறிய பிறகு தெளிவாகக் கதைகளைப் பிரித்து வரிசைப் படுத்தினர். அதே கதையை நாடகமாக நடித்த பின், படங்களின் உதவிகொண்டு கதையின் வரிகளைப் வாசிக்க முடிந்தது. சொந்த நடையில் கதையைக் கூறவும் முடிந்தது.

பெரிய புத்தகத்தை மூன்றாம் வகுப்பு மாணவர்கள் வாசிக்கும் போது, மற்ற வகுப்பு மாணவர்கள் தாங்களும் வாசிக்க விருப்பம் தெரிவித்தனர். எனவே, மூன்றாம் வகுப்பு மாணவர்கள் வாசித்து முடித்தவுடன் மற்ற வகுப்பு மாணவர்களுக்கும் இப்புத்தகங்களைக் கொடுத்தோம். மாணவர்கள் இருவராக இணைந்து வாசித்ததால் வாசித்தல் எளிமையாக இருந்தது.

**பிரதிபலிப்பு:**

படமும் வரிவடிவமும் இணையும்போது வாசிப்பதில் ஆர்வம் அதிகமாகிறது. இனி எந்தப் பாடத்தையும் விடுகதை போல் மாணவர்கள் விரும்பும் வகையில் கூறி மாணவர்கள் அதை முழுமையாக உணர்ந்தபின் பாடத்தை நடத்தி அவர்களின் ஆர்வத்தை அதிகரிக்க வேண்டும் என்று முடிவெடுத்தோம். அதனால் பாடம் நடத்தியபின் மாணவர்களின் வாசிப்பு ஆர்வமுடனும் எளிதாகவும் அமையும்.

கேட்டல் / பேச்சுத் திறன், கற்பனைத்திறன், ஒப்பீட்டுப் பார்க்கும் திறன் போன்ற பல திறன்களை வளர்ப்பதற்கு ஏற்ற கற்றல் சூழலை உருவாக்கி, தகுந்த நேரத்தில் மாணவர்களுக்குத் துணைபுரிதலே கற்றலை ஆழ்நிலைக்கு எடுத்துச் செல்கிறது. அது மட்டுமின்றி, மாணவர்கள் தங்களை கற்றலில் முழுமையாக ஈடுபடுத்தி ஆர்வமுடன் கற்கின்றனர்.

இனி வரும் ஆண்டுகளில் கேட்டல், பேசுதல், வாசித்தல் ஆகிய திறன்களோடு எழுதுதல் திறனையும் மேம்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டுள்ளோம்.



# கற்றலில் கற்றல் கருவி - செயல்பாடு மற்றும் உரையாடல்

வீ. வீரப்பன்,
அரசு தொடக்கப் பள்ளிபள்ளி
ஐயங்குட்டிப் பாளையம்
மாணவர்களின் எண்ணிக்கை: 152

கடந்த மூன்று ஆண்டுகளாக இதே பள்ளியில் முதல் வகுப்பு குழந்தைகளுக்கு ஆசிரியராகப் பணியாற்றுகின்றேன். என் வகுப்பில் 26 குழந்தைகள். அருகிலுள்ள அரசு குடியிருப்புப் பகுதியிலிருந்து பெரும்பாலான குழந்தைகள் இப்பள்ளிக்கு வருகின்றனர். இவர்களின் பெற்றோர்கள் வெவ்வேறு வகையான தினக்கூலி வேலைகளில் ஈடுபடுபவர்கள். பள்ளியில் நிறைய மரங்கள் உள்ளன. பள்ளிக்குப் பின்புறம் பூங்கா ஒன்று இருக்கிறது.

**என்னைப் பற்றி**: கடந்த பத்து ஆண்டுகளாக முதல் வகுப்பு ஆசிரியராக மட்டுமே இருக்கிறேன். கற்றல் கற்பித்தல் கருவிகளை விதம் விதமாகத் தயாரிப்பதிலும் குழந்தைகளுக்கு ஏற்றசெயல்பாடுகளில் ஈடுபடுவதும் எனக்குப் பிடித்தமானது. புதிய விஷயங்களை அறிந்து கொள்வது எனக்குப் பிடிக்கும்.

கடந்த ஆண்டு, என் வகுப்பறையை ப்ரிண்ட் ரிச் (print rich) சூழலோடு வைத்திருந்தேன். முன்பெல்லாம் கற்றல் கருவிகளை நான் தயாரிப்பேன். ஆனால் இப்பொழுது மாணவர்களுடன் சேர்ந்து தயாரிக்கிறேன். கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் பல புதுமையான செயல்பாடுகளை வகுப்பறையில் செயல்படுத்தினேன். தமிழில் பாடத்திட்டம் தயாரித்து கற்பித்தலில் ஈடுபட்டேன்.

**ஆசிரியர் வட்டத்தில் இணைந்ததிற்கான காரணம்**:

ஆசிரியர் குழுவில் உரையாடல் மற்றும் குழுகற்றலில் ஈடுபட்டு, ஈடுபாட்டோடு கற்றல் கற்பித்தலில் செயல்படவும், மற்ற ஆசிரியர்களின் அனுபவத்தை அறிந்துகொள்ளவும், அரசு பள்ளியில் இருக்கும் இன்றைய சவால்களான கற்றல் குறைபாடுடைய குழந்தைகள் மற்றும் அதி-செயல்பாடுடைய குழந்தைகளைக் கையாளும் முறையைப் பற்றி அறிந்து கொள்ளவும் இவ்வுலகில் நடக்கும் பல்வேறு விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் புதுவை ஆசிரியர் வட்டத்தில் என்னை இணைத்துக் கொண்டேன்.

## அனுபவப் பகிர்வு

**கற்றலில் கற்றல் கருவி - செயல்பாடு மற்றும் உரையாடல்**

கற்பித்தல் கருவிகள் சமீப காலத்தில் விதம் விதமாக வகுப்பறையில் பயன்படுத்தப் படுகிறது. கல்வியில் ஏற்பட்ட மிகப் பெரும் மாற்றமாகக் கூட அவற்றைக் கொள்ளலாம். இம்மாற்றம் வகுப்பறைகளை மகிழ்ச்சியானதாக ஆக்குகிறது. கற்பித்தல் கருவிகளைத் தயரிப்பதில் நானும் முனைப்புடன் ஈடுபட்டு வந்தேன். கலர் காகிதங்களையும் அட்டைகளையும், துணிகளையும் கொண்டு எழுத்துக்களையும் எண்களையும் வெட்டி ஒட்டித் தொங்கவிட்டு என வகுப்பறை குதூகலமாகக் காட்சியளிக்கும். கற்றல் கருவிகள் குழந்தைகள் மகிழ்ச்சியான கற்றலில் ஈடுபட உதவியாக இருக்கிறது. இருந்த போதும் அவற்றை பயன்படுத்தும்பொழுது கற்றல் மேம்படுகிறதா? கற்றல் கருவிகள் அதனுடன் இணைந்த செயல்பாடுகள் மற்றும் அச்செயல்பாடுகளுடன் நடைபெறும் உரையாடல் ஆகியவை இணையும்பொழுதுதான் நாம் எதிர்பார்த்ததை கற்பிக்க ஏதுவாக இருக்கும்.. குழந்தைகளுடன் நடத்தப் படும் உரையாடல் என்பதை ஆசிரியர் தொடர் செயல் பாடுகள் மூலம் செழுமைப் படுத்த வேண்டியுள்ளது. சென்ற ஆண்டுவரை கற்றல் -கற்பித்தல் கருவிகள் தயாரிப்பதில் கவனம் செலுத்திய நான் முடிந்த ஆண்டில் வித்தியாசமான முறையைக் கையாண்டேன். மணலில் எழுத வைப்பது, குறிப்பிட்ட வடிவமுடைய பொருட்களைக் கொண்டுவரச் சொல்வது எனத் துவங்கியது. நான் எதிர்பார்ப்பவற்றை குழந்தைகள் செய்வதற்கு அவர்களுடன் நிறைய பேசவேண்டும். கற்பித்தல் கருவிகளை குழந்தைகளுடன் இணைந்து தயாரித்தல் பின் அவற்றைக் கொண்டு செயல்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் அவற்றின் மூலமாக மேற்கொள்ளப்படும் உரையாடல் என்ற கருத்தாக்கத்தை முன் வைத்து செயல்படத் துவங்கினேன். இம்முறையில் என் வகுப்பறையில் நடைபெறும் உரையாடல்கள் எனக்குள்ளும் மாணவர்களுக்குள்ளும் பெறும் மாற்றத்தை ஏற்படுத்தியதாக உணர்கிறேன்.. அதனால் அவற்றை இங்கு பதிவு செய்துள்ளேன்.

**உரையாடலின் வடிவங்கள்**:

உரையாடல் பற்றிய அறிமுகத்துடன் துவங்கலாம் என எண்ணுகிறேன். 6 வயது குழந்தைக்கு நாம் விரும்பியதைக் கற்பிப்பதற்கு உரையாடுதல் என்பது அத்தியாவசியமாகிறது. உரையாடல் என்பது ஆசிரியர்கள் தொடர்ந்து செய்யும் நிகழ்வுதான். நாம் யாருடன் வாழ்கின்றோமோ அவர்களுடன் உரையாடல் நடத்துவது என்பது இயல்பான ஒன்றுமட்டுமல்ல, அத்தியாவசியமான ஒன்றாகவும் இருக்கிறது. தொடர்புகொள்ள, புரிந்துகொள்ள செயல் படுத்த, செழுமைப்படுத்த என வெவ்வேறு விதங்களில் வகுப்பறையில் உரையாடல் உதவியாக உள்ளது. ஐந்துமாதக் குழந்தையுடன் ஓயாது பேசுவதையும், பேசியதையே திரும்பத் திரும்பப் பேசச்சொல்லி ரசிப்பதும், என வெவ்வேறு விதமான உரையாடல்களுக்கு வாய்ப்பளித்து வளர்கின்றனர் குழந்தைகள். அவர்கள் பள்ளிக்குள் வந்ததும், பள்ளியை ஒரு அந்நியமான இடமாக ஆக்காமல் இருப்பது நல்லது எனத் தோன்றியது. இருந்தபோதும் ஆரம்பப் பள்ளியில் முதலாம் வகுப்பு குழந்தையுடன் உரையாடுவது என்பது என்ன என்பதைப் பற்றி

யோசிக்கத் துவங்கினேன். இவ்வுரையாடல் பல நேரங்களில் கேள்வி பதில் நிகழ்வாக மாறியுள்ளது. சாப்பிட்டாயா? எழுதினாயா? ஏன் வரவில்லை?... (உரையாடல் என்பதில் நாம் கேள்வி கேட்கலாம் அவர்களும் கேள்வி கேட்பர். நாம் கருத்துச் சொல்லலாம் அவர்களும் கருத்துசொல்வர், என்றிருந்தால் நலமாக இருக்கும். உரையாடல் குறிப்பிட்ட செயல்பாடுகள், நிகழ்வுகளை நோக்கியதாகவும் இருக்கலாம் என்றுணர்ந்த பொழுது மகிழ்ச்சியாக இருந்தது.) முதல் வகுப்புக் குழந்தைகளுக்கு மொழி என்பது பேச்சாக மட்டுமே இருக்கிறது. அதில் அவர்கள் அறிந்த வார்த்தைகள், அவர்கள் மற்றவர்களோடு தொடர்பு கொள்ளுதல் என எல்லாம் கலந்து இருக்கிறது. நம் செயல்பாடுகளில் உரையாடல் என்பது அவர்களை மதித்தல், அவர்கள் புரிந்து கொள்வதை அறிதல், அவர்களுக்குப் பிடித்தமான வகையில் இட்டுச் செல்லுதல் என முக்கியத்துவம் பெறுகிறது. அதோடு அவர்களது மனநிலையைச் சுலபமாகப் புரிந்துகொள்ள உதவியாக உள்ளது. இவையெல்லாவற்றையும்விட நம்மை அவர்கள் செழுமைப் படுத்துகின்றனர். இதற்கான உதாரணத்திலிருந்து துவங்கலாம் என எண்ணுகிறேன்.



- கரும்பலகையில் எழுதிய வார்த்தைகளைக் குச்சியைக் கொண்டு சுட்டிக் காட்டி வாசித்துவிட்டு அதே குச்சியைக் கொண்டு ‘‘இங்க வா!’’ என்று ஒரு மாணவியைக் காட்டி அழைத்தேன். “வரமுடியாது” என்று தலையாட்டினாள்.

  “ஏன் வர மாட்ட?” என்றேன்.

  “பயமா இருக்கு!” என்றாள்.

  “ஏன்?” என்றேன்.

  ஸ்கேலைக் காட்டினாள்.

  உடனே அதைத் தூக்கி எறிந்துவிட்டு, “வா!” என்றேன்

  வேகமாக அருகில் வந்தாள்.

  அவள் என்னைப் பார்த்து பயப்பட வில்லை.

என் கையில் இருந்த அடிக்காத குச்சியைப் பார்த்து பயந்தாள். அடிக்காவிட்டாலும் கூட குச்சி வகுப்பறையில் குழந்தைகளைப் பயமுறுத்துகிறது. என்பதை இதை விட எப்படி உணருவது?

உணர்தல் அழைத்துச் செல்லும் பாதை சிறப்பானது.

**உரையாடலுடன் செயல்பாடுகள்**:

- என் இரண்டாவது உதாரணம், பாடத்திற்காக நான் மேற்கொண்ட செயல்பாடுகளை மையமாகக் கொண்டு நடைபெற்ற ஒன்று.

- படுக்கைக் கோடு நிற்கும் கோடு கற்பிப்பதற்கான செயல்பாடுகளைத் தயாரித்து பாடம் நடத்தினேன். அப்பாடம் மற்ற பாடத்திற்கு உதவியாக இருந்ததைக் குறிப்பிட்டால் நல்லது. நான் திட்டமிட்டிருந்த செயல்பாட்டை வகுப்பறை உரையாடலுக்கு வலிமை சேர்த்ததாகவே கருதுகிறேன். ஒரு நிற்கும் கோடு ஒரு படுத்திருக்கும் கோடு என்று குழந்தைக்கு சொல்வதைக்காட்டிலும்;

ஒரு குழந்தையை வந்து நில் என்றேன்.

வந்து நிற்கிறது.

என்ன செய்கிறாய் என்று கேட்கிறேன்.

“நிக்கிறான்” என்கின்றனர் குழந்தைகள்.

(ஒரு குச்சியை இன்னொரு குழந்தையிடம் கொடுத்து ‘‘நிற்க வை’’ என்றேன்)

இரண்டு பைகளைக் கொண்டுவந்து வைத்து அதற்கிடையே நிற்க வைத்தனர்.

குச்சி என்ன செய்யுது? என்றேன்.

நிற்கிறது என்றனர்.

இதைப் போலவே படுத்திருக்கும் கோட்டினை புரிந்துகொள்ள குச்சியை பயன் படுத்திப் பார்த்தோம்.

கடைசியாக கரும்பலகையில் நிற்கும் கோடு மற்றும் படுத்திருக்கும் கோடு வரைந்த பொழுது அவர்களாகவே அதைக் குறிப்பிட்டனர். இது எல்லோருக்கும் சுலபமாகப் புரிந்தது.

இச்செயல்பாட்டை நான் மறந்துவிட்டேன். புரிந்த இப்பாடம் வேறு ஒன்றில் வெளிப்பட்டது. வேறொரு நாள் “ட, ப” எழுதி சொல்லிக்கொடுத்த பொழுது மாணவர்கள் அதனுடன் இணைத்ததை பகிர்ந்து கொண்டாக வேண்டும்.

ஒரு நிற்கும் கோடும் படுத்திருக்கும் கோடும் சேர்ந்து “ட” என்றாள் ஒரு பெண். அதைப் பார்த்த மற்றொரு குழந்தை “ப” வைக் காட்டி இதில் இரண்டு கோடு நிற்கிறது என்றது. நான் சற்றும் எதிர்பாராத ஒன்று. அதோடு நான் அதுபற்றி யோசிப்பதற்குள் அடுத்த மாணவி அதை ஒட்டி பதில் சொன்னபொழுது இன்னும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனாலும் கணக்கையும் மொழியையும் குழப்பிக்கொள்ளக் கூடாது என்பதற்காக என் உரையாடலைத் தொடர்ந்தேன்.

எதுக்கு அங்க நிக்குது என்றேன்?

“ட“ வுக்கு நிக்குது. என்றான் ஒரு குழந்தை.

“இங்க ஒண்ணு இங்க ஒண்ணு நிக்கிது, இது படுத்திருக்கு” என்று “ப” வைப் பற்றிக் கூறியபொழுது, எனக்கு அவர்கள் மிகப் பெரிய பாடம் சொல்லிக் கொடுத்ததுபோல் இருந்தது. சூலை மாதத்தில் நடந்த இம்முறையைக் என்னை இவ்வருடம் முழுக்க இப்பானியைக் கையாளத் தூண்டியது.



**கற்றல் கருவி/செயல்பாடு/உரையாடல்**:

• வண்ண வண்ண பூக்கள் பாடம் நடத்திய பொழுது பூக்கள் பறித்துக்கொண்டு வரும்படி கேட்டுக்கொண்டேன். அவர்கள் பறித்துவந்த பூக்கள் பூக்கடையை வகுப்பறையில் வைத்தது போல் இருந்தது. அப்பகுதியில் பூத்த பூக்களும் கடையில் வாங்கிய பூக்களுமாக மல்லிப் பூ, ரோஜாப் பூ, செம்பருத்திப்பூ... எனப் பெயரும் வண்ணமும்கூட அவர்களுக்குத்

தெரிந்தது. குழந்தைகள் மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்த்தால் பூக்கள் பறித்தது பற்றிக் கேட்க வேண்டாம் எனத் தோன்றியது. ஆனால் அது போன்ற செயலுக்கு மாற்று என்ன என்பதைப் பற்றி என் மனம் யோசித்துக் கொண்டே இருந்தது. வண்ண வண்ண கன சதுரப் பாருளை உருவாக்க முடிவு செய்தேன். இப்பொருளை வெவ்வேறு செயல்ளுக்கு வகுப்பறையில் பயன்படுத்தலாம். முதலில் அது வண்ணங்களுக்கு, பின் அதன் மேல் எழுத்தை எழுதலாம்



அதன் பின் ஒவ்வொன்றிலும் ஒரு வார்த்தைக்கான எழுத்துக்களை எழுதி கண்டு பிடிக்கச்செய்யலாம் என முடிவு செய்தேன். வண்ண வண்ண காகிதங்கள், அட்டைகள் ஆகியவற்றை வெட்டி வைத்துக்கொண்டு அவர்களுக்குச் செய்யக்கற்றுக் கொடுத்தேன். அவர்கள் உட்கார்ந்து பசையை வைத்து ஒட்டினர். வகுப்பறை ஆர்ப்பாட்டமாக இருந்தது. ஆகஸ்ட் மாதத்தில் வந்து சேர்ந்து அழுது கொண்டே இருந்த ஒரு மாணவன் அழுகையை நிறுத்தி வேடிக்கை பார்ப்பவனாக மாறினான். ஆறு வண்ணங்களில் ஏறக்குறைய ஐம்பது கனசதுரங்களைத் தயாரித்தனர். வழக்கம் போல் சரியாக ஒட்டிய மாணவர்கள் இது என்னுடையது என்று அவர்களுக்கு அருகிலேயே வைத்துக் கொண்டனர். அதிகம் செய்தவர்கள் நான் மூனு செய்தேன் என்றனர். ஒவ்வொருவருடையதாக முடித்து காயவைத்து ஒவ்வொரு கலரையும் தனித்தனியாகப் பிரித்து வகுப்பறை சுவறில் அடுக்கினேன். ப ச் சை , மஞ்சள், நீலம், வெள்ளை, கருப்பு, சிவப்பு - வண்ணங்கள் அத்துபடி.

இக்கன சதுரத்தின்மீது மீண்டும் வெள்ளைத் தாளை ஒட்டும் வேலை நடைபெற்றது. ஒவ்வொரு புறமும் ஒரு எழுத்தை எழுதிக்கொடுத்தேன் அவ்வெழுத்தில் அவர்கள் வண்ணம் தீட்டினர்.

- இக்கன சதுரத்தைக் கொண்டு வார்த்தைகள் உருவாக்கினோம்.“ படம்” என்று நான் சொன்னால் நான் குறிப்பிடும் மாணவர் அதை சேர்த்து வைப்பர். ஒரு நல்ல பயிற்சி விளையாட்டாக அது இருந்தது. எழுத்துக்களை அடையாளம் கண்டு எடுத்து அவற்றை வார்த்தையாக மாற்றினர். இதற்குமுன் அவர்களுடன் அமர்ந்து எழுத்துமாலை செய்தோம். இப்பொழுது வார்த்தைகளை மாணவர்கள் சுலபமாக வாசித்தனர். முக்கியமாக அவர்கள் மகிழ்ச்சியாகவும் அழகாகவும் மிகப்பெரிய வேலையைச் செய்யும் உணர்வுடனும் அவர்கள் செய்தனர்.

- அடுத்தடுத்து இது போன்ற வேலைகளைச் செய்யத்தூண்டியது. ஒவ்வொரு செயல்பாட்டுடனும் அது எதற்கு என்பதைப் பற்றிப் பேசும்பொழுது அவர்களால் காரணத்தைச் சுலபமாகப் புரிந்துகொண்டு செயல்பட முடிந்தது. இதனால் இது ஒரு தயாரிப்பிற்கான செயல்பாடாகவும் மாறிவிடுகிறது.

இன்னொரு முறை அட்டையில் முகமூடி செய்து விலங்குகள் போல் கத்தியது, பேசியது என்றொரு செயல்பாட்டை வடிவமைத்திருந்தேன் அதுவும் சிறப்பாக இருந்தது. இதன் தொடர்ச்சியாக நடந்த ஒரு அனுபவத்தையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஒரு மாணவனின் அம்மா வந்தவர்கள் என்னிடம், “ சார் ராத்திரி எல்லாம் அவன் உங்களைப்போலவே நடித்துக் கொண்டு இருக்கிறான்.” என்றார்கள்.

வகுப்பறையில் அவனை செய்து காட்டச் சொன்னேன். அவ்வளவு அழகாகச் செய்தான்.

பாடலின் ஒவ்வொரு வரியையும் சொல்லி விட்டு, என்னை போல் செய்தான்

“ காக்கா அந்தப் பக்கம் கா கா கா”

சொல்லு - என்றான்

கூறி விட்டு “ குருவி அந்தப் பக்கம் கீ கீ கீ”

சேந்து சொல்லுங்க - என்றான்.

பின் அடுத்த வரியைக் கூறினான்.

இப்படியே அடுத்தடுத்த வரிகளைக் கூறினான்.

- சத்தமாகச் சொல்லுங்க. என்று அவன் முடித்ததும் அடுத்த மாணவன் தான் செய்து காட்டுவதாக எழுந்து வந்தான்.

- இங்க வா! என் பக்கத்துல உக்காரு... என்றான்.

என் செயல்பாடுகளை மாணவர்கள் மூலமாகப் பார்க்கும் பெரும் பேறு பெற்றதாக இருந்தது.

இந்நிகழ்வை முகமூடி மற்றும் அது சார்ந்த செயல் திட்டங்களுடன் இணைத்துப் பார்ப்பதா? என்னைப் பற்றியது என்று பார்ப்பதா? என்ற குழப்பம் என்னில் இருந்தது.

**மாணவர்களை மதித்தலும் அவர்களால் என்ன முடிகிறது, முடியவில்லை என்பதை அறிந்து கொள்ளவும். அதற்கான காரணத்தை அறிவதற்கும், அவர்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கின்றனரா என்பதைப் புரிந்துகொள்ளவும் உரையாடல், செயல்பாடுகள் மற்றும் கற்பித்தல் கருவிகள் என ஒவ்வொன்றுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. அவை சில நேரங்களில் தனித்தனியாகவும் பல நேரங்களில் இணைந்த ஒன்றாகவும்செயல்பட வேண்டியுள்ளது.**



மு. சாந்தகுமாரி
அரசு தொடக்கப் பள்ளி,
முருங்கப்பாக்கம்.

ஆசிரியர்கள்: 8
மாணவர்களின் எண்ணிக்கை: 169

# மாற்றம் ஒன்றே மாறாதது

‘மாணவர்களை ஆற்றுப்படுத்துவது மட்டுமே ஆசிரியர்களின் கடமையன்று ஆசிரியர்களும் மாற்றங்களுக்கு உட்பட வேண்டும்’ - இது மாணவர்களிடமிருந்து நான் கற்ற பாடம்.

**எனது பள்ளி**:

எனது பள்ளியில் 169 மாணவர்களும் ஆசிரியர்களும் தலைமை ஆசிரியருடன் இணைந்து செயல்படுகிறோம். இங்கு படிக்கின்ற மாணவர்கள் பொருளாதார நிலையில் பின்தங்கியே உள்ளனர். அனைத்து பெற்றோர்களும் கூலித் தொழிலாளர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் தினசரி பலவித பிரச்சனைகளை வாழ்க்கையில் எதிர்கொள்கின்றனர்.

எங்கள் பள்ளி சிறந்த அழகிய தூய்மையான ஒரு பள்ளி. தேவையான எண்ணிக்கையில் வகுப்பறைகள், நல்ல வெளிச்சம் மற்றும் காற்றோட்ட வசதிகளை உடையது. தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் ஒற்றுமையாகச் செயல்படுவதால் எங்கள் பள்ளி அனைவராலும் பாராட்டப் படுகிறது. தூய்மை இந்தியா வாரம், கணித மேதை இராமானுஜர் வாரம், தேசிய பசுமைப்படை சார்பில் பல விழாக்கள், கூட்டங்கள், ஆண்டுவிழா போன்ற அனைத்தும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

தினம் காலைக்கூட்டத்தில் மருத்துவக்குறிப்பு, அறிவியல் செய்தி, திருக்குறள், பொது அறிவு செய்திகள் போன்ற பல செய்திகள் மாணவர்களால் கூறப்படுவதுண்டு. பல தனியார் பள்ளிகளிலிருந்து மாணவர்களை எங்கள் பள்ளியில் சேர்கின்றனர். பெற்றோர்களுக்கு அரசு பள்ளியின் மீது தனி மதிப்பு ஏற்பட முன்னோடியாக எங்கள் பள்ளி இருந்து வருகின்றது.

இருப்பினும் மாலை மற்றும் இரவு நேரங்களில் சமூக விரோதிகளால் நடைபெறும் சீர்கேடுகள் எங்களுக்குச் சவாலாகவே இருக்கின்றன. காலையில் பள்ளியில் உடைந்த பாட்டில் துண்டுகள் எங்கும் நிறைந்து இருக்கும். தினமும் அவற்றையெல்லாம் சுத்தம் செய்வதே எங்களின் முதல்வேலையாக இருக்கிறது. ஊர் மக்கள் சிலர் பள்ளி வளாகத்தில் கழிவுப்பொருட்களைப் கொட்டும் இடமாகவும் கழிவறையாகவும் பயன்படுத்துவது வருத்தத்தை அளிக்கிறது.

**ஆசிரியராக எனது ஆர்வங்கள்:**

சிறுவயதிலிருந்தே வகுப்பில் முதல் மாணவி, வகுப்புத் தலைவி, பள்ளித் தலைவி எனப் பல பொறுப்பில் இருந்திருக்கிறேன். பள்ளிப் பருவத்திலேயே அனைவரின் சந்தேகங்களுக்கும் விடையளிப்பேன். சக மாணவியருக்குப் படிப்பில் உதவி செய்வேன். எனது ஆசிரியர்களும் “நாளை நீ ஆசிரியராகத்தான் வரப் போகிறாய்” என்று என்னை வாழ்த்திப் பாராட்டுவர். எனது ஆசிரியர்களிடம் நான் அதிக மதிப்பும் பற்றும் வைத்திருந்தேன். அதனால் நானும் ஒரு சிறந்த ஆசிரியராக உருவாக வேண்டும் என்ற கனவு என்னுள் வளர்ந்து கொண்டே இருந்தது. இந்த எண்ணம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி வரை தொடர்ந்ததால் எனக்கு ஆசிரியப் பணி செய்வதில் சுமையோ, வருத்தமோ இருந்ததில்லை.

என்னிடம் படித்த பல பிள்ளைகள் இன்று பலதுறைகளில் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றனர். இதை அவர்கள் என்னிடம் கூறும் போது மட்டற்ற மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகிறேன். ஒருபுறம் திருப்தி ஏற்பட்டாலும், மறுபக்கம் என் பணி இன்னும் முழுமை பெறவில்லை.

சமுதாயச் சீர்கேடுகளை மாற்ற வேண்டும், பழைய பண்பாடு கலாச்சாரம் நிலைபெற நல்ல விதைகளை மாணவர்களிடத்தில் தூவவேண்டும் , ஒவ்வொரு விதையும் விருட்சமாக வளர்ந்து நாளைய பாரதம் சிறக்க பிள்ளைகளை வல்லவர்களாக்க வேண்டும் போன்ற எண்ணங்கள் ஏக்கங்களாக இன்றும் என்னுள் அரித்துக் கொண்டிருகின்றன.

மாணவர்களுக்கும் சக ஆசிரியர்களுக்கும் உதவும் வகையில் பயனுள்ள புத்தகங்கள் எழுத வேண்டும். இந்த ஆர்வம் என் பணி நிறைவு வரை... இல்லை இல்லை என் வாழ்நாளின் இறுதி நொடிவரை பிறருக்கு உதவும் வகையில் இருக்க வேண்டும் என்பதே எனது குறிக்கோள்.

இந்த உலகை விட்டு மறையும் பொழுது என் நினைவாக எதையாவது விட்டுச் செல்ல வேண்டும் என்ற பேரவா என்னுள் நிறைந்திருக்கின்றது.

**புதுச்சேரி ஆசிரியர் வட்டத்தில் சேர்ந்ததற்கான காரணங்கள்:**

‘ஆசிரியர் என்றாலும் நானும் ஒரு மாணவியே’. தினம் நான் வகுப்பறையில் கற்றுத் தெளிவது ஏராளம். வகுப்பறையில் நிலவும் பலவகையான சிக்கல்களுக்கு எனது பார்வையில் தீர்வு காண்பதை விட மற்றவர்களுடன் கலந்துரையாடும் போது சவாலுக்கான தீர்வுகள் கிடைக்கின்றன. இந்த வாய்ப்பை ‘புதுச்சேரி ஆசிரியர் வட்டம்’ எனக்கு அமைத்துக் கொடுத்துள்ளது. குறுகிய வட்டத்தில் என் சிந்தனை, படைப்பு, செயலாக்கம் போன்றவற்றை அடக்கிக் கொள்ள எனக்கு விருப்பம் இல்லை. பலருடைய உழைப்பு, முயற்சி, அனுபவம் போன்றவற்றைத் தெரிந்து கொள்வதால் என் பணி மேலும் சிறக்கும் என்ற ஆழமான நம்பிக்கை எனக்குள் உருவாவதற்கு இவ்வட்டம் உறுதுணைபுரிகிறது.

நூலகத்திற்கு ஏன் செல்கிறோம்? பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் கற்பித்தலுக்குத் தேவையான செய்திகளைச் சேகரிக்கவும் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும் எனப் பல காரணங்கள் உண்டு. இது போல மற்ற ஆசிரிய நண்பர்களுடன் உரையாடும் போது எனது கற்றலை மேம்படுத்திக் கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைகிறது. சரியான பாதையில் செல்கிறோமா என என்னை நானே சோதித்துக் கொள்ளவும் என்னைப் புதுப்பித்துக் கொள்ளவும் எனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் ஓர் அற்புதமான தளமாக இதை நான் கருதுகிறேன்.

**கடந்த ஆண்டு என் வகுப்பறை**

கடந்த ஆண்டு என் வகுப்பறையில் நான் எனது ஐந்தாம் வகுப்பு மாணவர்களோடு சேர்ந்து செயலாற்றிய பல்வேறு முயற்சிகளை இங்கே பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

அ) தஞ்சைப் பெரிய கோயில் - என்ற பாடத்தை நடத்தும் பொழுது இக்கோயிலைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தவற்றை எழுதுங்கள் என்று கூறினேன். சிலர் கோவிலைப் படமாக வரைந்தனர். வேறு சிலர் ஒரு பக்கத்திற்கு எழுதியிருந்தனர். ஒரு மாணவி கோவிலில் குடம் குடமாக ஊற்றும் பாலை அபிஷேகத்திற்குப் பிறகு குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் கொடுக்கலாம் என்று எழுதியிருந்தாள். மற்றொரு மாணவி “கோவிலுக்குப் போகிறாயா? இதோ நான் டிப்ஸ் தருகிறேன்.” என்று எழுதியிருந்தாள். இதையெல்லாம் பார்க்கும் போது எனக்கு வியப்பாகவே இருந்தது.

ஆ) கலை உலகில் கலைவாணர் என்ற பாடம் குழந்தைகளின் கற்பனை வளத்தைப் பெருக்குவதாக அமைந்தது. ஒரு நகைச்சுவைப் படத்தைப் பார்த்து அதை ஒரு கதையாக வடிவமைத்துப் பின் பத்து நிமிடத்தில் ஒரு நாடகமாக நடித்துக் காட்டும் திறன் மாணவர்களிடம் இருப்பதைக் கண்டேன். ஒவ்வொரு பாடம் நடத்தும் போதும் மாணவர்களின் நடிக்கும் திறனை வளர்க்க நான் எடுத்த சிறுசிறு முயற்சிகளின் தொகுப்பாகவே இதைக் கருதுகிறேன். அதுமட்டுமின்றி, கதையிலிருந்த புதிய வார்த்தைகளுக்குப் பொருள் கூறியதோடு மிக எளிய உதாரணங்களையும் அளித்தது எனக்கு வியப்பாகவே இருந்தது. உதாரணமாக ‘பெருமை’ என்ற சொல்லுக்கு “நாம் முதல் பரிசு வாங்கி விட்டால் நம் பெற்றோர் மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவார்கள்” என்றான் ஒரு மாணவன். ‘பொறாமை’ என்பதற்கு “நீங்கள் யாருக்காவது good போட்டு விட்டால் அவனுக்கு மட்டும் good போட்டீங்களே, எனக்கும் போடுங்க என்று கேட்பது” என்றனர். மிக எளிமையான பொருள் விளக்கம். என்னால் கூட இவ்வளவு எளிமையாக எடுத்துச் சொல்ல முடியுமா என்ற கேள்வி என்னுள் எழுந்தது.



இ) போரைத் தடுத்த புலவர் - என்ற பாடத்திற்குப் ‘பொம்மலாட்டம்’ செய்யுமாறு மாணவர்களைத் தூண்டினேன். பொம்மைகள் செய்யத் தேவையான பொருட்களை வகுப்பறையில் வைத்தேன். ஒவ்வொரு குழுவும் ஒரு கதையைத் தேர்ந்தெடுத்து அக்கதைகேற்ற பொம்மைகளைச் செய்து பொம்மலாட்டத்தையும் நிகழ்த்தினர். ஒவ்வொரு முறையும் என் மாணவர்கள் என்னைப் பெருமையடையவே செய்கின்றனர்.

இவைமட்டுமன்றி களப்பயணமாக அருகேயுள்ள கைவினை கிராமத்திற்கு அழைத்துச் சென்றேன். மாணவர்கள் அனைவரும் கலைப்பொருட்கள் செய்யும் விதத்தைப் பார்த்தும் அவர்களிடன் கேட்டும் அறிந்தனர். பள்ளிக்கு வந்ததும் 'காகித மலர்' ஒன்றைச் செய்தனர். பள்ளியில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் என் மாணவர்கள் பங்கேற்க ஊக்கப்படுத்துகிறேன். தினம் நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளேன். தினம் ஒரு தலைப்பில் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதச் செய்கிறேன். எளிய பாக்கள் எழுதும் ஆர்வத்தைத் தூண்டுகிறேன். மதிய இடைவெளியின் போது சிறுவர் இதழ்களை வாசித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வழக்கத்தை உருவாக்கிக் கொண்டு வருகிறேன்.

## அனுபவப் பகிர்வு

**ஆய்வறிக்கை**

ஐந்தாம் வகுப்பில் பல புதிய முயற்சிகளைச் செயல்படுத்தி இருக்கிறேன். அதில் என்னைக் கவர்ந்த, மாற்றத்தை உருவாக்கிய முயற்சிகளைப் பற்றி மற்ற ஆசியர்களுடன் பகிர்ந்து கொண்டு இருக்கிறேன். அவற்றுள் ஒன்றைக் கீழே எழுதியுள்ளேன்.

**வகுப்பறைச் சவால்கள்**:

மாணவர்கள் ஒருவருக்கொருவர் பொறாமைப்படுதல், சண்டையிடுதல், கோபப்படுதல், வெறுப்பைக் காட்டுதல் என வகுப்பறை எப்போதும் இரைச்சலாக இருந்தது. இதனால் கற்பதிலும் குழுச்செயல்பாடுகளிலும் சிறப்பான விளைவுகளை எதிர்பார்க்க முடியவில்லை. மாணவர்கள் அடுத்தவர்களைக் குறை கூறுவதிலும் அவர்களின் தவறைச் சுட்டிக் காட்டுவதிலுமே கவனத்தைச் செலுத்தினர்.

**தீர்வுக்காகத் திட்டமிடல்**:

எனக்குத் தெரிந்த மற்றும் தெரியாத இவைபோன்ற பல விரும்பத்தகாத குணங்களை அறிந்து கொள்ள விரும்பினேன். அவைகளை நான் கண்டுபிடிப்பதை விட அவர்களாகவே கூறி, அதற்கான தீர்வுகளையும் அவர்களே முடிவெடுக்கும் வகையில் விவாதிக்க வேண்டும் என தீர்மானித்தேன். அவர்களிடம் ஏற்படும் மாற்றங்களையும் கவனித்து தேவைப்படும் தருணங்களில் உதவிடவும் முடிவெடுத்தேன்.

**தீர்வுக்கான செயல்பாடுகள்**:
மாணவர்கள் பின்வரும் வினாக்களுக்கு விடையளித்தனர்.





1. நம்மைச் சுற்றி எவையெவை மாறவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

2. நாம் நேசிக்கும் உறவினரிடம் பிடித்த, பிடிக்காத விஷயங்களைப் பட்டியலிடுதல்

3. உன் நண்பன் எப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்?

4. அனைவராலும் நேசிக்கப் படுபவர்களின் பெயர்களைப் பட்டியலிடுக. குழுவாக அதற்கான காரணங்களை விவாதித்தல்

5. நல்ல பண்புகளைப் பட்டியலிடுதல்




மாணவர்கள் எவற்றையெல்லாம் நல்ல பண்புகளாக நினைக்கிறார்கள் என்பதை மேலே குறிப்பிட்டுள்ள இச்செயல்பாடுகள் எனக்கு உணர்த்தின.

**பயன்படுத்திய உத்திகள்**:

மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தாள் கொடுத்து அதில் அவர்களின் பெயரை எழுதச் சொன்னேன். பிறகு ஒவ்வொரு மாணவனும் தன் நண்பனிடம் சென்று, தன்னிடம் அவனுக்குப் பிடிக்காத குணங்களை பட்டியலிடச் சொல்ல வேண்டும். பிறகு அப்பட்டியலைப் படித்துப் பார்த்து, அவற்றில் நல்லவை எவை, தீயவை எவை என்று பிரித்துணர வேண்டும். நண்பன் கூறியதில், தானும் தீயது என்று முடிவு செய்யும் குணங்களை மாற்ற முயற்சி செய்ய வேண்டும்.

மாற்றிக்கொள்ள வேண்டிய குணங்களாக மாணவர்கள் கூறியவைகளில் சில:- பொறாமை, பொய், பேராசை, திருடுதல், கோபப்படுதல், வெறுப்பாகப் பேசுதல், பிறரை இகழ்தல், ஏளனம் செய்தல், அடித்தல், சண்டை போடுதல், பெரியோர் சொல் கேளாமை, வகுப்பறையில் குப்பை போடுதல், புத்தகத்தைக் கிழித்தல், தூய ஆடை அணியாமை போன்றவை. அவரவர் மாற்ற நினைக்கும் குணங்களை ஒரு தாளில் எழுதி அவற்றை தீயிட்டு கொளுத்தினோம்.

மாற்றத்தைக் காண மாணவர்களுக்கு 25 நாட்கள் கொடுக்கப்பட்டன. அதற்குள் மாற்றங்கள் நிகழும் என்பது எனது நம்பிக்கை.

**எதிர்கொண்ட சவால்**:

ஆனால் இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு மாணவன் என்னிடம் வந்து, அவனது நண்பன் தன்னை அடிப்பதாகவும் விளையாட்டில் சேர்த்துக் கொள்ள வில்லை என்றும் கூறினான். இது எனக்குப் பெரிய ஏமாற்றத்தைத் தந்தது. என் திட்டத்தில் எங்கு பிழை நேர்ந்தது என்று யோசித்தேன். சட்டென்று ஒரு எண்ணம் உருவானது.

**மாற்றுத் திட்டம்**:

அடுத்தநாள் மாணவர்களின் பெயர்களை ஒரு சார்ட் தாளில் எழுதி அதை வகுப்பறையில் ஒட்டினேன். நமது வகுப்பில் யாராவது ஒருவரின் மாற்றத்தைப் பற்றி தொடர்ந்து மூன்று பேர் கூறினால் அவர்களுக்கு ஒரு நட்சத்திரம் (star) தருவேன் என்று அறிவித்தேன். நாள்தோறும் அதை நினைவு கூர்ந்தேன். சார்ட் தாளில் நட்சத்திரங்கள் குவிந்தன. நான் மட்டற்ற மகிழ்ச்சியுற்றேன்.

**எதிர்பாரா விளைவுகள்:**

இச்செயல்பாட்டின் மூலம் எதிர்பாராத வேறு சில திறன்களும் வளர்ந்தன. அவை குழுப்பணி, பிறருக்கு உதவுதல், விட்டுக் கொடுத்தல், பிறர் மீது அன்பு செலுத்துதல், தன் கருத்தை எடுத்துக் கூறல், நட்புணர்வு போன்றவை.

**என்னுள் மாற்றம்:**

இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் ஒரு நிகழ்வு நடந்தது. ஒரு மாணவன் எந்த ஒரு கல்விச் செயல்பாட்டிலும் ஈடுபாடின்றி காணப்பட்டான். தொடர்ந்து பல நாட்களாக அவனது வேலைகளைச் சரிவரச் செய்வதில்லை. அன்று காலையும் அவன் வீட்டுப் பாடங்களைச் செய்யாமல் வந்ததால் நான் கோபமடைந்தேன். அதைப்பார்த்த ஒரு மாணவன் என்னிடம் வந்து, 'கோபம் கொள்ளக் கூடாது, அது மிகக் கொடியது, விட்டுக் கொடுத்து போக வேண்டும்- என்று எங்களுக்கு அடிக்கடி சொல்வீர்கள். இப்போது நாங்கள் மாறிவிட்டோம் நீங்கள் மட்டும் மாற்றாமல் அப்படியே இருப்பது எனக்கு வருத்தமாக உள்ளது' என்று கூறினான். அப்பொழுதுதான் என்னை மாற்றிக் கொள்வதின் அவசியத்தை உணர்ந்தேன். மாணவர்களை ஆற்றுப்படுத்துவது மட்டுமே ஆசிரியர்களின் கடமையன்று. ஆசிரியர்களும் மாற்றங்களுக்கு உட்பட வேண்டும். மாணவர்களிடமிருந்து நாம் கற்கவேண்டியவை பல என்று உணர்ந்தேன்.

கோபத்தைக் கட்டுப்படுத்த சில தீர்வுகளை விவாதித்தோம். அவை,

1. கண்ணை மூடி மெதுவாக ஒன்று, இரண்டு,... என எண்ணுவது
2. மனதில் நினைப்பதை நாட்குறிப்பில் எழுதுவது
3. படம் வரைவது
4. நகைச்சுவை கதைகள் வாசிப்பது
5. தனக்குப் பிடித்த செயலில் ஈடுபடுவது
6. கைவினைப் பொருட்கள் செய்வது

**நோக்கத்தை அடைந்தேன்:**

ஓரிரண்டு நாட்கள் கழித்து ஒரு மாணவி எனக்கு நன்றி கூறினாள். காரணம் கேட்டதற்கு அவள் தனது குணங்களைப் புரிந்து கொண்டதாகவும் பிடிக்காத குணங்களை மாற்றிக் கொள்வதாகவும் கூறினாள்.

இருபத்து நான்காம் நாள் ஒரு மாணவன் வந்து தன்னுடைய தீய குணங்களை மாற்றிக் கொள்ள தனக்கு மேலும் பத்து நாட்கள் அவகாசம் வேண்டும் என்று கேட்டான். நான் வகுப்பு மாணவர்களிடம் அம்மாணவனிடம் மாற்றம் தெரிகிறதா என்று வினவினேன். அனைவரும் அவன் மாற முயற்சிக்கிறான் என்றும் அவன் கேட்ட அவகாசத்தைத் தரலாம் என்றும் கூறினர்.

வேறொரு நாள் ஒரு மாணவி அவளது நோட்டுப்புத்தகத்தில் கதை, கட்டுரை, செய்தி துணுக்குகள் என்று நிறைய எழுதியிருந்தாள். காரணம் கேட்டதற்கு, முந்தையநாள் வீட்டில் அப்பா சண்டை போட்டதால் அவள் சோகமானதாகவும் அதனால் கண்ணில் பட்டதையெல்லாம் எழுதியதாகவும் கூறினாள்.

இதேபோல் எதையும் மிகைப்படுத்திக் கூறும் மாணவி இப்போதெல்லாம் அவ்வாறில்லை. குழுச் செயல்பாடுகளிலும் அவளது பங்களிப்பு நன்றாகவே இருக்கிறது. மேலும் நிறைய மாணவர்கள் ஓவியங்கள் வரைய ஆரம்பித்துள்ளனர்.

ஒருநாள் கணித ஆசிரியை என்னிடம் வந்து “ஒரு மாணவி கணித நோட்டில் எழுதாமல் புத்தகத்தில் எழுதியிருந்தாள். நான் திட்டினேன். அவள் வேகமாகச் சென்று ஏதோ ஒரு நோட்டில் எதையோ எழுதினாள்” என்றார். அம்மாணவியைக் கேட்டபோது நோட்டு தீர்ந்து போனதால் புத்தகத்தில் எழுதியதாகவும், ஆசிரியர் திட்டிய பிறகு எனது சோகத்தைத் தான் வேறு ஒரு நோட்டில் எழுதியதாகவும் கூறினாள்.

இது போன்ற செயல்பாடுகள் மாணவர் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நமக்கும் மன நிறைவை அளிக்கின்றன. நான் நினைத்து நினைத்து மகிழ்ந்த செயல்பாட்டை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பி இக்கட்டுரையை எழுதியிருக்கிறேன்.

# வகுப்பறை நாட்குறிப்பு



சுபாஷினி
அரசு தொடக்கப் பள்ளி
நோனாங்குப்பம்

கடந்த கல்வியாண்டில் நான் நரம்பையில் பணியாற்றினேன். ஆரம்பத்தில் ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்புகளை நடத்தினேன். பின் மழலையர் வகுப்பு முதல் 2 ஆம் வகுப்புவரை நான்கு வகுப்புகளைக் கவனித்துக்கொண்டேன். அவர்கள் அனைவருமே மீனவக் குழந்தைகள். பள்ளி நல்ல கட்டிட அமைப்புகளையும், போதுமான நவீனகருவிகளையும் கொண்டிருந்தது. கணினி, ப்ரொஜெக்டெர், ரேடியோ ஆகியவற்றையும் புத்தகப் பூங்கொத்துப் புத்தகங்களையும் போதுமான அளவு பயன்படுத்த முடிந்தது.

கற்றல் கற்பித்தல் விவாதங்களில் பங்கெடுப்பது எனக்குப் பிடிக்கும். தேடித்தேடி புதுமையான விசயங்களைக் கற்றுக்கொள்வேன். புத்தக வாசிப்பு என் சுய மேம்பாட்டிற்காக இருக்கிறது. வாசிப்பு, உரையாடல், தேடல், கற்றல் ஆகிய அம்சங்கள் என்னை மகிழ்ச்சியான ஆசிரியராக வைத்துள்ளது. சமூக மாற்றத்திற்கான நிகழ்வுகளில் கலந்துகொள்வது எனது வழக்கம்.

புதுச்சேரி ஆசிரியர் வட்டத்தில் நான் சேர்ந்ததற்கு முதல் காரணம் ஆசிரியப்பணியில் சிறப்பாக ஈடுபடவும் ஆசிரிய நுட்பங்களை என்னுள் மேம்படுத்தவும் என் வகுப்பறை நிகழ்வுகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் மற்றவர்களுடையவற்றை தெரிந்து கொள்ளவும் வகுப்பறை மேலாண்மையை

அறிந்துகொள்ளவும் கற்பித்தல் நுட்பங்களை அறிந்துகொள்ளவும் வகுப்பறை பிரச்சனைகளுக்கு தீர்வுகானவும் கல்வி தொடர்பான கோட்பாடுகள், திட்டங்கள், அரசாணைகள்... போன்றவற்றை அறிந்துகொள்ளவும் அதைப்பற்றி புரிந்து கொள்ளவும் கல்வித் தொடர்பான புத்தகம் வாசிக்கவும்... என அடுக்கிக் கொண்டே போகலாம். பல இடங்களுக்குப் பயணித்து பல்வேறு விஷயங்களைத்தெரிந்து கொள்வேன். இதன்அடிப்படையில் வேலையில் தன்னிறைவு பெரும் முயற்சியில் என்னை இணைத்துக் கொண்டேன்.

கடந்த ஆண்டு என் வகுப்பறை எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருந்தது என்பதை நான் உணர்ந்தேன். அதற்காக வெவ்வேறுவகையான செயல்பாடுகளில் ஈடுபட்டேன். வகுப்பறையில் வாசிப்புக்காக பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டேன். வாசிப்பும் வாசிப்பிற்கான சூழலோடும் வகுப்பறை இருந்தது. குழந்தைகளை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் சென்று செயல்பட வைத்தேன். நான்கு வகுப்புகளை சேர்த்து கவனித்துக் கொண்டேன். தமிழில் குறிப்பிட்ட பாடங்களை தேர்வு செய்து அதற்கான பாடத்திட்டம் வகுத்து வகுப்பறையில் செயல் படுத்தினேன். உதாரணமாக பசுவும் கன்றும், நாடிப்பயில்வோம், வீடு எங்கே, நூலகத்தில் நாங்கள் போன்ற பாடங்களை குறிப்பிட்டுச் சொல்லலாம். குழந்தைகள் வாசிப்பிற்கு கதை எழுதிய அனுபவம் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

## அனுபவப் பகிர்வு

**வகுப்பறை நாட்குறிப்பு**

சென்ற ஆண்டு முதல் மற்றும் இரண்டாம் வகுப்பை சேர்த்து கவனிக்கும் பொறுப்பு என்னுடையதாக இருந்தது. புதிதாக வகுப்பறைக்குள் வரும் குழந்தைகள் ஒவ்வொருவரையும் எப்படி வகுப்பறைச்சூழலுக்கு பழக்குவது என்பது முதல் தேவையாக இருந்தது. அதற்கடுத்து விளையாடி மட்டுமே பழக்கப் பட்ட அவர்களுக்குப் பாடங்களை நடத்துவது. இரண்டு வகுப்புகளுக்கும் தனித்தனியான பாடங்களை எப்படி நடத்துவது என்பது போன்ற பொறுப்புகள். என் செயல்பாடுகள் சரிதானா? என்பதை அறிந்துகொள்ளவும், இன்னும் எப்படியெல்லாம் செய்யவேண்டும் என்று அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இருந்துகொண்டே இருந்தது. இச்சமயத்தில்தான் வாசிப்புத்திருவிழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இத்திருவிழா வகுப்பறை செயல்பாடுகளை வடிவமைப்பதற்கு பெரிதும் உந்துதலாக இருந்தது. என் வகுப்பறையை விதம் விதமான செயல்பாடுகள் மற்றும் நிகழ்வுகளுக்கானதாக மாற்றத்துவங்கினேன்.

**வகுப்பறை உத்திகள்**

வாசித்தலில் குழந்தைகள் எந்த நிலையில் உள்ளனர் என்பதை அறிந்து அதற்கேற்ப உதவுதல்.

- வாசித்தலுக்கான நுட்பங்களை புரிந்துகொண்டு அவற்றை வகுப்பறையில் ஈடுபடுத்துதல்.
- குழந்தைகளுக்கு தேவைப்படும் கற்றல் கருவிகளை மற்ற ஆசிரியர்களுடனும் குழந்தைகளுடனும் இணைந்து உருவாக்குதல்.
- என் செயல்பாடுகளையும் குழந்தைகளின் கற்றலையும் ஆவணப்படுத்துதல்

என்ற வகையில் என் வேலையில் வெவ்வேறு வகையான மாற்றங்கள் நிகழத்துவங்கின. குறிப்பாக குழந்தைகள் வகுப்பறையில் மகிழ்ச்சியாக இருந்தனர். விதம் விதமான கற்றலில் ஈடுபட்டனர். இச்சமயத்தில் "**ஆவணப்படுத்துதலின் அவசியமும் முறைகளும்**" என்ற பயிற்சியில் கலந்து கொண்டேன். அதன் அவசியம் எனக்குப் புரிந்தது. அதனால் பதிவு செய்வது என்று முடிவு செய்து பதிவு செய்யத் துவங்கினேன். ஒரு நோட்டில் தேதியை எழுதி நிகழ்வுகளை எழுதத் துவங்கினேன். . ஆனால்

பாடத்திற்கு நான் பயன்படுத்தத் துவங்கிய வித்தியாசமான முயற்சிகளில் நான் செலவழிக்கும் நேரமே கொஞ்சம் அதிகமானதாக இருந்தது. அதில் இதுவேறா? என்ற மலைப்பு எனக்கு துவக்கத்தில் இருந்து கொண்டே இருந்தது. இருந்தபோதும் முனைப்புடன் மூன்றுவாரங்கள் ஈடுபட்டேன். வகுப்பறையில் முக்கியமான மற்றும் வித்தியாசமான வேலைகளில் ஈடுபடும்பொழுதே அதை எப்படி நாட்குறிப்பில் எழுதுவது என யோசிப்பேன். அன்றைய எனது செயல்பாடுகளை எழுதி முடித்ததும் நாளை நான் செய்ய வேண்டியது என்பதைக் குறிப்பேன். ஒவ்வொரு நாளும் முதல் நாளுக்கும் அடுத்தநாளுக்கும் பயணிக்கும்படி செய்தது நாட்குறிப்பு.

"**15 -12 -2015 -** நாட்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளேன், "இன்று நான் இனம் மாற்றிக் கூட்டல் கணக்கை துவங்க வேண்டும். குழந்தைகளுக்குத் தெரியும் என்பதுபோல் நேரடியாகத் துவங்கிவிட்டேன். அவர்கள் முழிக்கும்பொழுதுதான் அது புரிந்தது. பிரவின் முழிப்பதைப் பார்க்கும்பொழுதுதான் புரிந்தது. இன்று அப்படியே அதை நிறுத்திவிட்டு, எந்த செயல்பாடு அதற்கு உகந்ததாக இருக்கும் என யோசிக்க ஆரம்பித்தேன்.

இதைப்போல்

**3-8-2015** " க் - க் = கொக்கு, ங் - ங் = சங்கு என வாய்ப்பாடு சொல்லிக் கொடுப்பது போல் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தேன். ந் - ந் = பந்து என்று சொல்வதற்கு பதில் இப்- இப்- பால் (ball) எனப் படித்தான், மோனிஷ். திரும்பக்கேட்டால் அப்படியே கூறுகிறான். இதற்கு முன் ஒருமுறை ஓ என்று கரும் பலகையில் எழுதச் சொன்னபொழுது "0" என்று ஆங்கிலத்தில் எழுதினான். ஐ எழுதச்சொன்னால் ஆங்கில எழுத்து "I" எழுதுகிறான். இந்தப் பிரச்சனையைப் பற்றி மற்ற ஆசிரியர்களிடம் கேட்க வேண்டும்" என எழுதியிருந்தேன். அதைப்போலவே மற்ற ஆசிரியர்களிடம் பேசி சரி செய்தேன்.

அதோடு மூன்று வாரங்கள் கழித்து நான் எழுதியதை உட்கார்ந்து வாசித்தேன். அதில் குழந்தைகளின் செயல்பாடுகள் இருந்தன. அவர்கள் கற்றுக்கொண்டது இருந்தது. அவர்கள் கற்கக் கஷ்டப் பட்டவை இருந்தது. நான் மேற்கொண்ட மேற்கொள்ளவிருக்கும் உத்திகள் இருந்தன. அவர்கள் தங்கள் வீட்டைப் பற்றி கூறிய விசயங்கள் அதில் இடம்பெற்றிருந்தது. மொத்தத்தில் எங்கள் வகுப்பறை அதில் உள்ளடங்கியிருந்தது. கற்றல் கற்பித்தல் நிகழ்வுகள் அனைத்தையும் பதியத் துவங்கினேன். அது நான் செய்ததையும் செய்யவேண்டியதையும் எனக்கு சொல்லிக்கொண்டே இருக்கும் வழிகாட்டியாக மாறிப்போனது.

இச்சமயத்தில் எனக்கு நான்கு வகுப்புகளைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு வந்தது. எல் கே ஜி முதல் இரண்டாம் வகுப்புவரை,எல்லோரையும் தனித்தும் பிரித்தும் கையாள வேண்டும். இது எனக்கு பெரும் சவாலாக மாறிப் போனது. இச்சவால்களை எதிர்கொள்ளும் பலத்தை எனக்குத் தந்தது நாட்குறிப்பு.




டைரி எழுதும் வழக்கம் சுலபமாக மாறிப்போயிருந்த சமயத்தில் எனக்கு **"ஆசிரியரின் நாட்குறிப்பு"** என்ற ஹேமராஜ் பட் என்ற ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் நாட்குறிப்பு படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

அது எனக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. நான் பட்டிருந்த கஷ்டங்களை அவர் பட்டதோடு அவர் எப்படியெல்லாம் வெளி வந்தார் என்பதையும் சித்தரித்திருந்தது. நான்கு வகுப்புகளை ஒன்றாக வைத்திருந்தது. பாடங்களை ஈடுபாடுடன் நடத்தும்பொழுது கையாளும் முறைகள் இப்படி ஒவ்வொன்றுடனும் என் டைரியை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டேன்.

ஆனியின் கண்காட்சியில் ஈடுபட வாய்ப்புக் கிடைத்தபொழுது அவளது டைரியை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. சமூகத்தை உற்றுப் பார்க்க எனக்குக் கிடைத்த வாய்ப்பாக அது இருந்தது.

ஜான் ஹோல்டின் டைரியை வாசிக்க எடுத்துவைத்துள்ளேன்.

**நான் என் டைரியை இன்று திறந்து பார்த்தபொழுது:**

- நான் நான்கு வகுப்புகளையும் ஒரு வகுப்பில் வெவ்வேறு முறையில் உட்காரவைத்தது பற்றி நான்கு பக்கங்கள் எழுதியுள்ளேன்.
- எப்பொழுது அவர்களை ஒன்றாக சேர்க்க முடிந்தது; எதற்காகப் பிரித்து வைத்தேன் என்பதை அதில் தெளிவு படுத்தியுள்ளேன். கதை சொல்லுதல், கதை வாசித்தல் என்பதாக சேர்ந்து உட்கார்ந்தும். வகுப்புப் பாடங்கள் மற்றும் அது சார்ந்த செயல் பாடுகளுக்கு பிரித்து வைத்திருந்ததும் தெரிகிறது. இதை நான் செய்யும்பொழுது புரிதலுடன் செய்யவில்லை. வாசிக்கும்பொழுது உணர்கிறேன்.
- வாசிப்பிற்கு என்னென்ன நுட்பங்களை பயன்படுத்தினேன் என்பதை வரிசைப்படுத்த உதவியாக உள்ளது.

**கதை சார்ந்த நிகழ்வுகள்** :



- படங்களை பார்த்துக் கதை சொல்லுதல்
- கதையை வாசித்தல்
- கதை சொல்லுதல்
- கதையைப் படமாக வரைதல் என டைரியில் இருந்ததை எண்ணிப்பார்த்தேன். இவை பற்றி விதம் விதமாக நான் செய்தவற்றை டைரி கூறுகிறது.

18-3-2015 எஸ் எஸ் ஏ புத்தகம் "பம்பரம்" - சாரு வாசித்தாள். தரை மேல் பம்பரம் என அதில் எழுதியிருந்தது. தரை என இரண்டு எழுத்துகளைப் படித்துவிட்டு தரையில் பம்பரம் என வாசித்தாள். குழந்தை யூகித்துப் படிக்க முடியும் என்பதை முதன் முதலாகப் பார்க்கிறேன். இனி இதைப் பற்றி கவனித்துப் பார்க்க வேண்டும்."

இதேபோல் எழுத்து அறிமுகம் செய்யும்பொழுது வார்த்தைகளை இணைத்து செய்தல், மணலில் எழுதுதல், எழுத்துக்களை அலங்கரித்தல், சுவர் கரும்பலகையில் எழுதுதல் என நான் செய்ததை அடுக்கிக்கொண்டே போகமுடிகிறது. குழந்தைகள் தமிழைப் படிக்கும்பொழுது ஏற்படும் மாற்றங்கள், தேவைப்படும் பயிற்சிகளை உற்றுப் பார்த்த அனுபவம் ஒன்றை இங்கு குறிப்பிடலாம்.

27 - 11- 2015 "யார் பலசாலி என்ற புத்தகத்தை தர்ஷினி வாசிக்கும்பொழுது, விலங்கு என்பதை இங்கு விலங்கா? என தவறாக எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டாள். "நீதான் பலசாலி விலங்கா?" கேட்கும் வாக்கியம் அது. நிறுத்தற் குறிக்கான பயிற்சி போதுமானதாக இல்லை என்பதை டைரி

உணர்த்தியது…" இதுபோல் குழந்தைகளின் அனுபவம் எப்பொழுது சரியாக பதிந்துள்ளது எங்கு இடைவெளி ஏற்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள இது உதவியது.

- என் பதிவுகளில் நான் மாணவர்களை அழைத்துச்சென்ற பசுமை நடை, கடற்கரை நடை என பதிவாகியுள்ளது பயணத்தில் நாங்கள் பேசிக்கொண்ட ஒவ்வொன்றையும் எழுதியுள்ளேன். ஆமை, கடல் வாழ் ஊயிரினங்களைப் பற்றி அவர்கள் கூரிய கதையை மறக்கவே முடியவில்லை. நாங்கள் கொண்டாடிய காற்றாடித்திருவிழா, பொங்கல் போன்றவை குறிப்பிடத்தக்கது.

27-1-16" செல்வி பொங்கல் பொங்கும்போது குலவை போட வேண்டும் என அவளே கத்தினாள். எல்லோரும் சிரிக்க அவள் அதற்கு விளக்கம் அளித்தாள். பின் எல்லோரும் குலவை போட்டனர். அவர்களே பொருட்கள் எடுத்து வந்ததும் சேர்ந்து பொங்கல் செய்ததும் அங்கு உட்கார்ந்து, கொதிக்கும்போது தட்டு ஏன் குதிக்குது? தட்டுமேல் இருந்த தண்ணி எங்க போச்சு - போன்ற கேள்விகள் கேட்டு பேசினோம். கலாச்சார நிகழ்வுகளில் கூட அறிவியலைப் பேசமுடியும் எனப் புரிந்துகொண்டேன். எங்கள் தலைமை ஆசிரியர் இது போன்ற நிகழ்வுகளுக்குத் தரும் ஒத்துழைப்பு எனக்கு மகிழ்ச்சியளிக்கும்.

### டைரி தந்த நிறைவு

**இப்பதிவுகள் என் மாணவர்கள் எந்த நிலையில் இருந்தார்கள் எந்த நிலைக்கு வந்துள்ளர்கள் என்பதை தெளிவாகக் காட்டுகிறது. முக்கியமாக நான் என்ன செய்தேன் என்பதை எனக்கே கூறுகிறது. இதை பகிர்ந்துகொள்வதற்காக நான் அவற்றைப் படித்தபொழுது சிரித்தேன். எதையோ நினைத்து வருந்தினேன். யோசித்தேன். சில விஜயங்களை மட்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.**



# நண்பர்களாவோம் - கற்றலை இனிமையாக்க

சு. கவிதா
அ.தொ.ப. மணவெளி (அ)

ஆசிரியர்கள்: 13

மாணவர்களின் எண்ணிக்கை: 275

**எனது பள்ளி**:

என் பள்ளியில் 275 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். 13 ஆசிரியர்களும் தலைமையாசிரியரும் தங்கள் பணியைச் செம்மையாய் செய்கின்றனர். பெரும்பாலான மாணவர்கள் கீழ் / நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர்கள். பள்ளி மாணவர்கள் சுயசுத்தத்திற்கும் சுற்றுப்புறத் தூய்மைக்கும் மிக முக்கியத்துவம் அளிப்பர். பள்ளி விழாக்களில் தங்கள் திறமைகளை நிரூபித்துக் கொண்டே இருப்பர்.

என்னை புதிதாக்கும் முயற்சியின் வெளிப்பாடே ஆசிரியர் வட்டத்தில் இணைந்ததிற்குக் காரணம். என் குழந்தைகளின் புரிதலை விரிவுபடுத்தும் களமாகவே இதனைக் கருதுகிறேன்.

**அனுபவப் பகிர்வு**

**கடந்த ஆண்டு என் வகுப்பறை**:

கடந்த ஆண்டு என் வகுப்பறையில் நான் எனது நான்காம் வகுப்பு மாணவர்களோடு சேர்ந்து செயலாற்றிய பல்வேறு முயற்சிகளை இங்கே பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

நான்காம் வகுப்பில் நான் செயல்படுத்திய பல்வேறு முயற்சிகளின் விளைவாக எனக்கும் என் மாணவர்களுக்கும் இடையே ஒரு பிணைப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்த இணைப்பு மாணவர்கள்

தங்களுக்கு ஏற்பட்ட ஐயங்களைத் தடையின்றி கேட்கவும் அவர்களுக்கு ஒத்துப்போகாத கருத்துக்களை மறுத்துரைக்கவும் அவரவர் எண்ணங்களை வெளிப்படுத்தவும் துணைபுரிந்தது. மேலும் இது குழுக்கற்றல், சகமாணவர்களிடமிருந்து கற்றல் போன்ற செயல்பாடுகளை எளிதாக்குகிறது. கல்வியாண்டின் தொடக்கத்தில் மற்ற ஆசிரியர்களைப் போல் நானும் சில சவால்களை என் வகுப்பறையில் சந்தித்தேன். அவற்றைக் களைவதற்காக சில முயற்சிகளில் ஈடுபட்டேன். இது சார்ந்த எனது அனுபவங்களை இங்கே பதிவு செய்கிறேன்.

சிந்தனைக்கான விதை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரோவில் பள்ளியில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் கிடைத்தது. அதை அடியொற்றி வகுப்பறை விதிகளை உருவாக்கினோம். ஒரு சார்ட் தாளில் அவற்றை எழுதி ஒட்டினோம். அதனுடன் ஆலோசனைப் பெட்டி ஒன்றையும் தயாரித்து வகுப்பறையில் வைத்தோம்.

கீழ்க்காணும் குறிக்கோள்களை மையப்படுத்தி எனது வகுப்பறைச் செயல்பாடுகளை அமைத்தேன்.

- மாணவர்களின் சிந்தனைத் திறனைத் தூண்டுதல்
- அவர்களைக் கேள்வி கேட்கத் தூண்டுதல்
- தங்களின் கருத்துக்களைத் தெளிவாகப் பகிர்தல்
- கேட்கும் கேள்விகளுக்கு விளக்கம் அளித்தல்
- குழுச் செயல்பாடுகளில் முழுமையாக ஈடுபடுதல்

இக்குறிக்கோள்களை அடைய எனது வகுப்பறை கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை முறையாகத் திட்டமிட்டேன். ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் பங்களிப்பும் ஈடுபாடும் இருக்குமாறு பார்த்துக் கொள்வேன். அவ்வாறு நான் முயன்றவற்றில் சிலவற்றைக் கீழே குறிப்பிட்டுள்ளேன்.

அ) திருக்குறளைப் பொருளுணர்ந்து கற்றுக்கொள்ள குறள் உணர்த்தும் கருத்துக்களை விளக்கும் விதமாகப் படக்கதைகளை உருவாக்கினோம். குறட்பாக்களை நேரடியாகக் கதைக் கூறி விளக்காமல் படக்கதைகள் மூலம் கற்பித்தோம். அவ்வாறு கற்றுணர்ந்ததால் பசுமரத்தாணிபோல் குறளும் பொருளும் மனதில் நன்கு பதிந்ததைக் காண முடிந்தது.

ஆ) உயர்திணை / அஃறிணையைக் கற்பிக்கச் செய்தித் தாள்களில் உள்ள படங்களைத் திரட்டி, அப்படங்களை உயர்திணை / அஃறிணை என வகைப்படுத்துமாறு கூறினேன்.



இ) ‘வழங்கும் தமிழ்’ என்ற பாடத்தின் தொடர்ச்சியாக மாணவர்கள் மீன் விற்கும் பெண்ணுடன் நேர்க்காணல் ஒன்றை நிகழ்த்தி அவர்களின் வாழ்க்கை நிலையையும் அவர்கள் பேசும் தமிழையும் தெரிந்து கொண்டனர்.

ஈ) ‘பொம்மை உலகம்’ என்ற பாடம் பொம்மைகளின் வகைகளையும், பொம்மைகள் நமது கலாச்சாரத்தில் பெற்ற இடத்தையும் விளக்குகிறது. மாணவர்களின் புரிதலை மேலும் ஆழமாக்கக் களப்பயணமாக அருகில் உள்ள ஐயனார் கோவிலுக்குச் சென்றோம். மகிழ்ச்சியுடன் சென்ற

மாணவர்கள் கோவிலில் அதிகப்படியான வினாக்களைத் தொடுத்தனர்.

உ) இதே பாடத்திற்காக வீராம்பட்டினம் தொடக்கப்பள்ளியில் பணிபுரியும் கைவினை ஆசிரியரை வரவழைத்து மாணவர்களுக்கு முட்டை ஓட்டைக் கொண்டு பென்குவின், கம்பளி நூலில் கோழிக்குஞ்சு, பஞ்சு பொம்மை போன்றவற்றைச் செய்யக் கற்றுகொடுத்தோம். இதன் விளைவாக மாணவர்கள் தாங்களாகவே, துணி, பஞ்சு, தென்னங்குச்சி, களிமண், ஐஸ்கிரீம் குச்சி, காகிதம், கொட்டாங்குச்சி போன்றவற்றைப் பயன்படுத்தி பொம்மைகள் செய்து வந்திருந்தனர். அதனால் அவைகளைக் கொண்டு வகுப்பறையிலேயே பொம்மை கண்காட்சி ஒன்றை நடத்தினோம்.

ஊ) 'ஒளிமயமான எதிர்காலம்' என்ற பாடத்தைக் கற்பிக்க நெகிழியால் ஏற்படும் பாதிப்பு பற்றிய ஒலிஒளி படக்காட்சியைப் (குறும்படம்) காட்டினேன். அக்குறும்படம் மாணவர்களிடம் மிகப்பெரிய மனமாற்றதை ஏற்படுத்தியது. நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் நெகிழி பொருட்களின் பட்டியலைத் தயாரித்த மாணவர்கள் இவ்வளவு பொருட்களையா நாம் தினசரி வாழ்க்கையில் பயன்படுத்துகிறோம்! என ஆச்சரியப்பட்டதோடு மட்டும் அல்லாமல் வருத்தப்படவும் செய்தனர். நெகிழிக்கு மாற்றாக எவற்றைப் பயன்படுத்தலாம் எனப் புகைப்படங்கள் காட்டியபோது ஆர்வத்துடன் கூர்ந்து கவனித்த அவர்கள், அவைகளைப் பின்பற்றவும் தொடங்கினர்.



எ) 'பழமொழி' பாடம் உழவு குறித்தச் செய்திகளைப் பழமொழி வாயிலாகக் கூறுகிறது. அதனால் உழவு சார்ந்த பாடல்களைத் திரையிட்டுக் காட்டியபோது உல்லாசமாகத் திரையரங்கில் பார்ப்பது போல், மேசையின் மீது சாய்ந்து கொண்டு பார்த்த காட்சி எப்பொழுது எண்ணினாலும் என் முகத்தில் புன்னகையும் பூரிப்பும் வருவதைத் தவிர்க்க முடியவில்லை. அப்பாடல்களைப் மீண்டும் மீண்டும் பாடிக் களித்தனர். பாடத்தைக் கடினமாக உணராத வகையில் வண்ணம் தீட்டுதல், படங்களை வரிசைப்படுத்துதல், ஒலி புத்தகம் மூலம் பாடத்தை வாசித்தல் எனப் பாடத்தைச் சுவையாக்கினேன். பழமொழி உணர்த்தும் மறைபொருளை மாணவர்கள் ஓவியமாக வரைந்தது மாணவர்களின் மீதான மதிப்பை மேலும் கூட்டியது. உழவுத்தொழிலை நன்கு புரிந்து கொள்ள ஏதேனும் ஒரு நெல் வயலுக்குச் சென்று உழவருடன் கலந்துரையாடத் திட்டமிட்டோம். ஆனால் திட்டமிட்டபடி களப்பயணம் செல்லாதது மட்டுமே இன்று வரை என்னை உறுத்திக் கொண்டே இருக்கிறது.

ஏ) 'தோழிக்கு விருந்து' என்பது உரையாடல் வடிவில் உள்ள பாடம். இதைக்கற்பிக்க 'வாசிப்பு அரங்கம்' என்ற வாசிப்பு உத்தியைப் பயன்படுத்தினேன். அனைத்து மாணவர்களும் இச்செயல்பாட்டில் பங்கெடுத்து வாசித்தது எனக்கு வியப்பாக இருந்தது. கதையைக் கூறி, சொற்களை எளிமை படுத்தியதால் வாசிக்க சிரமப்படும் மாணவர்கள் கூட சிறிய வாசகங்களை வாசித்தது மனதிற்கு நெகிழ்வூட்டியது.



ஐ) இந்த ஒரு வருடத்தில் என்னை மிகவும் கவர்ந்த வாசிப்பு உத்தி 'கதை வரைபடமே'. 'மன்னர் மன்னன்' என்ற உரையாடல் பாடத்தைக் கற்பிக்க கதை வரைபடம் என்ற உத்தியைப் பயன்படுத்தினேன். எனது மாணவர்களுக்கு இது வருமா? அது வருமா? என்ற என் எண்ணத்தைத் தூள் தூளாக்கினர். இப்போதெல்லாம் எந்தக் கதை கூறினாலும் அதை ஐந்தே வரிகளில் சுருக்கி கதைவரைபடமாக மாற்றி விடுகின்றனர்.

மேலே குறிப்பிட்டுள்ள இச்செயல்பாடுகள் மற்றும் உத்திகள் மூலம் சிறிது சிறிதாக மாணவர்களுக்குப் பயம் விலக ஆரம்பித்தது. நாம் எதைக் கூறினாலும் ஆசிரியர் செவிமடுக்கிறார் என்ற நம்பிக்கை பிறந்தது. கற்கச் சிரம்மப்படும் மாணவர்களும் தங்களின் பயத்தைக் கடந்து பேச கற்க ஆரம்பித்தனர். மாணவர்களுக்குள் நல்லுறவு மலர்ந்தது. வகுப்பறைச் சட்டத் திட்டம் அமைக்க முற்பட்டபோது ஆர்வமுடன் பங்கேற்ற மாணவர்கள், வருடம் முழுவதும் அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சித்தனர்.

**ஆலோசனைப்பெட்டி**

நான் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள எனக்கு நல்லதொரு வாய்ப்பினை எனக்கு இது ஏற்படுத்திக் கொடுத்தது. மாணவர்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படையாக ஒரு துண்டு சீட்டில் எழுதி ஆலோசனைப் பெட்டியில் போட ஆரம்பித்தனர். ஒவ்வொரு நாளும் பெட்டியிலிருக்கும் சீட்டுக்களை எடுத்துப் படித்து, அவர்களின் குறைகளைக் களைய முயன்றேன். மாணவர்களுக்கு என் மீது நம்பிக்கை துளிர்க்க ஆரம்பித்தது. ஒரு சில வாரங்களிலேயே அந்த நம்பிக்கை வேரூன்றியது. மாணவர்களின் எண்ணங்கள் சிலவற்றைக் கீழே எழுதியுள்ளேன்.

- பெரிய வார்த்தை வேணாம் மிஸ்
- எழுதும் போது மறக்காம புள்ளி வைங்க மிஸ்
- அம்மான்னு சொல்றீங்க, ஏன் அடிக்கிறீங்க
- அவ என் கூட பேசமாட்டாளாம், பேச சொல்லுங்க
- நீங்க என் தோழி போல இருக்கீங்க
- எனக்கு A1 எல்லாத்துலயும் போட்டு இருக்கீங்க, கவிதாக்கு ஒன்றில் மட்டும் A2 போட்டு இருக்கீங்க ஏன் மிஸ்.
- அழகா சொல்லித் தர்றீங்க மிஸ்
- நாங்க ஆறாவது போனா நீங்க அழுவாதீங்க

இதன் விளைவாக எந்தப் பாடமானாலும், குழுச் செயல்பாடானாலும் கேள்விகளை அடுக்கத் தொடங்கினர். நான் கூறும் கதையோ / அனுபவமோ / பாடம் சார்ந்த செய்திகளோ, விளக்கம் தேவைப்பட்டால் தயக்கமின்றி அறிய ஆர்வம் காட்டினர். நான் வகுக்கும் குழுச் செயல்பாடு புரியாமலோ / கடினமாகவோ இருந்தால் மாற்றச் சொல்லிக் கேட்கின்றனர். இந்த ஓராண்டுப் பயணத்தில் எனது மாணவர்கள் என்னிடம் மிக நெருங்கி உள்ளனர். இது அவர்களின் கற்றலுக்கு உறுதுணையாக இருந்ததை மகிழ்ச்சியோடு அனுபவிக்கிறேன்.

இந்த ஆண்டு வாசித்தலில் அதிக கவனம் செலுத்திய எனது வகுப்பறை அடுத்த ஆண்டு எழுதுதல் திறனைச் செம்மைப்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடும்.



# Towards Contextual digital Resources for Language Class

C. SASIKUMAR, PST,
GMS, MANAPET

Previous School :
G.M.S. Vadamattam
Karaikal

Student strength – 114
Teacher strength – 6

**Key areas of interests**

Puppetry, Villupattu, Drama, Digital resource creations, Music

**Why I was interested in joining the teachers' circle**

Self - Development through exchanging thoughts and ideas with various school teachers

**Summary of the different things I did last year**

Puppet show, Villupattu, Digital resource creations, Lesson plan creation

## Experience Sharing

**Purpose**

In our school, the students come from very poor families and the parents do not support the children in their studies. The students are unfamiliar with English language; the only time they hear and speak English is during the English class in school. The CBSE content is also a bit high and difficult for the students in rural areas. So it is all the more important that the teacher

simplifies the lessons/poems in a way the students can comprehend.

In Class 1 there were classroom resources for all other lessons except for the poem “One little kitten”. So I thought of creating a teaching resource for that, which would be context specific. There are resources in “English academy” for poems where one reads stanza by stanza and explains the content. But some of these are not suitable for Indian students. The resources carry a foreign tone and accent and they are recited and not sung and do not bring out the fun element usually associated with learning poems. Hence they are not exciting enough for the children. Students of Class 1 can enjoy and learn an English poem by singing it in a familiar tune. It is very essential for us to engage the students in classroom activities using different methods. This drove me to create content specific digital resources that are easy for students to understand.

> Normally we use pictures and other printed TLMs, but I wanted to take it to a digital form.

**How did I plan / to work on this objective?**

Usually, children attend two years of pre- primary school before coming to class 1. But these children did not attend any pre-primary school and were directly enrolled in class 1 and this was their first exposure to any formal education. I used the readily available resources to teach the previous poems but I felt that it was insufficient. Children have to enjoy the classroom learning and should get excited about the things they are going to learn in the class. So we need some attractive and interesting teaching aids to engage the children in class.

When I first taught the poem “One Little Kitten” with action and music, students were able to pick up the song with the help of actions. But then I found that there were many animals in the poem that children were unfamiliar with, and found it difficult to relate to. E.g.: Seals, seagulls, eels, lizards, dolphins, alligators, whales and fleas. I tried to check for readily available resources for this poem, but my search went in vain. Normally we use pictures and other printed TLMs, but I wanted to take it to a digital form. So I used pictures of the animals, audio-recorded the poem and created a video for my students. I did this with the help of “Photo Grid” application in my smartphone. This is easy for all to do and has no copy right issues.

I first used my mobile and then my laptop. The poem was initially taught in a tune which is easy for the children to pick up. Children sang the poem and I recorded their voice in the video. They initially struggled to pronounce a few words like *lizard, fishes, eels and butterflies* etc. But after singing it repeatedly they were able to get the correct pronunciation.

The video helped children to understand more about animals - where they live, how they look, their colour etc. On seeing the picture of a lizard, they identified it as “palli” (Tamil word for house lizards). They had associated the lizard with the normal house lizard. I asked them to take a closer look and clarified that it was one type of lizard but not the house lizard. Apart from animals, they learnt numbers as well. When I played the video for the first time the students listened to the poem and the next time they started singing along with the video. They enjoyed watching the video and were then able to

identify the animals and recite the poem with actions.

**Way Forward:** Most of us teachers have an android phone. The “Photo Grid” app is user friendly and easy to use and an ideal support for teachers. Visuals always appeal to children and help them comprehend language better. It also provides cues to search for words related to the visuals to narrate or talk about it. All of us have used images as a teaching aid for some of our classes and it definitely was a useful aid. I have identified the lessons that have no clear resources and I have decided to create (context relevant) resources for other poems during summer holidays.

# Music & Dance to Enhance Learning



R.RAJESH

GPS, Sivaranthagampet
Puducherry (Feb 2016 onwards)

Previous School :
GPS, KVP Kuppam, Karaikal

Student strength – 36
Teacher strength – 2

Socio economic context - Most of the students are from very poor families and have diverse family backgrounds. Some children are raised by a single parent, some are under the care of grandparents, some parents go to work early and come back home very late. The school is located in an industrial area surrounded by six chemical factories so the children have developed skin diseases as well as hair fall problems. The community faces water pollution issues because of these factories.

This was a single teacher for a long time with one teacher managing all the 5 classes. When I joined, we became two teachers in the school. I stayed in the same school till I got transferred recently. Handling multi-grade class was very difficult for me as a teacher.

Peculiar strengths and challenges –We had multi grade classes in KVP Kuppam School. We had classes I, II & III, together, LKG & UKG combined, and class IV & V together.

**Some key areas of interest**

Puppetry, villupattu, drama, dance, singing and drawing

**Why I was interested in joining the teachers' circle?**

Self-Development through exchanging thoughts from other school teachers.

**Summary of the different things I did last year**

**Puppetry:** I have used puppets for story-telling and for lessons which have conversations. I attended a training programs for puppetry and I can make puppets for classroom teaching. **Villupattu:** I used villupattu to teach a 4th Std EVS lesson to convey the social messages in a fun way. Villupattu has songs with rhythm and will be attractive to children.

**Field visit for students:** We took children out for a Purpose Walk. During this the children walked through paddy fields and interacted with a farmer. He explained the process of paddy cultivation. Children had not interacted with farmers earlier and hence were very eager to know about various aspects of farming. We also visited a railway crossing and the gate keeper explained how the signal at railway crossing works. A month ago, they were taken in a train to Velankanni and had seen many railway crossings on the way. So they were interested to know more about railway crossings.



Children interacted with farmer to get to know about paddy cultivation.



Bouquet - Project work for EVS lesson




How a Railway crossing works

# Experience Sharing

**Classroom challenge**

In my class, there were students from multiple grades (class 1, 2 and 3) and it was a tough task to grab their attention. Initially, I started teaching them like I would have normally taught a class of 30. But I realized that when I teach class 1 and ask them questions, students of class 2 and 3 respond faster as they have already learnt the lesson. While teaching class 3, younger students would get bored and distracted. That is when it struck me that three different age groups needed to be handled separately. I had to do change my strategy to get their attention and make them sit in their respective places. So I decided to use singing and dancing as an energizer to draw their attention and make them concentrate in class.

**Planning and preparation**

One day, the children told me that there was music in the computer and asked me to play it. I played it and they enjoyed listening to music and after 10 minutes when I asked them to focus on their lessons, all except one did. So I thought of using this as a strategy in class. I begin the day with songs and make them sing and dance and then start teaching.  It initially started with movie songs and then gradually moved to cartoon songs from Chota Bheem and Dora and then songs from the text book. Singing and dancing is a good activity to channelize their energy and it helped us stay fresh throughout the day.

**What happened in class**

Though it started from cinematic songs, I slowly brought in textbook songs as well. For instance, there is a rhyme in the textbook that goes 'Brush, Brush, Brush your teeth….' This is a rhyme on personal hygiene and daily routine. I begin this song with actions and follow it up with a conversation on the importance of personal hygiene. This is how the learning process began in my class. I used "hello English" cds, which has songs for children.

**Changes seen in class**

Once I did the things which they enjoyed doing, they started listening to me. Music and dance removed the fear factor in the children and the teaching environment became a joyful one. There was a lot of change in the students attitude as well. Students started sitting in their respective places, participating in classroom activities and responding to my questions. Students started writing in four line notebooks and brought materials for projects. They completed tasks given to them and even finished a project work.

I developed a good rapport with my children. I usually never beat children but I sensed that they were initially scared of a teacher. with this activity, my children started opening up to me and I got an opportunity to know each of my student personally. Students even brought some local craft work done by them – toys made of coconut shells to show them to me.

We create TLMs and use various strategies to make the children understand a lesson. But I learnt that beginning a day with enthusiasm and channelizing children's energy by making them sing and dance also does wonders. It sets up a positive and energetic mood and helps in classroom proceedings. Once they started listening to me, I could start teaching them and handle multiple grades. To handle multiple grades, I first taught the senior classes – class III and II and assigned them some work and then attended to class I. This prevented the seniors from calling out answers while I taught the juniors.

I took the children to sea-side and nearby fields. It was the first time the students went out from school. Even though these children are used to playing in the beach and working in the fields, a field trip was a new experience for them. When we took them to these places and showed them different trees, plants and shells they were excited and learned a lot. I felt that such visits organized for providing experiential learning open up new dimensions on learning in the students' life.

**Way forward**

I have got new ideas from Teachers' Circle like using drawing to teach vocabulary and using craft in primary classes. I want to try these methods in my class in the coming year and I hope I will get new ideas from other teachers next year as well.

# Enhancing reading skills Through Visual Medium



K. Adirai
GPS, Kurusukuppam.

Previous School :
GPS, Kirumampakkam

Student strength – 200
Teacher strength – 12

**Key areas of interest:**

- Developing reading skill through art work
- Organising School cultural activities
- Helping children participate in drawing competitions
- Organising Science exhibitions

**Last years' experience:**

- We have set up a reading corner in our school and it was a wonderful experience. It has generated a lot of interest among students and we have seen improvement in their reading ability.
- I wrote English lesson ideas for Class 5 in Thisaimaani Magazine. We tried those ideas in class and then discussed solutions for some of the challenges faced in class.
- I have tried a few new strategies like comic book strips and breaking lengthy prose into short meaningful chunks in my class last year.



*Reading corner in our school*

## Experience Sharing

**Class room challenge: Developing reading skill**

Visuals give cues for the children to comprehend a passage (a picture is worth a thousand words). English lessons in class five are too lengthy and wordy and visuals are very limited. So that makes it difficult for children to read the text. English can be made more exciting if we combine the text with interesting visuals. It will also give slow learners an opportunity to engage in class. Since I am deeply interested in drawing I tend to use more of it in class and I thought of creating visuals to make reading easier for my children.

**Approach Used:**

**Pre-lesson activities:**

- List out and teach the frequently used words through sight word charts and display it in class.
- Use simple stick figures to teach action words and pronouns.
- Use smilies to teach emotions.
- Use drawings to teach prepositions and new vocabulary.



branches spread out like strong arms.

This tree was the home of a flock of wild geese. They felt safe there. One of the geese was a wise old bird.

He noticed a small creeper at the foot of the tree. He spoke to the other birds about it.

"Do you see that creeper?" he said to them. "Let us destroy it". "Why must we destroy it?" asked the geese in surprise. "It is so small. What harm can it do?" "My friends," replied the wise old bird, "that little creeper will soon grow. As it creeps up this tree, it will become thick and strong."

